18th January 1964] [Mr. Speaker]

The Address of the Governor to the Madras Legislature on the 16th January 1964 is a statement of policy of the Government of Madras. It has been drafted by the Government and read by the Governor. The discussion should therefore be on the matters referred to in the Address. It is also difficult to separate matters which are not referred to. Discussion is therefore allowed on matters which are not referred to by bringing them in the form of amendments.

In Madras also we have Rules regulating the debate on the Governor's Address. Rule 7 of the Madras Legislative Assembly Rules states that the rules of debate relating to Government Motions shall apply *mutatis mutandis* to the debate on the Governor's Address. Rule 67 states among other things that a member while speaking must not reflect on the conduct of the Governor and that the Governor's name should not be used for the purpose of influencing the debate. Subject to this, the members may praise or criticise the administrative policy contained in the speech and also any other matters raised by amendment to the Motion of Thanks and that they should not criticise the Governor.

III—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, While thanking the Governor for the address that he has delivered to the Joint Session of the Legislature on the 16th January 1964, I would like to say a few words. 9-30 a.m.

The uneasiness and difficulties felt by the agriculturists are to a great extent today being reflected in their day-to-day agricultural operations. Mainly Sir, the rural economy has not improved to the extent that we expected and the rural indebtedness has increased and the agriculturists are faced with indebtedness to a great extent. This has risen by 200 to 300 per cent. Today, the agriculturists are feeling a sort of nervousness and uneasiness. The Planners and Executors of the Five-Year Plans have not given top priority for all these agricultural operations. They have not given their due share in this respect. Now Sir, under the Panchayats Act, Panchayat Unions have been constituted. In the preamble of the Panchayats Act, it has been stated that to create incentive to the agricultural production, Panchayat Unions have been constituted. But today, it has not served the purpose. Panchayat Unions have been entrusted with certain subjects like Elementary Education, formation of roads and the welfare of the villages. These could have been done by entrusting the work to the respective departments. Regarding agricultural production much has not been achieved by the Panchayat Unions. The Extension Officers, who have been entrusted with the work of creating a sort of incentive to the agriculturists, are not functioning well. By constituting Panchayat Unions, agricultural production has not increased in any way.

[Sri C. Chiranjeevulu Naidu] [18th January 1964

Today, Sir, the agriculturist does not get any assistance from the Panchayat Unions and the Panchayat Unions have not done their duty by providing amenities to the agriculturists.

Regarding the relations between Co-operative Societies and the agriculturists, I would like to say a few words. Co-operative Societies are charging $7\frac{1}{2}$ per cent on the loans that are being advanced to the agriculturists and whenever there was any default in payment, the interest is charged at $12\frac{1}{2}$ per cent. I am not able to understand as to how it is beneficial to the agriculturists. The agriculturists are at the mercy of the pawnbrokers and marvaris. The agriculturists are being penalised by the Co-operative Institutions by charging 12-1/2 per cent interest. Definitely this rate of interest is higher when compared to the admissible rate of $5\frac{1}{2}$ per cent. Today, Central Co-operative Banks are charging $7\frac{1}{2}$ per cent. For getting the mid-term loan, the agriculturists have to pay a share capital of 10 per cent and fixed deposit of 10 per cent and also get encumbrance certificate. As the villages are covered under the Full Finance Scheme, the agriculturists have to look to only Co-operative Societies. This is the position of agriculturists in the villages today. In the matter of getting patta transfers and sub-divisions, lot of difficulties are being experienced by the ryots in the Taluk Office and Collector's Office. I request the Government to take proper steps to do the needful in this regard.

For constructing a motor shed or a small shed or for minor repairs, the agriculturists are not able to get a bag of cement. Recently, we have seen a Price Control Order. We are prepared to accept the Price Control Order, provided the commodities required by the agriculturists were given to the ryots in a proper way and proper perspective. The villagers have been neglected so far as the distribution of the required commodities are concerned They were not only neglected but have also been deprived to a great extent. They should be given due and proper consideration and their grievances must be properly heard and a machinery should be set up to see that they get their equal share.

Regarding the transferred personnel in the added territories, we very often see that laws are being extended to the Added Territories that have come from Andhra Pradesh. Piecemeal extension of laws may be avoided and the whole extension of laws may be adopted and the laws in that area may be brought in conformity with those in force in Madras State. Several times, I have mentioned about the integration of services of the transferred personnel. So far, no steps have been taken to integrate their services. Their services and emoluments are affected on account of this. I request that this may kindly be considered and early action taken in this matter. With these few words, I resume my seat. Thank you, Sir.

திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின்மீது நேற்றைய தினம் என் மதிப்பிற்குரிய கனம் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் அவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அரசியல் சட்டத்தை

18th January 1964] *[திரு. க. ர. நல்லசிவம்]*

எரிப்பது சம்பந்தமாக குறிப்பிடும்போது அவர்களுக்கு இன்னும் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதே சமயத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தை பூர்ணமாக மதிக்கக் கூடிய நம்மைப் போன்றவர்கள் மொழி சம்பந்தமான ஷரத்துக்களை எந்தளவு பரிபூர்ணமாக பேணிப் பாதுகாக்கும் முறையில் நாம் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டம் 345-வது பிரிவுப்படி மாநில அரசாங்கங்கள் தங்கள் மொழிகளைத் தீர்மானித்ததற்குப் பின்னால் மாற்றிக் கொள்வது சம்பந்தமாக கூறப்படுகின்றது. அந்த அடிப்படையில் நம் மாநிலத்திலும் 1956-ல் தமிழை ஆட்சி மொழியாக்கி சட்டம் இயற்றியிருக்கிறோம். அத்துறையில் இன்று என்ன நடக்கிறது என்று பார்த்தால் படிப்படியாக பஞ்சாயத்து போர்டுகள், பஞ்சாயத்து யூனியன்கள், சர்க்கார் காரியாலயங்களில் அங்கு ஒன்று இங்கு ஒன்று என்று முன்னேறிக் கொண்டிருக்கிறோமே தவிர அச்சட்டம் நிறைவேற்றியதற்குப் பின்னால் வேகமாக தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்திருக்கிறோமா என்றால் வெட்கப்படத்தான் வேண்டும். இன்று பாராளுமன்றத்தில் மொழித் துறை சர்ச்சை இருக்கிறது என்றால் அது நாம் ஓரளவு பொறுத்துக் கொள்ளக் கூடியதுதான். ஆட்சிமொழியாக ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் பல்வேறு மொழிகள் பேசக் கூடியவர்கள் அங்கிருப்பதால் அவர்கள் தங்கள் மொழி மீதுள்ள பற்று காரணமாக ஒரு பொது மொழியை ஏற்றுக் கொள்வதில் உள்ள கஷ்டத்தை நாம் ஓரளவு புரிந்து கொள்ளலாம். சட்டசபைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ராஜ்யத்திலும் தாய் மொழியில் காரியங்களைச் செய்வதில் என்ன முட்டுக்கட்டை இருக்கிறது? நாம் இங்கும் சரி, வெளியிலும் சரி தமிழ் பற்றி பெருமையாகப் பேசிக் கொள்கிறோம். திருவள்ளுவர் படத்தை திறந்து வைக்கப் போகிறோம். நம் தொன்மையான மொழி பற்றி பெருமையாகப் பேசுகிறோம். அந்தத் தமிழில் சட்டசபை நடவடிக்கைகளை நாம் நடத்த முடியவில்லை என்றால் அது வெட்ககரமான விஷயம். எவ்வளவு ஆண்டுகளில் ஒரு மொழியைப் பயன்படுத்தவேண்டுமென்று நினைக்கிறோமோ அதற்குள் அதைப் பயன் படுத்த வேண்டும். எவ்வளவு காலத்திற்கு ஆங்கிலத்தை வைத்துக் கொண்டிருக்கப் போகிறோம்? மத்திய ஆட்சிமொழி பற்றி நான் அதிகம் குறிப்பிட விரும்பவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்று அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிக்கப் போகிறோம் என்று சொன்னால் அதற்கு ஆளும் கட்சிதான் ஓரளவு காரணம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ராஜ்ய அளவில் தமிழை தேவையான இடத்தில் புகுத்தியிருந்தால் நிச்சயமாக இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவு இருக்கவே இருக்காது என்று நாம் குறிப்பிட விரும்புகிறேன். நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு மத்திய சர்க்கார் சொல்லக்கூடிய அளவில் மொழி விஷயத்தில் அனேக குழப்பங்கள் இருக்கின்றன. ஆங்கிலம் போகின்ற இடங்களில் எல்லாம் இந்தி வரவேண்டும் என்றுதான் எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையாகவே தாய் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்ற

எண்ணத்தில் மாநில சர்க்கார் நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. அரசியல் சட்டத்தில் 345-வது பிரிவின்படி நமக்கு முழுமையான நம்பிக்கை இருந்தால் நிச்சயமாக தமிழைப் பொறுத்தவரை நமது சர்க்கார் எல்லாத் துறைகளிலும் தீவிரமான முயற்சிகள் எடுத்திருக்கவேண்டும். அந்த முறையில் நமது சர்க்கார் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது மிகவும் சந்தேகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. அதிலும் குறிப்பாக தமிழை தாய்மொழியாக ஏற்றிருக்கும் நாம், தமிழ் மொழியை கொண்டு வர வேண்டும் என்று நினைக்கிற நாம், குறிப்பாக சட்டசபையில் முக்கியமாக முழுக்க முழுக்க கொண்டு வரவேண்டும். சட்டசபையைப் பொறுத்த வரையில், நான் யாரையும் புண்படுத்தவேண்டும் என்ற நினைப்பில் சொல்லவில்லை. இந்த இலாகாவிலிருந்து சட்டசபை அங்கத்தினர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்களைப்பற்றி "Who is who" என்ற புத்தகம் போடப்பட்டிருக்கிறது. அதிலுள்ள குறிப்புக்களை வைத்துக்கொண்டு பார்த்தால், ஆங்கிலத்தை புரிந்து சட்டத்தை இயற்றுகின்ற திறமையுள்ளவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டுப் பார்த்தால் 25, 30 பேர்கள் தான் இருக்கிறார்கள். நான் யாரையும் புண்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தால் சொல்லவில்லை, இருக்கின்ற யதார்த்த நிலைமையை சொல்லுகின்றேன். நான் சொல்லுவதை மற்ற அங்கத்தினர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஜனநாயகம் என்று சொன்னால் பெரும்பான்மையான வோட்டுகளை வாங்கி இங்கு வந்துவிட்டால் மட்டும் போதாது. இங்கு மக்களுக்காக போடப்படுகின்ற, இயற்றப்படுகின்ற சட்டங்களைப்பற்றியும், அதிலுள்ள விஷயங்களிலும் பங்கெடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கவேண்டும். அப்போது தான் உண்மையான ஜனநாயகத்தை வளர்க்க முடியும். அதல்லாமல் சோஷியலிஸம், மேலும் சோஷியலிஸத்திற்குப் பின்னால் ஒரு வார்த்தையை இப்போது காங்கிரஸ் சேர்த்துக்கொண்டிருக்கிறது, இவற்றினால் என்ன பலனை நாம் காணப்போகிறோம்? உண்மையிலே நல்ல முறையில் ஜனநாயகம் செயல்பட வேண்டும் என்றால் மொழி தொல்லையில் நல்ல விடுதலை இருக்கவேண்டும். மத்திய மொழியாக எதுவாக இருந்தாலும், மாநிலங்களைப் பொறுத்தவரையில் தாய் மொழியைக் கொண்டு வந்தாக வேண்டும். அந்த அளவிலே நம்மிடையே முழுக்க முழுக்க தமிழைக் கொண்டு வந்தாகவேண்டும். இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்லலாம், கேட் என்பதற்கு கதவு என்று எப்படி சொல்வது, இன்னென்ன வார்த்தைகளுக்கு என்ன சொல்வது என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் இந்த விஷயத்தில் மனம் இருந்தால் வழி பிறக்கும். மொழி சிக்கல்களைப் பொறுத்தவரையில் அந்தந்த ராஜ்யங்கள் அந்தந்த ராஜ்யத்திலுள்ள தாய் மொழிகளைக் கொண்டு வந்துவிட்டால், மத்திய மொழியைப்பற்றி பெரிய தகராறுகள் வருவதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் இராது. மத்திய மொழியைப் பொறுத்த அளவில், மாநில மக்களை எல்லாம் பெரிய அளவில் இணைத்துவிட முடியாது. இதை சர்க்கார் மனப்பூர்வமாக உணர்ந்து செயல்படவேண்டும். இந்த நாட்டில் உண்ண உணவு வேண்டும், உடுக்க உடை வேண்டும் என்று பேசுவதற்குப் பதிலாக

18th January 1964] [திரு. க. ர. நல்லசிவம்]

எங்கு பார்த்தாலும் மொழி பற்றிய பேச்சைத்தான் கேட்கிறோம். மாணவர்கள் மொழியின் பேரால் கிளர்ச்சி நடத்துவதைப் பார்த்து உண்மையிலே வருத்தமாக இருக்கிறது. நாட்டில் பொருட்களின் விலைவாசி எல்லாம் ஏறியிருக்கிறது. பொருள்களின் விலைகள் எல்லாம் உயர்ந்து இதைப்பற்றிய கிளர்ச்சிகள் நடத்த வேண்டிய இந்த நாட்களில் மொழிக் கிளர்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் உண்மையிலேயே நாம் இன்றும் முன்னால் போவதற்கு நமக்கு நாமே தடை செய்து கொண்டிருக்கிறோம் என்றுதான் பொருள். ஆகவே சர்க்கார் தயவு செய்து இந்த விஷயத்தில் அக்கரை எடுக்கவேண்டும். மத்திய மொழி விஷயத்திலும் நாம் இணைந்துதான் ஆகவேண்டும். ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாறுவதற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறுவதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று சொல்ல லாம். எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. ராஜ்யங்களைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்திலிருந்து தாய்மொழிக்கு மாற்றினால் நிச்சயமாக இப்போது இருந்து வருகின்ற தகராறுகளை குறைத்துவிட முடியும். அதல்லாமல் ஏதோ போராட்டம் நடத்துகின்றவர்களை கைது செய்து ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் தண்டனை கொடுத்துவிட்டால் மட்டும் மொழிக் குழப்பம் நின்றுவிடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய ஆட்சி மொழியிலும் எல்லா அங்கத்தினர்களுக்கும், இந்த மாநிலத்திற்கும் அக்கரை இருக்கவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் மத்திய ஆட்சி மொழி பற்றி தங்களுடைய கருத்து என்ன என்பதை தெரிவித்தால் நல்லது.

திரு. க. ர. நல்லசிவம்: இந்த விஷயத்தில் தெளிவு, களிவு, சரிவு இவைகளை எல்லாம் பார்த்துத்தான் இந்தி இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்திலும் இந்தி இருக்கவேண்டும் என்று இருக்கிறது, அதை நாங்கள் மறுக்கவில்லை. நமது தேசத் தந்தை அவர்களே, இந்த நாட்டில் நமது நாட்டு மொழி தான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதல்லாமல் தனியாக இந்தி மீது பற்றோ பாசமோ எங்களுக்கு கிடையாது. பொதுவாக மொழி விஷயத்தில் சில எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் ராஜ்யங்களைப் பொறுத்தவரை யில், அதிலும் குறிப்பாக நம் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழைக் கொண்டு வருவதில் என்ன சிக்கல் இருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். பக்கத்தில் கேரளம் இருக்கிறது. நம் நாட்டைவிட ஆங்கிலம் படித்தவர்கள் அங்கு அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மொழியை எந்த அளவில் பெரு வாரியாக கொண்டு வரவேண்டுமோ அதற்குத் தகுந்தவாறு நட வடிக்கை எடுத்து வருகிறார்கள். குறிப்பாக வருங்காலத்தில் சட்டசபையில் குறிப்பிடக்கூடிய விஷயங்கள் எல்லாம், சட்டசபை

[திரு. க. ர. நல்லசிவம்] [18th January 1964

நடவடிக்கைகள் எல்லாம், சர்க்கார் நடவடிக்கைகள் எல்லாம் தமிழிலேயே இருக்கவேண்டும். கல்லூரிகளில் கொண்டுவர வேண்டியது வேறு விஷயம். சிக்கல் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தால் எவ்வளவோ சொல்லிக்கொண்டிருக்கலாம். அதை எல்லாம் விட்டுவிட்டு சர்க்கார் முக்கியமாக இந்த விஷயத்தில் அக்கரை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதிலேயே என் நேரத்தை முழுவதும் செலவழிக்காமல் பிற சில விஷயங்களுக்குச் செல்லுகின்றேன்.

விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது என்ற புகார் எந்த இடத்திலும் இருந்து கொண்டிருக்கிறது. விலைவாசியைப்பற்றிச் சொல்லும்போது, அதை கட்டுப்படுத்தியாக வேண்டும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. சாதாரணமாக ஜனங்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைத்தாகவேண்டும் என்பதில் அக்கரை இருக்கிறது, அதற்காக விலைகளை கட்டுப்படுத்தியாகவேண்டும் என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் விவசாயிகளினுடைய நிலைமை என்ன என்பதையும் சர்க்கார் எண்ணிப் பார்க்கவேண்டும். விவசாயிகள் அல்லாத எல்லா தொழிலாளர்களும் இன்றைக்கு ஸ்தாபன ரீதியாக ஒன்றுப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் ஒரு பெரிய வேடிக்கை என்னவென்றால், ஆலையில் உற்பத்தியாகின்ற சர்க்கரைக்கும், அதற்காக கொடுக்கப்படும் கரும்புக்கும் விலை நிர்ணயங்கள் எல்லாம் இருக்கும்போது, குடிசைத் தொழில் அடிப்படையில் நடத்தப்படும் சர்க்கரைத் தொழிலுக்கு எந்த விதமான விலை நிர்ணயமும் இல்லாமல் இருக்கிறது. இப்போதுள்ள நிலைமையில் நாட்டுச் சர்க்கரையை மாகாணத்திற்கு மாகாணம் ஏற்றுமதி செய்வதற்கு தடை இருக்கிறது. விலையை கட்டுப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த தடை போடப்பட்டிருந்தாலும்கூட, இதன் காரணமாக இதில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கும் நஷ்டம் ஏற்படாத வகையில் ஒரு குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கவேண்டும் என்பது தான். ஏதோ சர்க்கரையினுடைய விலையை குறைத்தால் ஜனங்களிடத்தில் தங்களுக்கு நல்ல பெயர் ஏற்படும் என்ற எண்ணத்தில் மட்டும் தங்கள் கொள்கையை சர்க்கார் வகுத்துக் கொள்ளக்கூடாது.

இன்னொன்று, உணவு தானியத்தை பொறுத்தவரையில் சர்க்கார் ஒரு குறிப்பிட்ட விலைக்கு, மில்கள் மூலமாக தான்யங்களை வாங்குவது என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். இதன் காரணமாக ஏதாவது விலை குறைந்து கொண்டு போகுமானால் நெல் சாகுபடி செய்துகொண்டிருக்கின்றவர்கள் எல்லாம் வேறு தான்யங்களை சாகுபடி செய்ய முன்வருவார்கள். ஏற்கனவே பலர் வியாபார பொருட்கள் சாகுபடியில்தான் இறங்கிக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு சாதாரண விவசாயி. சோஷியலிஸ்ட் என்ற முறையில் ஜனங்களுக்கு குறைந்த விலையில் தான்யங்கள் கிடைக்கவேண்டும் என்று விரும்புகிறவன் தான். இருந்தாலும் நெல் சாகுபடியாக

18th January 1964] [திரு. க. ர. நல்லசிவம்]

வில்லை என்றால் யார்தான் அந்த சாகுபடியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பார்கள். அதே நேரத்தில் வெளிநாட்டிலிருந்தும் இறக்குமதி செய்ய முடியாது. இப்போதுள்ள நிலைமையில் உணவு உற்பத்தி போதுமானதாக இல்லை. விவசாயத்திற்கு தேவைப்படுகிற, உரம், மற்றுமுள்ள கருவிகள் இவற்றின் விலைகள் எல்லாம் கட்டுப்படியாகக்கூடிய நிலையில் இருந்தால்தான் உணவு உற்பத்தியில் ஈடுபடுவார்கள். இல்லையென்றால், மஞ்சள், கரும்பு, வாழை போன்ற வைகளை சாகுபடி செய்வதில் ஈடுபடுவார்கள். அப்படி வரும்போது 'க்ராப் கண்ட்ரோல்' கொண்டு வரவேண்டியிருக்கும். இத்தனை ஏக்கர்களில்தான் இன்னின்ன பயிர் சாகுபடி செய்யவேண்டும் என்கிற 'பயிர் கட்டுப்பாடு' கொண்டு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடும். இந்த விஷயத்தில் மாநில சர்க்கார் மட்டுமல்லாமல், மத்திய சர்க்காரும் சேர்ந்துதான் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். ஆலைப் பொருட்களுக்கு திட்டவட்டமாக விலைகளை நிர்ணயித்திருப்பது போன்று, விவசாய பொருட்களுக்கும் குறிப்பிட்ட விலையை நிர்ணயிக்கவேண்டும், அதுவும் வேகமாக இதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது, தண்ணீர் வசதியைப் பொறுத்த வரையில், இந்த ராஜ்யத்தில் பெரும்பாலான திட்டங்கள் எல்லாம் கொண்டு வந்தாய் விட்டது, இன்னும் கொஞ்சம் தான் இருக்கிறது என்று கவர்னர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கீழ்பவானித் திட்டத்திலிருந்து ஒரு லட்சம் ஏக்கர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்றிருக்க இப்போது 50 ஆயிரம் ஏக்கர்களுக்குத்தான் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று பார்த்தபோது, இங்குள்ள தண்ணீரை காவேரி பாசனத்திற்காக கொடுத்திருப்பதாக தெரிகிறது. ஆகஸ்ட் ஒன்றாம் தேதியிலிருந்தே தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக கீழ்பவானி பாசனத்தில் சாகுபடி செய்யவேண்டிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் சாகுபடி செய்யாமல் தரிசாகப் போட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலப்பையைத் தூக்கி ஓரத்தில் போட்டு பட்டினி கிடக்கும் நிலையில் இருக்கிறார்கள். சர்க்கார் எப்படி நினைத்தாலும் கவலையில்லை. ஆனால் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். வருஷத்தில் 12 மாதங்களில் 4 மாதங்களுக்கு தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அந்தத் தண்ணீரும் இல்லாமல் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்தான் விவசாயம் செய்யவேண்டும் என்ற நிலை இருந்தால் . . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கீழ்பவானித் திட்டம் உருவாக்கப்பட்டபோது அந்த அணையில் எவ்வளவு தண்ணீர் தேக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டதோ அதை விட இரட்டிப்பு மடங்கு தேக்கப்படுகிறது. கீழ்பவானியில் தண்ணீர் எப்போதும் குறையவில்லை.

[18th January 1964

திரு. க. ர. நல்லசிவம் : அப்படியானால் 50,000 ஏக்கர்களுக்கு ஏன் தண்ணீர் இல்லை என்று கேட்க விரும்புகிறேன். காவிரிக்குத் தண்ணீர் கொடுத்ததால்தான் தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. வருகின்ற காலத்தில் இதைப்பற்றித்தான் நாங்கள் நடவடிக்கை எடுக்கப் போகிறோம். இந்த நிலை கூடாது. காவிரி காய்ந்து போகவேண்டும் என்று சொல்லவில்லை. காவிரியில் தண்ணீர் இல்லையென்றால் கீழ்பவானிலிருந்து பாய்ச்ச முடியுமே தவிர கீழ்பவானியில் தண்ணீர் இல்லாத போது காவிரியிலிருந்து வர முடியாது. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கல்யாணம் ஆகாத வரையில் ஒருவனுக்கு பெண்ணைப் பற்றியோ அல்லது மனைவியைப்பற்றியோ தெரிந்திருக்க முடியாது. ஆனால் கல்யாணம் ஆன சில காலத்திற்குப் பிறகு மனைவியைப் பிரித்து சிங்கப்பூரிலோ அல்லது மலேயாவிலோ கொண்டு வைத்து விடுவது என்பது மிகவும் கொடுமையானது என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (சிரிப்பு). ஆகவே, சர்க்கார் இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு காரியங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வருகிறேன்.

அந்த உரையில் பல மகத்தான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று கவனர் பெருமான் சொல்லியிருக்கிறார்கள். அது ஒத்துக் கொள்ளக்கூடிய விஷயம்தான். இருந்த போதிலும் அரசாங்கத்தில் செலவிடும் பணத்திற்கு ஈடாகப் பலன் கிட்டவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

தற்போது, இந்த உணவு உற்பத்திக்காகப் பல டிப்பார்ட்மெண்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதாவது எஸ்.எம்.ஐ. பி., ஃபுட் ப்ரொடக்ஷன் போன்ற டிபார்ட்மெண்ட்டுகளில் அவர்கள் வேலை களில் பலர் கால தாமதமின்றிச் செய்து வந்தால் நல்ல முன்னேற்றம் காணலாம். அவர்களை ஊக்குவித்து காலதாமத மின்றி வேலைகளைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஸ்மால் ஸேவிங் ஸ்கீம்ஸ் மறுபடியும் கொண்டு வரப்பட் டுள்ளன. இதில் அநேகமாக இன்ஸ்டிட்யூஷன்கள்தான் சப்ஸ்க்ரைப் செய்கிறார்களே தவிர, கிராமப் புறங்களில் உள்ள கிராம மக்களுக்குப் பலன் அளிப்பதாகத் தெரியவில்லை. கிராம மக்களுக்குப் பலன் அளிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டி, மில்லர்ஸ், டீலர்ஸ் ஆகியவர்களிடம் ப்ரொக்யூர்மெண்ட் செய்ய ஏற்பாடு செய் யப்பட்டிருப்பதாக உரையில் காணப்படுகிறது. மில்லர்ஸ் என்பவர் கள் தங்கள் மில்களுக்குக் கொண்டுவரும் சரக்கை அரிசியாகச் செய்து கொடுப்பதுதான் அவர்கள் தொழிலேயொழிய அவர்களிட

18th January 1964] [திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்]

லிருந்து ப்ரோக்யூர் செய்வது, சாத்தியமில்லாத காரியம். இப்போது மில்லரிடமிருந்து ப்ரோக்யூர்மெண்டு ஆரம்பித்தது முதல் சில மில்காரர்கள் தாங்கள் ப்ரொக்யூர்மெண்ட்டுக்கு அரிசி கொடுக்காத நிலையில் இருப்பதால், மில்களைக்கூட மூடிவிட்டிருக்கிறார்கள்என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மேலும், விவசாய அபிவிருத்திக்காக கிராம சேவக்குகளை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் நியமனம் செய்திருக்கிறார்கள். கிராம சேவக்குகளுக்கு அநேக வேலைகள் கொடுத்திருக்கிற காரணத்தினால் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாமல் இருக்கிறார்கள். அரசாங்கம் அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மைனர் இர்ரிகேஷன் ஸ்கீம்கள் அதிகமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளன. அந்த ஸ்கீம்களை இப்போது ப்ரொபோஸ் செய்தால் வருஷக் கணக்கில் இன்வெஸ்டிகேஷன் முதலியவைகள் செய்து முடிவதில்லை. அதற்காக இந்த டிபார்ட்மெண்ட்டார் பரிசீலனைகளை உடனுக்குடன் செய்து அந்த ஸ்கீம்களைக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பிற்பகுதியான மாவட்டங்களில் உள்ள மேஜர் ஸ்கீம்களை எடுத்து அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த ஆண்டில், ஐந்தாண்டுத் திட்டத்தில், சேலம் மாவட்டத்தில் ஒரு திட்டமாவது நிறைவேற்றக் கொண்டுவரவில்லை. சேலம் மாவட்டத்தில் மூன்று திட்டங்கள் தற்போது இருக்கின்றன. சின்னாறு திட்டம், தொப்பையாறுத் திட்டம், வாணியாறுத் திட்டம் என்று சொல்லக் கூடிய திட்டங்கள் அவை. அரசாங்கத்திற்குக்கூட அதிகப்பணம் செலவில்லை. சுமார் 150 லட்சம் ரூபாய்தான் அந்த மூன்று திட்டங்களுக்கும் செலவாகும். இந்தத் திட்டங்களை நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலாவது சேர்த்து அமலாக்க அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்ஸ் என்று ஆங்காங்கு நிறுவுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை 4-5 மைல்கள் விஸ்தீர்ணத்திற்கு ஒரு கடை என்று வைத்தால் பொது மக்களுக்கு அவ்வளவு சவுகரியமாக இருக்காது என்று நான் நினைக்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் தற்போது கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அத்தகைய ஒவ்வொரு சங்கத்திற்கும் இந்த ஸ்டோர்ஸ் அலுவல்களைக் கொடுத்து நடத்தினால் செவ்வனே நடக்கும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

சிறு கைத்தொழில்கள் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன என்று அறிக்கையில் காணப்படுகிறது. அத்தகைய தொழில்களை இன்னும் ஊக்குவிக்கும் முறையில் அவர்களுக்கு பணம் அட்வான்ஸ் செய்து அந்தக் கைத்தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த ஓல்ட் ஏஜ் பென்ஷன் ஸ்கீமுக்கு இந்த ஆண்டில் 135 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்று அறிக்கையில் உள்ளது. இருப்பினும் அது 60-65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் உபயோகமுள்ளதாக இருக்கிறது. குருடர்கள், நொண்டிகள் போன்று ஒரு வேலையும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறவர்களுக்கு வயது நிர்ணயமும் இல்லாமல் இந்த பென்ஷன் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊரிலும் பிச்சைக்காரர்கள் தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக வேலூரில் பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸில் ஏறி பிச்சைக் கேட்கிறார்கள். இந்த மாதிரியான நிலைமையைப் போக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பை அளித்ததற்காக நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். துரைப்பாண்டி:** தலைவர் அவர்களே கவர்னர் பெருமான் உரையில் சோஷலிஸ சமுதாய அமைப்புக்கு வழி வகை செய்திருப்பதாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்த உரையில் வேறு எந்த விதமான விளக்கமும் பார்க்க முடியாது. அதைப் பற்றி எதிர் பார்க்கவும் முடியாது. அரசாங்கம் வருகிற பட்ஜெட் மீட்டிங்கில் ஒவ்வொன்றையும் தெளிவாக எடுத்துரைப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இந்தியைப் பற்றி பொதுமக்கள் மத்தியில் பெரிய எதிர்ப்பு தொனியை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும். அரசியல் நிர்ணய சட்டம் அத்தனையும் ஒத்துக்கொள்கிறோம். அதன் திட்டத்தையும் ஒத்துக்கொள்கிறோம். அந்தத் திட்டத்தின்படி நாட்டு மக்களை அன்றிலிருந்து இன்று வரையில் இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள், பேக்வேர்ட், ஃபார்வேர்ட் என்று. நாம் இன்றைய திட்டத்தின்படி பேக்வேர்டாக இருக்கிற எல்லோரையும் எல்லா மக்களையும் ஃபார்வேர்டாக ஆக்குவதற்கு என்னென்ன ஆக்க வேலைகள் செய்யவேண்டுமென்பது

10-00 p.m. தான் இன்றைய சோஷலிஸத் திட்டம். அந்தத் திட்டத்திற்கு அடிப்படையாக இருப்பது கல்வி. கல்வி இருந்தால்தான் பொருளாதாரம் முன்னேறும். அதற்காகத்தான் அரசாங்கம் கல்விக்காக அதிகப் பணம் செலவழிக்கிறது. பழைய பழமொழி 'ஆடை உடையவன் அவைக்கு அஞ்சான், அறிவு உடையவன் படைக்கு அஞ்சான்' என்றெல்லாம் நாம் படித்திருக்கிறோம். அந்த அளவுக்கு அறிவு உடையவன், ஆடை உடையவன் யாராக இருந்தாலும் அவனைத்தான் நாம் முன்னேற்றம் அடைந்தவனாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். கல்வி உடையவனை 'பார்வேர்டு' என்று

18th January 1964] [திரு. என். துரைப்பாண்டி]

வைத்திருக்கிறார்கள். எந்தக் கல்வி என்றால், சமீபகாலம் வரையில் மக்கள் ஆங்கிலேயரால் ஆளப்பட்டு வந்ததால், ஆங்கிலம் அரசாங்க பாஷையாக அமைந்திருந்தது. ஆங்கிலம் தெரிந்தவர்களை 'ஃபார்வேர்டு' என்று வைத்தார்கள். அதன் காரணமாக ஆங்கிலம் அறிந்தவர்கள் உத்தியோகம் அத்தனையும் கைப்பற்றினார்கள். ஆனால், அவர்களோடு உடன் பிறந்தவர்கள், அவர்கள் இனத்தார் ஆங்கிலத்தை அறியாமல் இருந்ததால் அவர்களை 'பேக்வேர்டு' என்று வைத்தார்கள். உதாரணமாக நாடாரில் ஒரு பகுதி 'பேக்வேர்டு' என்று வைத்திருக்கிறார்கள், ஹரிஜனங்களில் 'பேக்வேர்டு' என்று வைத்திருக்கிறார்கள். இம்மாதிரியாக ஒவ்வொரு சமுதாயத்திலும் 'பேக்வேர்டு' என்று வைத்திருக்கிறோம். அதே சமயத்தில் அந்த சமுதாயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களை, கிறிஸ்தவ மக்களை 'ஃபார்வேர்டு' என்று வைத்திருக்கிறோம். காரணம் அன்று அவர்கள் ஆங்கிலத்தைப் படித்தவர்கள். பொருளாதாரத்தில் உயர்ந்திருந்து உத்தியோகம் பார்த்தவர்கள். ஆகவே, அவர்களை 'ஃபார்வேர்டு' என்று வைத்திருக்கிறோம். இவ்விதமான முறையில் அறிவு அதிகமாக வளர்கிறது. அதற்காக சர்க்கார் அதிகப் பணம் செலவழிக்கிறார்கள். அதேமாதிரியாக இன்று நாம் கூடியிருக்கிற இந்தச் சபையில் தேசிய மொழியாக 14 மொழிகளை ஒப்புக்கொண்டிருக்கிறோம். இந்தி, தேசிய மொழிகளான 14 மொழிகளில் ஒன்று. ஜனநாயக முறையில் அரசாங்கம் நடைபெறுகிறது. இந்திய தேசத்திற்கென்று ஒரு பாஷை வேண்டும் என்று எல்லோரும் ஆசைப்பட்டு, இந்தியை தேசிய மொழி என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். இது யாராலும் மறுக்கப்படவில்லை. இதை மறுப்பவர் இந்தியன் என்று கருதப்படமாட்டார். உலக அரசியலை எடுத்துக்கொண்டால், எல்லா நாடுகளை எடுத்துக்கொண்டாலும், தன் தன் தேசத்தில் எந்த மொழிகள் வழங்குகின்றனவோ அந்த பாஷையில் ஒரு பாஷையைத்தான் தேசிய பாஷையாக வைத்திருக்கிறார்கள். நம்மைவிட சிறு நாடாகிய இலங்கையில் அவர்கள் தாய் மொழியைத்தான் அரசாங்க மொழியாக வைத்திருக்கிறார்கள். ஜனநாயக அடிப்படையில் 14 மொழிகளில் அதிகமாக ஜனங்கள் எதைப் பேசுகிறார்களோ அதைத்தான் தேசிய மொழியாகக் கொள்ள முடியும். அப்படிப் பார்த்துத்தான் இந்தியை தேசிய மொழியாக வைத்திருக்கிறார்கள். அதிக மக்கள் இந்தி பேசுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. தனிப்பட்டு ஒவ்வொரு பாஷையையும் எடுத்துக்கொண்டால் அதிகமான பேர்கள் எந்த ஒரு பாஷையை பேசுகிறார்கள் என்றால், இந்தியைத்தான் பேசுகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது இந்தியை தேசிய மொழியாக வைப்பதற்கு என்ன தடை? அதில் என்ன தவறு இருக்கிறது என்று நான் கேட்கிறேன்.

நமது நண்பர்கள் சிலர் அன்று திராவிட நாடு அடைந்தே தீருவோம் என்று சொன்னார்கள். பிறகு அது வோட்டாலும் வராது, வேட்டாலும் வராது என்பதை உணர்ந்து, தேசத்தின் ஒற்றுமைக்காக அந்தக் கொள்கையை கைவிட்டுவிட்டார்கள். அதை நாம் வரவேற்கிறோம், அதுபற்றி நாம் மகிழ்ச்சி அடை

[திரு. என். துரைப்பாண்டி] [18th January 1964

கிறோம். இருந்தாலும் 15 ஆண்டுகளுக்குப் பின்னால் கைவிட்ட இந்தக் கொள்கையை முதலிலேயே கைவிட்டிருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும் என்பதை யோசிக்க வேண்டும். அந்தக் கொள்கையை விட்டுவிட்டு மக்கள் மத்தியில் எப்படிச் செல்லுவது என்று அவர்கள் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை வைத்திருக்கிறார்கள். யாருக்கும் சங்கடமாகத்தான் இருக்கும். இருந்தாலும், நாட்டு நன்மைக்காக இப்பொழுது அவர்கள் எடுத்திருக்கிற இந்தி எதிர்ப்பு போராட்டத்தை கைவிட்டுவிட்டால் நலமாக இருக்கும். 'பேக்வேர்டு' சமுதாயத்தை நாம் முன்னேற்றுவதற்கு தேசிய பாஷையை கற்பதுதான் சிறந்த முறை. அப்பொழுதுதான் அவர்களை 'ஃபார்வேர்டு' என்று ஒப்புக்கொள்வார்கள். இந்தி படிக்காதே என்று மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதின் காரணமாக, பிள்ளைகளுடைய இளம் பிஞ்சு மனதை களங்கப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு எதிர்காலத்தில் நாம் நல்ல வாய்ப்பு தேடிக்கொடுப்பது ஆகாது அம்மாதிரி பிரசாரம் செய்வது. மாணவர்கள்தான் வருங்கால சந்ததியர்கள். அவர்கள் பிற்காலத்தில் நாட்டு மன்னர்களாக ஆவதற்கு அவர்கள் என்ன செய்யவேண்டுமோ அதைத்தான் நாம் அவர்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். அந்த வழியில் தான் நாம் அவர்களை ஊக்குவிக்கவேண்டும்.

நேற்று காலேஜ் மாணவர்கள் ஒரு கூட்டம் போட்டுக்கொண்டு வந்தார்கள். அவர்கள் அம்மாதிரி செய்வதற்கு யார் பொறுப்பாளி என்பதை நாம் கொஞ்சம் யோசிக்கவேண்டும். அந்தக் காலத்தில் ஆங்கிலம் படித்தவர்களைத்தான் அரசாங்கம் 'பேக்வேர்டு' என்று ஒரு சிலர் சொல்லி வந்தார்கள். ஆனால், இன்று பார்த்தால் ஆங்கிலம் படித்தவர்களைத்தான் அரசாங்கம் 'போர்வேர்டு' என்று வைத்திருக்கிறார்கள். ஆகவே, நாம் முன் அறிவு உள்ளவர்களாக இருந்தால் இந்தி படிக்கவேண்டும். கல்லூரி மாணவர்களை இந்தி படிக்க வேண்டாம் என்று சொல்லுபவர்கள் இந்தி படிக்கிறார்கள். தலைவர்கள் மேடையில் ஏறி இந்தி படியாதே என்று பேசுகிறார்கள். ஆனால், அவர்கள் பையன்கள் இந்தி படித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைத்தான் 'ஃபார்வேர்டு' என்று சொல்லுகிறார்கள். இல்லாவிட்டால் 'பாக்வேர்டு' என்று கருத்தப்பட்டு இன்றும் தாழ்ந்தவர்களாக இருக்கிற நாம் என்றும் தாழ்ந்தவர்களாகவே இருந்துகொண்டிருப்போம். 'பேக்வேர்டு' என்று கருதப்பட்டு உபகாரச் சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கும் மாணவர்கள் அதிகமாக இந்தியை எதிர்த்து வருகிறார்கள் 'ஃபார்வேர்டு' என்று சொல்லப்படுகிற சமுதாயத்தோடு, தாழ்த்தப்பட்ட சமுதாயமும் முன்னேறவேண்டும் என்பதற்காக சர்க்கார் 'பேக்வேர்டு' என்று சொல்லப்படுகிறவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளித்து வருகிறார்கள். அவர்கள் அறிவை வளர்த்துக்கொள்வதற்கு தடையாக நாம் இருக்கக்கூடாது. மாணவர்கள்தான் பிற்கால சந்ததிகள். அவர்கள் நன்கு முன்னேற்றம் அடைய வேண்டும். கல்லூரிகளுக்கு எங்கள் ஊரிலிருந்து சில பையன்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய தாய் தகப்பன்மார்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும்கூட, கல்லூரிக்கு

18th January 1964] *[திரு. என். துரைப்பாண்டி]*

வந்தவுடன் காலரை தூக்கி வைத்துக்கொண்டு வாயில் சிகரட்டை வைத்து பற்றவைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் சில தலைவர்கள்தான். அவர்கள் தங்களுடைய கட்சியை பலப் படுத்துவதற்காக ஏதாவது ஒரு வழியைச் செய்ய வேண்டுமென்ப தற்காக இந்த முறையைக் கையாள்கிறார்களோ என்னவோ தெரிய வில்லை. இந்தி எதிர்ப்புக் கொள்கையை 15 ஆண்டுகளுக்கு பின்னால் கைவிடுவதைவிட இப்பொழுதே முன்னால் கைவிட்டு விட்டால், மிகவும் நலமாக இருக்கும். இந்தி படிக்காதே என்ற கொள்கையை 15 ஆண்டுகள் கழித்து கைவிட்டால் மத்தியில் இந்த 15 ஆண்டுகளில் தேசிய பாஷையாகிய இந்தியை படிக்காது இருந்த மாணவர்களின் கதி என்ன ஆகும்? அதை நாம் சற்று நினைத்துப் பார்க்கவேண்டும். நாம் அன்று 'பேக்வேர்டு' என்று கருதப்பட் டோம். அதே போல் என்றும் 'பேக்வேர்டு' என்று கருதப்படக் கூடிய நிலைமை வரும் தோழர்களே . . . (சிரிப்பு).

Mr. SPEAKER: This is not a public meeting.

திரு. என். துரைப்பாண்டி: மாணவர்களை அப்படித் தூண்டா மல் நல்ல முறையில் இந்தி படிக்க வேண்டும் என்று ஊக்குவிக்க வேண்டும். மாணவர்கள் நல்ல முறையில் படிக்கவேண்டும், வளர வேண்டும், வாழவேண்டும். அதற்காக சர்க்காரிலிருந்து ஸ்காலர் ஷிப் கொடுக்கிறார்கள். மாணவர்கள் இந்தியைப் படித்து பயன் பெறவேண்டும். பையன்கள் அத்தனை பேர்களும் படிப்பதற்கு ஆசை உள்ளவர்களாக இருக்கிறார்கள் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள், அவர்களை இந்தி படிப்பதற்கு ஊக்குவிக்கவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொண்டு . . .

கனம் சபாநாயகர்: 'உங்களை' என்றால் சபாநாயகர் என்று அர்த்தம். 'அவர்களைக் கேட்டுக்கொண்டு' என்று சொல்லுங்கள்.

திரு. என். துரைப்பாண்டி: என்று சபாநாயகர் மூலம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தி புகுந்துவிட்டால் தமிழ் கெட்டுவிடும் என்று சொல்லுகிறார்கள். இதை நாம் நன்றாக யோசிக்கவேண்டும். சுதந்திரம் அடைந்த பிற்பாடு நாம் தமிழைப் பற்றி பெருமையாகப் பேசுகிறோம். தமிழின் பெருமையைப்பற்றி நாம் உணரவேண்டும். மதராஸை எடுத்துக்கொண்டால் தமிழ் மக்கள் அன்று 'வாயப் பயம்' என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள் இன்று 'வாழைப் பழம்' என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரிதான் ஒரு இந்து தன்னை சொன்னார் 'அஞ்ஞான்' என்று. இப்படி சரியான வார்த்தைகளை தெரியாமல் இருந்தவர்கள் இன்றைக்கு நல்ல தமிழ் வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். இந்தி வந்தால் தமிழ் அழிந்துவிடும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அப்படியில்லை. இன்றைய நிலையை எடுத்துக்கொண்டு, தமிழ் எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். தமிழை கெடுப்பதற்காக, அழிப்பதற்காக சர்க்கார் எந்தத் திட்டத் தையும் கொண்டுவரவில்லை என்பதை நாம் நன்றாக புரிந்துகொண்

டிருக்கிறோம். அரசியல் சட்டத்தை ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் அதை தீயை வைத்து கொளுத்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். சட்டத்தைப் பூராவும் கொளுத்தவில்லை, அந்தப் பகுதி கொண்ட தாளை மட்டும் கொளுத்து கிறோம் என்று சொல்லுகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், 'உன்னை நான் வரவேற்கிறேன். அழகு நன்றாக இருக் கிறது' என்று சொல்லிவிட்டு, 'உனது கிராப் நன்றாக இல்லை' ஆகையால் தலையிலே தீ வைக்கிறேன்' என்று சொல்லுவது போல் இருக்கிறது. இப்படிப்பட்ட முறையை இப்பொழுதே கைவிட்டு விட்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் வருங்கால சிற்பிகளை நாம் நல்ல முறையில் உருவாக்கவேண்டும்.

விவசாயிகளைப் பற்றி எல்லோரும் ஆரவாரமாகப் பேசுகிறோம். சர்க்கார் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்று சொல்லு கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு முழுக்க முழுக்க ஆதரவு கொடுக்கிறார்களா என்றால் அதுதான் இல்லை. விவசாயிகள் உணவு உற்பத்தியை பெருக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். வீணாகச் செல்லுகின்ற தண்ணீரைக் கொண்டு புறம்போக்கு நிலங் களை, பட்டா நிலங்களை, புஞ்சை நிலங்களாக மாற்றினால் உடனே 12 மடங்கு 20 மடங்கு தண்டத் தீர்வை போடுகிறார்கள். விவசாயி கள் தங்களுடைய நிலத்தை விற்றுக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே மணிமுத்தாறு தண்டத் தீர்வை, தாம்பிரபரணிப் பாசனத்திலே தாம்பிரபரணி தண்டத் தீர்வை என்று, 20 மடங்கு தண்டத் தீர்வை போட்டிருக் கிறார்கள். பஞ்சம் ஏற்படும்போது சில வருஷங்களில் இதை வசூலிப்பதில்லை. இப்படி வருஷா வருஷம் வசூலிக்காமல், பல வருஷங்களுக்கு மொத்தமாகக் கட்டச் சொல்லும்பொழுது, தீர்வை வட்டி எல்லாவற்றையும் சேர்த்தால், விவசாயி தன்னுடைய சொத்தை விற்றுவிட வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்தத் தண்ணீரை விவசாயி வீணாக்குவதில்லை. விவசாயத்திற்குத்தான் பயன்படுத்துகிறான். ஆகவே இந்த தண்டத் தீர்வையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரித் தொகுதியை எடுத்துக் கொண்டால், குடமாடி அணை, கருமாண்டியம்மன் அணை, பச்சையாற்றிலிருந்து இடையங் குளத்திற்கு ஒரு வாய்க்கால், இந்த மூன்று திட்டங்களையும் அடுத்த பட்ஜெட்டில் சேர்த்துவிட்டால் அந்தப் பகுதியில் விவசாயம் பெருகும், உணவுப் பிரச்சினையும் திருப்திகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்த கனம் சபா நாயகர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI B. LAKSHMINARASAMMA : Mr. Speaker, Sir, I wish to avail myself of this opportunity to give expression to my grateful thanks to the Governor for his comprehensive address to the Legislature and say a few words in support of the motion now under discussion.

18th January 1964] [Srimathi B. Lakshminarasamma]

Sir, our State is successfully carrying out its plan of industrialisation and of raising the living standards of the people. This development in our economy poses bigger demands on our agriculture. But, unfortunately, agriculture has not made adequate strides to keep pace with the industrial development and it is pleasing to note that those at the helm of affairs are now trying to diagnose the reasons and find a cure for the same.

The output of all our agricultural products have to be increased considerably in the immediate future by intensification of agricultural development. To intensify agriculture and to provide for abundance of agricultural commodities, I want to stress the need for the Government to make an industrial approach to the problem. This problem of fully meeting the requirements of the agriculturists must be tackled with the same zeal, perseverance and purposefulness, as the task of industrialisation is being carried out. The most important thing is to make the agriculturists get more interested in their task and to create more material incentives for them, by providing for mechanization of agriculture, timely distribution of quality seeds, chemical fertilisers, insecticides and by boosting irrigation by increasing power supply. The question of securing profitable prices for agricultural produce is the cardinal problem in the development of agriculture.

Sir, I am sure that agriculture is to play a dominant and decisive role in the development of our country's economy in the near future. It is therefore necessary that early steps have to be taken to train farmers into skilled specialists. In addition to expansion of agricultural colleges and universities, new types of educational establishments should be opened to train youngsters from rural families in agricultural production, livestock breeding, bee-keeping and horticulture. There are many intelligent and capable young men in our villages who will take to farming enthusiastically, if they are taught how to run agricultural farms profitably by taking to new implements and new techniques of production on scientific lines, without the drudgery of traditional and outmoded methods and if the fruits of research are brought home to them. The Government should also attach the greatest importance to increasing the credit facilities available to the agriculturists so that they may have enough resources to develop their farming occupations Further, the terms for granting credit to the agriculturists should not be burdensome. Credit should be made available with the least irksome procedure and the interest charges should be reduced to the minimum possible. If the confusion, uncertainty, fear and unhappiness are eliminated from rural parts and if the farmer is given peace of mind to concentrate on his work, I am sure, that agriculture will thrive well, food scarcity and soaring price will become a thing of the past and our State will become a proud State flowing with abundance of food and other agricultural raw materials.

Sir, my district, South Arcot is a large groundnut producing centre and large quantities of groundnut oil are produced annually. Most of it is exported to distant places like Calcutta, where a major

[Srimathi B. Lakshminarasamma] [18th January 1964

number of Vanaspathi factories are situated. On account of this, prices of groundnut oil in South Arcot has been reduced locally and due to this, oil millers in South Arcot have to face fluctuations in prices and have to accept very low prices. It is therefore of great importance that a refinery and a vanaspathi factory with an adjunct soap-plant is started in South Arcot. It will be a step in the right direction if the Government will take over the vanaspathi factory at Villupuram, lying idle for over a decade now and bring it into production either in the co-operative sector or public sector. This will help not only oil millers in the district but also help the ground-nut growers to get better prices for their crop and also help provide work for a large number of people unemployed in this district.

Thank you, Sir, for giving me this opportunity to speak.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையில் அத்தியாவசியமான பண்டங்களின் விலை உயர்வைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களுடைய கவலையையும் தெரிவித்துள்ளார்கள். இன்றைய தினம் அத்தியாவசியமான பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்து தக்க நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பது குறித்து மக்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கட்டாயக் கொள்முதலை காரணமாக வைத்துக்கொண்டு, இந்த ஆண்டு அறுவடையின்போது வியாபாரிகள் கட்டுப்பாடாக இருந்துகொண்டு விவசாயிகளிடமிருந்து நெல்லை மிகவும் குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள். ரூ. 20 முதல் ரூ. 25 வரை ஒரு மூட்டை நெல் விற்றுக்கொண்டிருந்த நிலைமை போக, அறுவடை ஆரம்பமானவுடனே, ரூ. 16 அல்லது 17-க்கு விற்கும் நிலைமை ஏற்பட்டு, விவசாயிகள் பெரிய நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். விவசாயிகள் நெல்லுக்கு ஒரு நியாயமான விலையை நிர்ணயம் செய்வார்கள் என்று எதிர்பார்த்தார்கள். அப்படி நியாய விலை நிர்ணயம் செய்யாத நிலையில், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு விலை குறைந்திருந்தைப் பார்த்து வருந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நியாய விலைக் கடைகளைத் திறப்பதாக கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள்மூலம் நியாய விலைக்கு மக்களுக்கு அரிசி கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால், அன்றாடம் வேலை செய்து பிழைக்கக்கூடிய கூலிகள் அதிக விலைக்கு அரிசியை வாங்காமல், நியாயமான விலையிலே அரிசியை வாங்குவதற்கு வழி ஏற்படும். ஆகவே, எல்லாக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நியாய விலைக்கு அரிசியை விற்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ரசாயன உரத்தைப் பொறுத்த வரையில், இன்றைய தினம் எதிர்பார்த்த அளவுக்கு விவசாயிகள் அதை உபயோகப்படுத்தவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது உண்மையுங்கூட. அப்படி உபயோகிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்றால்

18th January 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

காலாகாலத்தில் ரசாயன உரங்கள் கிடைப்பதில்லை. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்கவேண்டுமென்று ஏற்பாடு இருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டு மென்று சொன்னால், அந்த சங்கங்கள் தீர்மானித்த பிறகு, தாலூகா சங்கங்களின் அனுமதியைப் பெற்ற பிறகு, சென்டிரல் பாங்கியிலே போய், அனுமதி வாங்கிக் கொண்டு வருவதற்கு இரண்டு அல்லது மூன்று மாத காலம் ஆகிறது. இம்மாதிரி காலதாமதம் ஆவதினால் தேவையான சமயத்தில் ரசாயன உரத்தைக் கொடுப்பதற்கு ஏற் பாடுகள் செய்தால், விவசாயிகள் அதிகமான அளவுக்கு ரசாயன உரங்களை உபயோகப்படுத்த முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அடுத்து இன்னொரு கஷ்டம். குத்தகைக்கு சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளுக்கு குத்தகை பத்திரம் இருந்தால்தான் ரசா யன உரத்திற்கு கடன் கொடுக்க முடியும் என்று விதி இருக்கிறது. ஆனால் பல விவசாயிகள் வாய் நம்பிக்கை மூலம் ஒப்புக்கொண்டு பத்திரம் இல்லாமல் விவசாயம் செய்கிறார்கள். ஆகவே, அப்படிப் பட்டவர்களுக்கும் உரத்திற்கு கடன் கிடைக்கவேண்டிய நடவடிக் கைளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு எல்லா மாவட்டங்களிலும் காலரா வியாதி பரவி மக்கள் ஆயிரக்கணக்கில் இறந்திருக்கிறார்கள். ஆனால் கவர்னர் பெருமான் உரையில் அது பற்றி குறிப்பிடப்படவில்லை. காலரா வியாதியை தடுக்க பொது சுகாதார துறையில் தீவிர நட வடிக்கை எடுத்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை ஜில்லாவிலே இந்த வியாதி தண்ணீர் மூல மாக பரவுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே அங்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை ஜில்லாவிலே இருக்கக்கூடிய கனம் அங்கத் தினர்கள் குறிப்பிட்டதுபோல் இந்த ஆண்டு பெய்த பெரு மழை யின் காரணமாக மிக்க சேதம் ஏற்பட்டிருக்கிறது. திருத்துறைப் பூண்டி தாலூகாவில் மட்டும் 15,000 ஏகராவுக்கு மேல் அறுவடைக்கு தயாராக இருந்த பயிர்கள் பாதிக்கப்பட்டு தானியங் கள் நஷ்டம் ஆயின. இருபோக தாளடி நிலங்களிலுள்ள பயிர்கள் அழிந்து விட்டன. சுமார் 5 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உணவு தானியங்கள் வீணாக்கப்பட்டுவிட்டன. அதற்கொரு முக்கிய மான காரணம் தஞ்சை ஜில்லாவிலே போதுமான வடிக்கால் வசதி கிடையாது என்பதுதான். திருத்துறைப்பூண்டி தாலூகாவில் 6 ஆறுகள் ஓடுகின்றன. அவை நேரே கடலில் போய் விழாமல் வேதாரண்யம் கெனலில் சேருகின்றன. அதனால் வெள்ளம் ஏற்பட்டு பயிர்களெல்லாம் முழுகி விடுகின்றன. இந்த ஆறுகளெல் லாம் நேரே கடலில்போய் விழுமாறு ஏற்பாடு செய்தால் இந்த பிரச்னையை கொஞ்சம் தீர்க்கலாம். பல திட்டங்கள் போட்டிருந்

[திரு. ஆ. கு. சுப்பையா] [18th January 1964

தாலும் அவை பல ஆண்டு காலமாக பூர்த்தி ஆகாமல் இருப்பதால் மக்கள் பொருளாதார துறையிலும் சமூக துறையிலும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன். கந்த பறிச்சான் வடிகால் திட்டம் என்று 7, 8 லட்சம் ரூபாய் சிலவில் ஒரு திட்டம் போடப்பட்டது. வெகுவாக அந்த வேலையும் முடிந் தது. ஆனால் ஒரு 4 பர்லாங் தூரம் உள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்ய காலதாமதம் ஆகிறது. 10 ஆண்டு காலமாக அந்த வேலை அப்படியே கிடக்கிறது. அதனால் இந்த வருஷம் 20,000 ஏக்கர் நிலம் மூழுகி பாழாகி விட்டது. இந்த வருஷமாவது அந்த திட்டத்தை நிறைவேற்ற தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுகொள்கிறேன். வெள்ளத்தின் காரணமாக 66 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 2,500 க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்துவிட்டன. இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்களே நேரில் பார்த்தார்கள். பெரும்பாலும் ஏழை ஹரிஜனங்களே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான உதவிகள் கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும். இன்றைக்கு கொடுக்கப்படும் ரூ. 5 அல்லது 10 எந்த விதத்திலும் அவர்களுக்கு நிவாரணம் கொடுப்பது ஆகாது. ஆகவே, சர்க்கார் அந்தத் தொகையை கொஞ்சம் அதிகமாக்கி, ரூ. 30 அல்லது ரூ. 50 என்ற வகையில் உதவி செய்தால் நலமாக இருக்கும், அவர்களுக்கு உண்மையிலேயே உதவி செய்ததாக இருக்கும். ரூ. 5 கொடுப்ப தால் அது எந்த விதமான நஷ்டத்தையும் ஈடு செய்ய முடிவதில்லை. அதோடுகூட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு அர சாங்கம் வரி வஜா கொடுக்க வேண்டும். அவர்கள் தாங்கள் வாங்கிய கடன் தொகைகளேயும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய கடன்களுக்கு கட்ட வேண்டிய தொகையை ஒத்திவைத்து அடுத்த ஆண்டிலே வாங்கிக் கொள்ளக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி குத்தகைதாரர்கள் குத்தகையை கொடுக்க முடியாத நிலையில் இருப்பதால் இந்த ஆண்டு குத்த கையை தள்ளுபடி செய்ய, ரெமிஷன் அளிக்க சர்க்கார் முன் வர வேண்டும். அதிகாரிகளிடம் கேட்டால் நாங்கள் என்ன செய்வது சர்க்கார்தான் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று சொல் கிறார்கள். ஆகவே, சர்க்காரிலிருந்து உத்தரவு போட்டு குத்த கையை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வரி வஜா கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மாதிரி நிவாரணம் அளிப்பதோடு கிளைதாங்கி ஆறு திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவராமல் இருப்பதால் பல்லாயிரக் கணக் கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இன்றைய தினம் சர்க்கார் விசேஷமாக தஞ்சைக்கு என்று தனியாக ஒரு திட்டத்தை தயாரித்து அந்த திட்டத்தின் மூலம் நன்மை அளிக்கும் முறையில் வடிகால் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் வரி வஜா கொடுத்தும் குத்தகை தள்ளுபடி செய்தும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நான் குறிப் பிட்ட 6 ஆறுகளும் வேதாரண்யம் கெனலில் போய் சேராமல்

18th January 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

கடலில் போய் சேர ஏற்பாடு செய்தால் அந்த விவசாயிகள் சர்க்காருக்கு கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று கூறிக் கொண்டு என் வார்த்தையை முடிக்கிறேன்.

*திரு. து. ப. அழகமுத்து: மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய ஓரிரண்டு கருத்துக்களைக் கூற சந்தர்ப்பம் அளிப்பதற்காக தங்களுக்கு என் நன்றியை செலுத்திக் கொள்கிறேன். இந்த ஆண்டு கவர்னர் அவர்களின் உரையில், சென்ற ஆண்டு ஒரு நெருக்கடியான நிலைமையில் கூடினோம், அந்த நிலைமை மாறி இருந்தபோதிலும் நாட்டிலே நெருக்கடி நிலைமை குறைந்து விடவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு நாட்டிலே ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் குறிப்பிட்டு, அதை சமாளிக்க என்ன என்ன நடவடிக்கைகள் சர்க்கார் எடுக்க இருக்கிறது என்று குறிப்பிட்டுவிட்டு முக்கியமாக சிக்கனத்தைப் பற்றியும், நாட்டின் உணவு பொருள் பெருக்கத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய பல்வேறு காரணங்களைப் பற்றி சொல்லி இருந்தார்கள். ஆனால் ஓர் ஆண்டு காலத்திற்கு பிறகு அந்த நெருக்கடி நிலை போகவில்லை என்று இந்த உரையில் குறிப்பிடுகிறார்கள். ஆளும் பொறுப்பில் இருக்கிறவர்கள் நெருக்கடி நிலையை உணர்ந்து அதற்கேற்றாற்போல் நடக்கிறார்களா என்றால் நடை முறையில் ஒன்றும் தெரியவில்லை. சிக்கனம் கையாளப் படுவதில்லை. மந்திரிகள் நாள்தோறும் ஒவ்வொரு ஊருக்கும் சென்று திறப்பு விழாக்களை நடத்திக் கொண்டு இருக்கிறார்களே தவிர மக்களுக்கு அத்தியாவசியமான உணவு பொருள் விலை உயர்வு பற்றி அதிகமாக கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள் சிக்கனத்தை எந்த அளவுக்கு கையாளுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் கூறலாம். அண்மையில் அவர்களுடைய கட்சி மாநாட்டிற்காக செலவான அதிகப்படியான தொகை பற்றி அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களே குறை கூறியதை பத்திரிகைகளில் குறிப்பிட்டிருப்பதை, சபாநாயகர் அவர்களே, தாங்கள் அறிவீர்கள். ஆகவே, நெருக்கடி நிலைமை இருக்கிறது என்று நீடித்துக்கொண்டு போவது ஆளும் கட்சிக்கு சாதகமாக இருக்கிறதேயன்றி, வேறொன்றும் இருப்பதாக தெரியவில்லை. உணவுப் பெருக்கத்திற்காகக் கடந்த ஆண்டு பல்வேறு வகையான திட்டங்கள் கையாளப்பட்டன. காய் கறிகள் உற்பத்தி செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. இப்படியெல்லாம் 10-30 a.m. உணவுப் பெருக்கத்திற்காகச் செலவிடப்பட்டும், இன்றையதினம் உணவுப் பொருள்களின் விலை ஏறியிருக்கிறதென்பதை நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம். என்ன காரணம்? கடந்த ஆண்டு உணவு விலை ஏறியிருக்கிறது. ஆகவே, அதைக் கட்டுப்படுத்துவதற்காக உபயோகிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் திறக்கப் போவதாகக் கூறினார்கள். இந்த ஆண்டும் அதையேதான் திரும்பவும் கூறுகிறார்கள். ஆனால் அதிகப்படியான சங்கங்களைத் திறக்கப் போவதாகக் கூறுகிறார்கள். விலை உயர்ந்திருப்பதற்கான காரணம் என்ன என்பதற்குப் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களை நம்பினால் மட்டும் போதுமா என்று

[திரு. து. ப. அழகமுத்து] [18th January 1964

பார்த்தால் அப்படி நம்பமுடியவில்லை. நாட்டிலே போடப்பட்ட திட்டங்களினுடைய குறைபாடுகள் காரணமாகத்தான் விலைவாசிகள் ஏறியிருக்கிறதென்பதைப் பாராளுமன்றத்திலே நடந்த விவாதங்கள் நமக்கு நிரூபித்திருக்கின்றன. என்னுடைய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. செழியன் அவர்கள், விலைவாசி உயர்வுக்குக் காரணம் திட்டங்களினால் ஏற்பட்ட கோளாறுகள் மட்டுமல்ல, அதிலே பணப் பெருக்கத்தின் மூலமாக ஏற்பட்ட கோளாறும் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எண்பத்திமூன்று சதவிகிதம் நாம் கரன்ஸியை வெளியிட்டிருக்கிறோம். ஆனால், உற்பத்திப் பெருக்கம் 50 சதவிகிதம்தான் இருக்கிறது. ஆகவே, வித்தியாசம் 33 சதவிகிதம் இருக்கும்போது விலைவாசி ஏறாமல் என்ன செய்யும் என்று கேட்டிருக்கிறார். அதற்கு அங்கே பதில் இல்லை. விலைவாசி ஏறிக்கொண்டு போவதற்குத் தகுந்த காரணங்களுக்கான புள்ளிவிவரங்களைக் கொடுக்க முடியாத நிலைமையில் ஆளும் பொறுப்பிலே உள்ளவர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு நியாய விலைக் கடைகளைத் திறந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவும் ஐநூறுக்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகளைத் திறந்திருப்பதாகக் கூறுகிறார்கள். கவர்னர் பெருமான் அவர்கள் ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் முதன்முதலாக உரை நிகழ்த்திய போது, 'உணவு நிலைமை சீர்பட்டிருக்கிறது, திறக்கப்பட்ட நியாய விலைக் கடைகளை இனியும் நீடிக்க வேண்டியது அவசியமா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆறு ஆண்டுகளுக்குப் பின்னால் இன்றைய தினம் நியாய விலைக் கடைகளை மீண்டும் திறந்திருக்கிறார்கள் என்றால், நாட்டிலே உணவு உற்பத்தி நிலைமை எதிர்பார்த்தபடியில்லை. இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்களின்படி, அபிவிருத்தி அடையவில்லை என்பதைச் சர்க்கார் ஒப்புக்கொள்ளத் தயங்குகிறது. நியாய விலைக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். உண்மைதான். ஆனால், அந்தக் கடைகளை எங்கே திறந்திருக்கிறார்கள்? முனிசிபல் நகர்ப்புறத்தில் மட்டுந்தான் திறந்திருக்கிறார்கள். மற்ற பஞ்சாயத்துப் பகுதிகளில் திறந்திருக்கிறார்களா என்றால் இல்லை. அண்மையில் நகர சபைத் தேர்தல்கள் வரவிருக்கிறது. ஆகவே, அந்தத் தேர்தலுக்காகத்தான் நியாய விலைக் கடைகளை நகர்ப்புறங்களில் திறந்திருக்கிறார்களே தவிர, உள்ளபடியே மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்கச் செய்ய வேண்டும் என்கிற நோக்கம் நாட்டை ஆளுகின்றவர்களுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. மேஜர் பஞ்சாயத்துக்களிலும் நடுத்தர மக்கள், ஏழை எளியவர்கள், உழைப்பாளிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கும் குறைந்த விலையில் அரிசி கிடைக்கச் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் நகர்ப்புறங்களில் மட்டும்தான் இதை வைத்திருப்பதை பார்க்கும்போது, இதில் ஏதோ அவர்களுக்கு ஒரு சாதகத்தை எதிர்பார்க்கிறார்களே யொழிய, நாட்டு மக்களுக்குச் சாதகம் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

கவர்னர் பெருமான் தன்னுடைய உரையில் முதியோர்களுக்குப் பென்ஷன் தருவதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

18th January 1964] *[திரு. து. ப. அழகமுத்து]*

சமுதாயத்திலே பாதுகாப்பு இல்லாத நிலைமையில் இருக்கும் முதியோர்களுக்கு இந்த உதவி செய்யப்படுகிறது. இது பெருமைப்படத்தக்க ஒன்று என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாராட்ட வேண்டியதுதான். ஆனால், அவர்கள் தமிழ்நாடு பூராவும் கொடுக்கின்ற உதவித் தொகை 55,000 பேர்களுக்கு என்று பத்திரிகையிலேயும், 62,000 பேர்களுக்கு என்று கவர்னர் உரையிலேயும் தெரியவருகிறது. அப்படியானால், தமிழ்நாட்டிலே 62,000 பேர்கள்தான் பாதுகாப்பற்ற முதியோர்கள் இருக்கிறார்களா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணமாக, எங்கள் திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், 18,000 விண்ணப்பங்கள் முதியோர் உதவித் தொகைக்காகக் கொடுக்கப்பட்டன. ஆனால், வழங்கப்பட்ட உதவித் தொகை எத்தனை பேருக்கு என்றால், 3,800 பேர்களுக்குத்தான். பணமும் பின்னால் பலருக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட பிறகு, ஒருவர் மீண்டும் விண்ணப்பம் செய்துகொண்டார் அதிகாரிகளுக்கு. விண்ணப்பத்திற்கு அவருக்கு கிடைத்த பதிலைக் குறிப்பிட்டு, நான் முன்பு ஒரு தடவை சட்ட மன்றத்தில் கேள்வி கேட்டேன். முதலமைச்சர் அவர்கள் சற்றுக் கோபமாக பதிலளித்தார். இருந்தாலும், உண்மை, நிலைமையைச் சொல்லித்தான் தீரவேண்டும் என்ற கடமையில் நான் இதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். முதியோர்களுக்கான உதவித் தொகை கொடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டதை மீண்டும் கொடுக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்து கொண்டவர்களில், பச்சைவாத நோய்க்காரரின் விண்ணப்பம் ஒன்று. அவருக்கு வந்த பதில் என்ன? "நீர் உம்முடைய முதல் விசாரணையின்போது, பிச்சை எடுத்துச் சாப்பிடுவதாகவும், பென்ஷன் கொடுத்துவிட்டால் அதை விட்டுவிடுவதாகவும், குறிப்பிட்டிருப்பதால், நீர் பிச்சை எடுக்கும் தொழிலைச் செய்வதாகக் கருதி உமக்குக் கொடுத்து வந்த உதவித் தொகையை நிறுத்தி விட்டோம்" என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறது. "பிச்சை எடுப்பது ஒரு தொழிலாக அங்கிகரிக்கப்பட்டிருக்கிறதா?" என்று நான் கேட்டேன். அப்போதுதான் முதல் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கோபப்பட்டுப் பதில் சொன்னார்கள். தயவுசெய்து கோபப்படாமல் நான் சொல்வதைப் பற்றிச் சற்று ஆலோசிக்கவேண்டும் என்று நான் அவர்களிடத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்படிப்பட்ட கேவலநிலை இன்றையதினம் இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே உதவித்தொகையென்பது வரப்போகிற தேர்தலுக்குப் பிரசாரத்திற்காகப் பயன்படலாமேயொழிய, உள்ளபடியே எல்லா ஆதரவற்ற முதியோர்களுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும் என்ற நோக்கம் நம்முடைய சர்க்காருக்கு இல்லை.

நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இந்த உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவருக்கு நன்றி தெரிவிக்க இந்த மன்றத்திலே உள்ள அனைவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அதற்குரிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எல்லோரும் சேர்ந்து அவருக்கு நன்றியைத் தெரிவித்திருக்கலாம். அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதற்காக இந்த மன்றத்தின் கனம் உறுப்பினர் திரு.

மதியழகன் அவர்கள்கூட ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் மூலமாக, 'நம்முடைய சட்டசபை விதிகளிலே 56-வது விதியின்படி மந்திரி களில் ஒருவர் இராஜினமா செய்தால் சபைக்கு அறிக்கை சமர்ப் பிக்கலாம்' என்று இருக்கிறது. அதைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று கேட்டார்கள். இந்திப் பிரச்சினையில் இந்நாள் முதலமைச் சர் 'மே' என்ற சொல் 'ஷல்' என்ற பொருளைத் தரும் என்று சொன்னதைப்போல, இங்கேயும், 'மே' என்ற சொல்லுக்கு 'ஷல்' என்று பொருள் கொண்டு அந்த அறிக்கையைச் சபைக்கு வைக்கவேண்டுமென்று திரு. மதியழகன் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது நமது முதல் அமைச்சர் பதில் சொன்னபோது, "இந்த இடத்தில் 'ஷல்' என்ற அர்த்தம் வராது, 'மே' என்றால் அறிக்கை வைக்கலாம் அல்லது வைக்காமலும் இருக்கலாம்" என்று குறிப்பிட்டார்கள். அமைச்சர் அதிகம் படித்தவர்கள். வார்த்தைகளுக்கு எப்படி வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்ய முடியும். நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் நன்றி தெரிவிக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லையே என்பது தான்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பதவியை ராஜினமா செய்த முதல் அமைச்சர் இங்கே ஓர் அறிக்கை சமர்ப்பித்திருந்தாலும், அதன்மீதும் விவாதத்திற்கு இடம் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றி தெரிவிப்பதற்கு அப்பொழுதும் சந்தர்ப்பம் இருந்திருக்காது.

திரு. து. ப. அழகமுத்து: அந்த சந்தர்ப்பம் கொடுக்கப்பட வில்லை என்பதைத்தான் நான் கூறினேன்.

அதற்கடுத்தாற்போல், கனம் காமராஜர் திட்டத்தைப்பற்றி இந்த உரையைத் துவக்கிவைத்த மதிப்பிற்குரிய கனம் அங்கத் தினர் திரு. பழனி அவர்கள் மிக விளக்கமாகக் கூறினார்கள். 'மிக உயர்ந்த திட்டம், உலகம் பூராவும் போற்றப்படுகிற திட்டம்' என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், அந்தத் திட்டம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில் தோல்வி அடைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.

* **திரு. எம். வில்லியம்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றியிருக்கும் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து நான் ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையில், நமது நாட்டில் இருந்த நெருக்கடி நிலைமையைப் பற்றியும், அந்த நெருக்கடி யானது எவ்வண்ணமாகச் சமாளிக்கப்பட்டது என்பதைப்பற்றி யும், அதன் பிற்பாடு, உயர்திரு. காமராஜ் அவர்கள் தன்னுடைய முதல் அமைச்சர் பதவியை ராஜினமா செய்தது பற்றியும், அவரு டைய ஆட்சிக் காலத்தில் எவ்வண்ணமாகத் திறம்பட காரியங்கள் நடைபெற்று வந்தன என்பதைப்பற்றியும், பொருளாதார முன் னேற்றத்திற்கான திட்டங்கள் எவ்வண்ணமாக நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைப் பற்றியும், நிர்வாகம்

18th January 1964] [திரு. எம். வில்லியம்]

எவ்வண்ணமாக அமைந்திருக்கிறது என்பதைப் பற்றியும் இன்னும் பல விஷயங்களைப்பற்றியும் சவிஸ்தாரமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதே சமயத்தில் அவருடைய உரையின் கடைசிப் பக்கத்தில், அரசியல் சாசனத்திற்கு விரோதமாக எந்தவிதமான கிளர்ச்சியும் செய்வது நல்லதல்ல, அப்படிச் செய்வது அரசியல் சாசனத்தை அவமதிப்பதாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றிய வாதங்களும் நடந்து வருகின்றன. இந்தி எதிர்ப்புப் போராட்டம் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்லதா என்பதை நாம் சற்றுச் சிந்திக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இந்தத் தமிழ் நாடானது ஒரு தனிப்பட்ட நாடாக இருந்திருக்குமானால் இந்தியைப் புகுத்துவதற்கு நாம் சம்மதிக்க மாட்டோம்.

இது ஒரு தனிப்பட்ட ராஜ்யம் அல்ல. மத்திய ஆட்சிக்கு உட்பட்ட ஒரு மாநிலம். இதர மாநிலங்களோடு எல்லா விஷயங்களிலும் தொடர்பு கொள்ளவேண்டிய ஒரு மாநிலம். இவ்வண்ணமாக உள்ள நிலையில் நம் மாநிலத்தில் மட்டும் ஏன் இந்தியை எதிர்க்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். இந்தியை மத்திய ஆட்சியின் நிர்வாக மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு நிலையில் இந்தியைப் புறக்கணிப்பதால் நமக்குப் பயன் இல்லை. அப்படிப் புறக்கணித்தால் வருங்காலச் சந்ததிகள் நாம் அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்டதாக எண்ணுவார்கள். அதற்கு இடம் கொடுக்காமல் இந்தியை எவ்வண்ணம் ஆதரிக்க வேண்டுமோ அவ்வண்ணம் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று இவ்வேளையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் பெருமான் உரையில் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படுவது பற்றி ஒருசில வார்த்தைகள் கூறியிருக்கிறார்கள். கூட்டுறவு அடிப்படையில் மளிகைக் கடைகள் அதிகமாகத் திறக்கப்படும் என்றும், 50 ஆயிரத்துக்கு மேல் ஜனத்தொகையுள்ள இன்னும் 19 நகரங்களில் கூட்டுறவு மளிகைக் கடைகள் நிறுவப்படும் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்போதே கிராமப் புறங்களில் ஒருவிதமான அதிருப்தி ஏற்பட்டு வருகிறது. எவ்வண்ணம் என்றால் கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அதுவும் மிகவும் அத்யாவசியப்பண்டமான சர்க்கரை வினியோகத்தில்கூட கிராமங்கள் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை என்ற அதிருப்தி வளர்ந்து வருகிறது. அதுவும் இப்போது அத்தியாவசியப்பண்டங்களாகிய மற்றவற்றின் தட்டுப்பாடும் அதிகரிப்பதால் எப்படியாவது கூட்டுறவு சங்கங்களை கிராமங்களில் ஏற்படுத்தியாவது இந்தப் பொருள்கள் அங்குள்ள மக்களுக்குக் கிடைக்கத்தக்க வழிவகைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டினங்களை மட்டும் கவனித்துக் கொண்டால் போதாது. நம்முடைய நாட்டு மக்களில் 30 சதவிகிதம் கிராமப்புறங்களில்தான் வசிக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். ஆகவே, அந்த கிராம மக்களுக்கு எல்லாம் முக்கியப் பண்டங்கள் லகுவாகக் கிடைக்கத் தகுந்தவாறு செய்வது நம் கடமை. ஆகவே, அங்கும் சொசைடிகள் ஆரம்பிக்கவேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

[திரு. எம். வில்லியம்] [18th January 1964

நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தமாகவும் அவர்கள் ஒரு சில வார்த்தைகள் சொல்லியிருக்கிறார்கள். பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் வேலை முடிந்துவிட்டன. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில்தான் கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய ஜில்லாவைப் பொறுத்த வரையில் ஒரு சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். குமரி தாலுக்காவில் குளங்கள் அதிகம் இருக்கின்றன. அவைகளை வெட்டி ஆழப்படுத்தவேண்டியது இன்றியமையாதது. புட் பரொடெக்ஷன் இலாகாவின் மூலமாக முதலில் 50 ஏக்கருக்கு மேலுள்ள புரவுள்ள குளங்களை ஆழப்படுத்தி வெட்டினார்கள். அதற்குப் பிற்பாடு 20 ஏக்கருக்கு மேலுள்ள புரவு குளங்களை ஆழப்படுத்தி வெட்டினார்கள். அதற்குப் பிற்பாடு 10 ஏக்கருக்கு மேலுள்ள புரவு குளங்களையும் அவ்வண்ணமே செப்பனிட்டார்கள். பத்து ஏக்கருக்குக் கீழுள்ள புரவு குளங்களையும் செப்பனிடத் திட்டம் இருந்தது. ஆனால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் வந்தமையினால் இக்குளங்களை ஆழப்படுத்தி செப்பனிடும் வேலையை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். அதனால் இவ்வேலை மேற்கொண்டு நடைபெறாமல் அப்படியே நின்றுவிட்டது. அதற்குக் காரணம் ஒரு ஏக்கருக்கு 4 ரூபாய்தான் கிரான்டாக மராமத்து வேலைக்குச் சர்க்கார் கொடுக்கிறார்கள். பத்து ஏக்கருள்ள குளம் என்றால் சர்க்காரிடம் இருந்து 40 ரூபாய்தான் உதவி கிடைக்கிறது. இந்த 40 ரூபாய் போதவே போதாது. கிட்டத்தட்ட ஒவ்வொரு குளத்திற்கும் நான்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. ஆகவே இந்தக் குளங்களும் சரியான முறையில் செப்பனிடப்பட வேண்டுமென்றால் சர்க்கார் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு இந்தக் குளங்களை மராமத்து செய்வதற்கு ஆகிற தொகையை முழுக்கக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் புட் ப்ரொடெக்ஷன் இலாகா மூலமாகவே செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குளங்களை வெட்டி ஆழப்படுத்த பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களிடம் போதுமான பண வசதி இல்லை. சர்க்கார் பண வசதி செய்து கொடுத்தால்தான் இந்த வேலை சரிவர நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குமரி மாவட்டத்தில் சித்தாற் பட்டணம் கால்வாய்வேலை துரிதமாக நடத்தப்பட வேண்டும். மேலும் மாம்பழத்து அணை, பொய்கை அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது. அதையும் ஆரம்பிக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

சமுதாய பாதுகாப்புத் திட்டம் என்ற அடிப்படையில் கவர்னர் அவர்கள் வயது வந்தவர்களுக்குப் பென்ஷன், மதிய உணவு திட்டம் என்பதைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மேலும் கல்வி மிகவும் முக்கியமானது. கல்வியை அதிகமாகப் பரப்பினால் தான் மக்களிடம் உள்ள அறிவின்மை மாறும். பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் என்பது அனைவரும் அறிந்த விஷயம். இது விஷயமாக திரு. பொன்னப்ப நாடார் கூடச் சொல்லிவிட்டார்கள். முக்கியமாக எங்கள் தொகுதியில் ஒன்றிரண்டு கல்லூரிகள் அவசியமாக இருக்கின்றன. ஏனெனில் அந்தப் பகுதியில் கட்டா

[8th January 1964] [திரு. எம். வில்லியம்]

யக் கல்வி இருந்தமையினுல் எல்லோரும் படிக்க ஆரம்பித்து விட்டார்கள். உயர்தரப் பள்ளிகள் அதிகம் ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றன. கல்லூரிகள் இரண்டேதான் இருக்கின்றன. அதுவும் நாகர்கோயிலில்தான் இருக்கின்றன. வளவங்கோடு தாலுக்கா வில் 50 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இவர்கள் எல்லாம் கல்லூரியில் படிக்க வேண்டுமென்ருல் நாகர்கோயிலுக்குத்தான் போகவேண்டியிருக்கிறது. அங்கும் படிக்க வாய்ப்பு கிடைப்ப தில்லை. இதர மாவட்டங்களுக்குச் சென்று படிக்கவேண்டு மென்ருலும் பலருக்கு இடம் கிடைக்காது போகிறது. ஆகவே இந்தப் பகுதியில் இன்னும் இரண்டு கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டியது அவசியம். அதற்கு நமது முதல் அமைச்சர் அவர் கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மிகவும் பிற்போக்கான பிரதேசங்களாக இருக்கின்ற விளவங்கோடு தாலுக்காவில் கடன் வசதியை நல்ல முறையில் அளிக்க வேண்டும். Full Finance Scheme. முழுப் பண உதவி திட்டம் ஒரு சில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு இருக் கிறது. அவ்வண்ணமே இந்தப் பகுதியிலும் ஆரம்பிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக கல்குளம், விளவங் கோடு தாலுக்காவில் பட்டா பலருக்கு பிரிக்கப்படவில்லை. அதனுல் விவசாயிகளுக்கு கடன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அந்தப் பிரதேசங்களில் (Full Finance Scheme) புல் பைனன்ஸ் ஸ்கீமை நடைமுறையில் கொண்டு வந்தால் அங்குள்ள விவசாயி களுக்கு மிகுந்த பிரயோசனம் கிடைக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை அந்த தாலுக்காக்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமென்று கனம் உதவி சபாநாயகர் மூலமாக கனம் அமைச்சர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்**: மதிப்பிற் குரிய கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப் படுகிறேன். விவசாய உற்பத்தி பெருக வேண்டும், விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படவேண்டுமென்று கவர்னர் பெருமான் தம் முடைய உரையில் கூறியிருக்கிருர்கள். அந்த முறையில் விவசாய உற்பத்தி நல்ல முறையில் பெருகவேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு முதலாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இருந்தே நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற ஒரு நோக்கத்துடன் தான் பாடு பட்டு வருகிருேம். பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன் களும் பொது மக்களும் இவ்விஷயத்தில் அதிக ஊக்கம் காட்ட வேண்டுமென்று வேண்டிக்கொள்ளப் பட்டும் நடை முறையில் அமுல் செய்யப்பட்டும் வருகிறது. மேலும் பெரிய பெரிய அணைக்கட்டுத் திட்டங்களையும், சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிருேம். அங்கங்கே கிணறுகள் வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு மானியமாகவும், கடனுகவும் பண உதவி செய்து வருகிருேம். அதுவும் அல்லாமல், உரம், விதை, விவ சாயக் கருவிகள் ஆகியவை கொடுத்து உதவி செய்து வருகிருேம்.

[18th January 1964

[திரு. எம். பி. முத்துக் கருப்பண்ணசாமி கவுண்டர்]

இரசாயன உரங்கள் கடனுகவும் கொடுக்கப்படுகின்றன. இப்படி அரசாங்கம் பலவகையில் உதவி செய்து வருவதன் காரணமாக விவசாயம் கணிசமான அளவில் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனுலும் இன்னும் அதிகப்படியாக விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டு மென்ற ஒரு நோக்கத்துடன்தான் கவர்னர் அவர்கள் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். அப்படி இன்னும் அதிகமாக விவசாயி கள் ஊக்கத்துடன் வேலை செய்து உற்பத்தியைப் பெருக்கவேண்டு மென்றுல் விவசாய மக்களுடைய கஷ்டங்களை எல்லாம் நாம் நிவர்த்தி செய்ய வேண்டும். அது மிகமிக முக்கியமானது. இன்றைய நிலைமையில் விவசாயிகளுடைய குறைகள் அதிகப் பட்டே வருகின்றன. அவற்றையும் நிவர்த்தி செய்தால் தான் விவசாயிகள் இன்னும் ஊக்கமாக வேலை செய்ய வழியேற்படும்.

விதைகள் வாங்கவேண்டுமென்றுல் கூட டெமான்ஸ்ட்ரேட்டர் ஆபீசில் இருந்து நல்ல பொறுக்குவிதைகள் கிடைப்பதே கடினமாக இருக்கிறது. அவர்கள் சில சமயங்களில் விதைகள் கொடுக்கிறுர் கள், சில சமயங்களில் இல்லையென்று சொல்லிவிடுகிறுர்கள். விவ சாயி நல்ல விதைகளை வாங்கி விதைக்க வழியில்லாமல் இருக்கிறுன். விவசாயத்திற்கான மின்சாரம் இரவு நேரங்களில் மட்டுந்தான் கொடுக்கப்படுகிறது, பகல் நேரங்களில் கொடுக்கப்படுவதில்லை. இதனுல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறுர்கள். விவசாயிகளுக்குக் கடனுக உரம் கொடுப்பதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. பூச்சி மருந்துகள் பாதி விலைக்கு விவசாயி களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறுர்கள். ஆனுல் நடைமுறையில் பார்த்தால் பாதிவிலைக்கு விற்கப்படும் மருந்துகள் பெரும்பாலான விவசாயிகளுக்குக் கிடைப்பதே இல்லை. இந்த முறையில் விவசாயி பல்வேறு வகைகளில் கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கிறுன். விவசாயியின் தரம் உயராததன் காரணமாக உற்பத்தி பெருக வழிவகை இல்லாமல் போய் விடுகிறது. இவ்வளவு கஷ்டங் களுக்குப் பிறகும் விவசாயி உற்பத்தி செய்யும் உணவு தானியங் களுக்கு சரியான விலையும் கொடுக்கப்படுவதில்லை. நம்முடைய கவர்னர் பெருமான் அவர்களே விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறுர்கள். வாஸ்தவம்தான். விவசாயி தனக்கு வேண்டிய சாதனங்களை அதிகப்படியான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளுடைய நிலைமை முன் னேறுமல் இருப்பதால் அவர்களுக்கு இன்னும் பல சலுகைகளைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. கிணறுகள் வெட்டுவதற்கும் பம்ப் செட் வைக்கும்போதும் சிமெண்ட் தேவைப்படுகிறது. தாசில்தா ரிடமிருந்து சிமெண்டுக்குப் பர்மிட் வாங்கினுல் சிமெண்ட் கிடைக்க குறைந்தது ஆறு மாதகாலம் அல்லது ஒரு வருடம் ஆகிவிடுகிறது. சிமெண்ட் பர்மிட்டை வைத்துக் கொண்டு வியாபாரியிடம் சென்று சிமெண்ட் கேட்டால் ஸ்டாக் இல்லையென்று சொல்லிவிடுகிறுன். ஆனுல் பிளாக் மார்க்கெட்டில் வேண்டுமானுல் எவ்வளவு சிமெண்டு வேண்டு

18th January 1964]

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

மானுலும் வாங்கலாம். இந்த மாதிரி நிலைமைகளையெல்லாம் போக்கி விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கோ, கட்டிடம் கட்டுவதற்கோ, தேவைப்படும் சிமெண்ட் மற்றுமுள்ள பொருள்கள் உடனடியாக காலாகாலத்தில் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதையெல்லாம் பார்க்கும்போது என் போன்றவர் களுக்கு விவேக சிந்தாமணியிலுள்ள பாட்டுத்தான் நினைவுக்கு வருகிறது.

"ஆவின மழை பொழிய இல்லம் வீழ,
அகத்தடியாள் மெய் நோவ அடிமை சாவ,
மாவீரம் போலதென்று விதை கொண்டோட,
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள,
கோவேந்தர் உழுதுண்ட கடைமைக்கேட்க,
குருக்கள் வந்து தட்சணைக்கு குறுக்கே
நிற்க, பாவாணர் கவிபாடிப்
பரிசுகேட்க பாவி மகன்,
படும் துயரம் பார்க்கொண்ணுதே."

இன்றைக்கு குருக்கள் வந்தால் யாருக் கொடுப்பதில்லை. தட்சணை வாங்க ஆபீஸ் குருக்கள் வந்து நின்றுவிடுகிறார்கள். ஆகவே, இன்று பல் வேறு வகையில் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் "கூட்டுறவு சங்கங்கள் மூலம் குத்தகைகாரர்களுக்கும் மற்ற எல்லா விவசாயிகளுக்கும் கடன் வசதிகள் போதிய அளவிற்கு விரைவில் கிட்டுவதற்கான வாய்ப்பு களை நாம் உருவாக்க வேண்டும்", என்று கவர்னர் பெருமான் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தற்போது குத்தகைகாரர்களுக்கும் விவசாயிகளுக்கும் கடன் கொடுக்கப்பட்டு வந்தாலும் அந்தக் கடன் காலாகாலத்தில் கொடுக்கப்படுவதில்லை. கடன் மனு எழுதிப் போட்டால் அது அடுத்த வெள்ளாண்மைக்குத் தான் வருகிறது. புகையிலை சாகுபடி செய்தால் இந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்ட புகையிலையை அடுத்த ஆண்டுதான் விற்க முடிகிறது. வியாபாரி விலைவாசி குறைந்து விட்டது என்று கூறி மிகக் குறைந்த விலைக்குக் கேட்கிறான். பருத்தியைப் பொறுத்த வரையில் என்னுடைய அனுபவத்திலிருந்து நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். மூன்று தரமான பருத்திகளை ஒரு வியாபாரி வந்து பார்த்தார். இந்தத் தரத்தில் நன்றாக இளை வருவதில்லை இதிலிருந்து 40-ம் நம்பர் நூல் தான் எடுக்க முடியும் என்று அதற்கு விலை குறைவாகக் கேட்டுவிட்டுச் சென்றார். இன்னொரு வியாபாரி வந்து முன்பு முதல் வியாபாரியால் குறைவாக மதிப் பிடப்பட்ட பருத்தியை நன்றாக இருக்கிறது என்றும் மற்ற இரண்டு வகைகளும் நன்றாக இல்லையென்றும் கூறிவிட்டுச் சென்றார். இப்படி வியாபாரிகள் அவர்கள் வாங்கும் பொருள் களுக்குக் விலை குறைவாக இருக்க வேண்டு மென்பதற்காக இப்படிச் செய்கிறார்கள். இந்த மாதிரியான தொல்லைகளை எல்லாம் நீக்கி விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். பி. முத்துக் கருப்பண்ணசாமி கவுண்டர்]

கடைசியாக, என்னுடைய தொகுதியில் குடிமங்கலம் பிர்க்காவில் பரம்பிக்குளம் வாய்க்கால் வருகிறது. அது பஞ்சமான பிரதேசம். மக்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். கூடிய விரைவில் பரம்பிக்குளம் வாய்க்காலிலிருந்து கிளை வாய்க்கால் வேலைகளைத் தொடங்கினால் வேலை வாய்ப்புக்கள் கொடுத்து பஞ்சத்தை நிவர்த்திக்க வழி பிறக்கும் என்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, வரும் ஆண்டின் அரசினருடைய கொள்கையை எடுத்து சொல்கின்ற விதத்திலும், இன்னும் ஒரு திங்களில் சமர்ப்பிக்கப்பட இருக்கின்ற நிதிநிலை அறிக்கை பற்றிய கனம் உறுப்பினர்களுடைய ஆலோசனைகளை அறிந்து கொள்ளும் வகையிலும், இந்தச் சபையில் மேதகு கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைப்பற்றி என்னுடைய ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், அரசியல் வாழ்க்கையில்—பொது வாழ்க்கையில்—ஈடுபட்ட சாதாரணத் தொண்டனாக இருந்தால் கூட, அவர்களைக் கவுரவிக்க வேண்டும், அதன்மூலம் பொது வாழ்க்கைக்கு நல்லதொரு புனிதத் தன்மையை ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டு இயங்குவதாகும். அந்த வகையில் நம்முடைய மாநிலத்தைப் பத்தாண்டுக் காலம் முதல்வராக இருந்து அரசு புரிந்த அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராசர் அவர்களை மற்றவர்கள் பாராட்டுவது போன்று தானும் பாராட்ட விரும்புகின்றது. அது மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகம் கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் இருந்த காலத்தில், திரு. காமராசர் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரராக இருந்தபோதிலும், அவருடைய பொதுவாழ்க்கையைப் பெருமைப் படுத்த வேண்டுமென்று ஆசைப்பட்டு, அவருக்கு நல்ல தோர் சிலையை, நினைவுச் சின்னமாக, அமைத்திருக்கிறது என்பதை நாம் எல்லாம் நன்றாக அறிவோம்.

11–00 a.m. அவர்கள் பதவியை விட்டு சென்ற விஷயத்தை கனம் காங்கிரஸ் உறுப்பினர் பெரிய தியாகம் பெரிய தியாகம் என்று சொன்னார்கள். பல தியாகங்களை சுதந்திரப் போராட்டத்தின் போது செய்தவர் அவர். அவர் இப்போது செய்திருக்கும் காரியம் புத்த பிரானைப் போல் அரண்மனையை விட்டு ஆரண்யம் சென்றதுபோல் அல்ல. எல்லா மக்களிடமும் எல்லாக் கட்சிக்காரர்களிடமும் அன்பைப் பெருக்கவும் எல்லோரிடமும் நல்ல நெறியை உருவாக்கவும் கட்சி பேதமற்ற முறையில் பாடுபடுகிற முறையில் அவர்கள் சென்றிருப்பார்களேயானால், வினோபா அடிகளைப் போன்று அவர்கள் சென்றிருந்தால், அதை எண்ணி நாம் பெருமைப்பட நியாயம் இருக்கிறது. ஆனால் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் அந்த வழியில் செல்லவில்லை. அவர் சார்ந்திருக்கிற ஒரு கட்சியின் கொள்கைக்காக தன் இடத்தை விட்டு அந்தக் கொள்கையை வளர்க்கப் போயிருக்கின்றார்கள். அதை தியாகம், தியாகம் என்று சொல்லும்போது எனக்கு கொஞ்சம்

18th January 1964] [திரு. இராம. அரங்கண்ணல்.]

வேதனையாகவே இருக்கிறது. பதவியை விட்டு விலகுவதை தியாகம், தியாகம் என்று குறிப்பிடுவதாக இருந்தால் அப்படிப் பேசுகிற கட்சிக்காரர்கள் அந்தப் பதவியை பெரிய இடம், அதை விட்டு விட்டுப் போவது பெரிய தியாகம் என்று கருதுகிறார்களா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். அப்படிக் கருதுவார்களே யானால் திரு. காமராசர் அவர்கள் எதற்காக எந்தக் கட்சிக்காக அந்தக் காரியத்தை செய்தார்களோ அந்தக் காரியத்திற்கு ஒரு புனிதத் தன்மை உருவாக்குவதாக அமைய முடியாது என்பேன்.

இன்றைய சூழ்நிலையில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி விட்டு மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நிலையில் என்னென்ன பிரச்னைகள் உருவாகியிருக் கிறது என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் முதல் அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் தாங்க வேண்டிய சுமைகள் ஏராளமாகத் தெரி கின்றன! 13 ஆண்டுகளுக்குப் பிறகு திட்டங்களைப் பற்றி பிரச்னை இன்று ஒரு பெரிய தலைவலியாக உருவாகி இருக்கிறது. திட்டங்களை வகுத்த அதன் பிதா என்று சொல்லும் பண்டித நேரு அவர்களே இன்று திட்டத்தைப் பற்றி சந்தேகப்படும்படியான நிலைமையும், திட்டத்தை நடத்துகிற பொறுப்பிலுள்ள மத்திய நிதி அமைச்ச ரான திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களே புலி என்று திட்டத்தை வர்ணிக்கவும், நல்ல பளப்பளப்பான பாம்பு என்று திட்டத்தை வர்ணிக்கவும், புலி மேல் இருந்து இறங்கினால் புலி அடித்துக் கொன்றுவிடும் என்றும், பாம்பின் தோலைச் சாமர்த் தியமாக எடுக்க வேண்டுமென்று பேசவுமான நிலையில் திட்டம் விவாதத்திற்குரிய ஒரு பிரச்னையாக இன்றைய தினம் இருக்கிறது. திட்டக் கமிஷன் உறுப்பினரும், பொருளாதார நிபுணருமான திரு. வி. கே. ஆர். ராவ் அவர்கள் புதுடெல்லியில் 20—11—1963-ல் பேசும்போது "திட்டக்கமிஷன் எதற்காக இருக்கிறது என்று எனக்கு புரியவில்லை" என்று கூறியிருக்கிறார்கள். அவர் திட்டக் கமிஷன் உறுப்பினர்! அவர் சொல்லுகிறார் இப்படி! அதேபோல் ஆடிட்டர் ஜெனரலாக இருந்த திரு. எ. கே. சந்தா அவர்கள், "500 பெரிய அதிகாரிகளும், இன்னும் சில்லரை அதிகாரிகளும் நிரம்பிய இலாகாவாக திட்டக் கமிஷன் இருக்கிறது அதனால் என்ன பயன் என்று புரியவில்லை" என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. மக்கள் வருமானத்தைப் பெருக்கவும் ஏற்றத் தாழ்வில்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்கவும் திட்டக் கமிஷன் அமைக்கப்பட்டது. ஆனால் அந்தக் குறிக்கோள் நிறைவேறியிருக் கிறதா என்று பரிசீலனை செய்து பார்ப்பதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திரு. மஹாலானோபீஸ் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளாயிற்று. அவர்கள் துருவித் துருவிப் பார்க்கிறார்கள். இன்னும் திட்டக் கமிஷனின் சாதனைகள் என்ன என்பது சரியாகப் புலப்படவில்லை. நம் நாட்டிலுள்ள அறிஞர்கள் மட்டுமல்ல, இன்று நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சியே கூட திட்டக் கமிஷன் பற்றி விவாதித்து பல பல பிரச்னைகளைப்பற்றி வாதிக்கும் நிலையில் இருக்கிறது. நான் இதைச்

[திரு. இராம. அரங்கண்ணல்] [18th January 1964

சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் எதிர்காலத்தில் திட்டத்தை எந்த வகையில் பயன் படுத்தப் போகிறோம் என்ற கொள்கையை இந்த அரசு திட்டவட்டமாக பட்ஜெட் கூட்டத்தின்போது அறிவிக்கவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். திட்டம் பற்றி பேசும்போது இந்த ஆண்டு 68 கோடி ரூபாய் திட்டச் செலவிற்காக செய்ய இருக்கிறோம் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. செலவு இந்த ஆண்டு 60-ல் இருந்து 68 கோடிக்கு அதிகரித்திருக்கிறது. இப்படிச் செலவு அதிகமாவதால் மட்டும் அதிகப்படியான காரியங்களை செய்கிறோம் என்று சொல்ல முடியாது! இந்த 68 கோடியில் மத்திய அரசு வழங்க இருக்கிற தொகை 40 கோடி என்று சொல்கிறார்கள். மீதியுள்ள 28 கோடி ரூபாயை நம் அரசு எப்படி சமாளிக்கப் போகிறது? வரி போட்டால் சென்ற ஆண்டும் வரி போடப்பட்டது. காங்கிரஸ் அரசாங்கம் வந்த காலத்திலிருந்து வரி மேல் வரி போட்டுக் கொண்டு வந்து இனி எந்த வரி போடுவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே வருகிற நிதிநிலை அறிக்கையில் வரி போடாத வகையில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவர் வரி போடுவது பற்றி சொல்லியிருக்கிறார். "மறைமுக வரிகளை அதிகமாக அரசாங்கம் விதித்த காரணத்தினால்தான் உயர்ந்திருக்கிறது. அதிலும் முக்கியமாக விற்பனை வரியைக் குறிப்பிட வேண்டும். இந்த வரிகளைப் பற்றி புனர்பரிசிலனை செய்தால் விலைவாசி குறையலாம்" என்று கூறியிருக்கிறார். அவர் வேறு யாருமல்ல, மத்திய அரசில் உள்ள நிதி அமைச்சரான திரு. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் 22—10—1963-ல் சென்னையில் பத்திரிகை நிருபர்களைக் கண்டு பேசிய நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நாம் கவனத்தில் வைத்துக் கொண்டு, வரி போடாத வகையில் திட்டச் செலவிற்கான பணத்தை, எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இப்படிச் சொல்கிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ன யோசனைகளைச் சொல்ல இருக்கிறது என்று எதிர்க்கட்சியிலிருந்து கேட்கலாம். நான் ஒன்று கூற விரும்புகிறேன்.

திட்டத்தினால் பலன் ஏற்படாதது மட்டுமல்ல, வரிக் கொடுமையினால் மக்கள் வாடுகிறது மட்டுமல்ல, விலைவாசிக் கொடுமையால் மக்கள் கஷ்டப்படுவது மட்டுமல்ல! காங்கிரஸ் மகாசபையில் கூட, பாராளுமன்ற உறுப்பினரும், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டித் தலைவருமான திரு. தியாகி அவர்கள் ஒரு வாசகத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "இந்திய துணைக் கண்டத்திலுள்ள தனி மனிதன் ஒவ்வொருவனும் 80 ரூபாய்க்கு கடனாளியாக இருக்கிறான்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் 3 அணாவிலிருந்து 7 அணா வரையில் தான் ஒரு நாள் சம்பாத்தியம் இருக்கிறது என்று கணக்கு சொல்லப்படுகிறது. வருமானம் போதாத நிலையில், விலை வாசிகள் உயர்ந்து வரும் நிலையில், வரி மேல் வரி கொடுக்க வேண்டுமென்ற நிலையில், இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு ஏழை மகனும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான்! அதை நீக்க

18th January 1964] *[திரு. இராம. அரங்கண்ணல்]*

நம் அரசாங்கம் செய்யப் போகிற காரியங்கள் என்ன? ஆனால், திட்டம் நிறைவேற வேண்டும். செலவுக்குப் பணமும் வேண்டும். இதை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றி நான் ஒரு கருத்து கூற விரும்புகிறேன். புவனேசுவரம் மகாசபையில் கூட பற்பல கருத்துக்கள் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களால் கூறப் பட்டிருக்கிறது. பாங்குகளை தேசியமயமாக்க வேண்டுமென்று பேசப்பட்டிருக்கிறது. சினிமாத் தொழிலைத் தேசியமயமாக்க வேண்டுமென்று பேசப்பட்டிருக்கிறது. அதேபோல் இந்த மன்றத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நாங்கள் வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். பஸ்களை தேசியமயமாக்க வேண்டு மென்று. உங்கள் கட்சிக்காரர்களே அதுபற்றி இன்றையதினம் பேசுகிறார்கள். இதுவரை நாங்கள் சொன்னதை ஏற்று கொள்ளாது போனாலும் இந்த வருடமாவது அதை ஏற்று நல்லமுறையில் வருமானத்தைப் பெற நிதிநிலை அறிக்கையில் வழி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். புவனேஸ்வரில் நடந்த மகா சபையில் தெற்குப் பகுதியில் இருந்து சென்ற ஒரு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார் "3000 கோடியிலிருந்து ரூ. 7000 கோடி வரை பணம் பதுக்கப்பட்டிருக்கிறது பணக்காரர்களால்" என்று. இன்று காலைப் பத்திரிகையில் பார்த்தேன். கேரள மாநில முதல் அமைச்சர் திரு. சங்கர் அவர்கள், "3000 கோடி ரூபாய் பதுக்கல் பணம், கருப்புப் பணம், ப்ளாக் மனி பணக்காரர் களிடம்", குவிந்திருப்பதாக கூறியிருக்கிறார்கள். இக்கருத்து காங்கிரஸ் மகாசபையிலும், காங்கிரஸ் வட்டாரத்திலும் இன்று பலமாகப் பேசப்பட்டு வருகிறது. அப்படி இந்திய உப கண்டத்தில் 3000 கோடி ரூபாய் பதுக்கப்பட்டிருக்கின்றது என்றால் நம் மாநிலத் தில் கிட்டத்தட்ட 500 கோடி 300 கோடியாவது பதுக்கல் பணம் இருக்கக்கூடும். அதை எடுக்க அரசு என்ன செய்யப் போகிறது? பணக்காரர்களிடமிருந்து அதை தேடி எடுக்கப் போகிறதா? அதை எடுத்தால் நாம் வரி போடாமலேயே திட்ட வேலைகளை நல்ல முறையில் நிறைவேற்ற முடியுமே! அதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டுமென்று நிதி அமைச்சரும், மதி அமைச்சரும், நம் முதல் அமைச்சருமாக விளங்குகிற உயர்திரு பக்தவத்சலனார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நாட்டின் பொருளாதாரப் பிரச்னையை நல்ல முறையில் தீர்க்க வேண்டும். அடுத்து, விவசாயம் பற்றி பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். உற்பத்தியைப் பெருக்க வேண்டும், பெருக்கவேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதுபற்றிய கருத்துக்கள் மாதத்திற்கு மாதம் ஒரு கருத்து வருகிறது. எப்படிக் கல்விப் பிரச்னையை குழப்பிக் குழப்பிக் கடைசியில் எந்த முடிவிற்கு வருவது என்று தெரியாமல் இருந்துகொண்டிருப்பது போல் விவசாயப் பிரச்னையிலும் அரசியல் காரணத்திற்காகப் பல விதமாக குழப்பிக் குழப்பித் திட்டவட்டமான முடிவை எடுக் காமல் இருக்கிறார்கள். மூட்டை ஒன்று 10 ரூபாய்க்கு வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள், 20 ரூபாய்க்கு வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் பேசினார்கள். ஆனால் தனிப்பட்ட பண்ணையாளர்கள் 25 ரூபாய்

வரையில் விற்பதற்கான வழிவகைகள் இருக்கின்றன. இப்படியிருந்தால் எப்படி உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். மேலும் நம்முடைய அரசாங்கம், பாலார் பேஸினில் சில சலுகைகள், ரசாயன கூப்பன் தருவது போன்ற சில வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது. இது எல்லாம் போதுமா? ரசாயன உரத்தைப் பொறுத்த அளவில் சில கருத்துக்களை கவர்னர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் இரும்பு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை ரசாயன உரத்தைப்பற்றி குறிப்பிடுகையில் "இந்தியாவில் எந்த இடத்திலும் இல்லாத அளவுக்கு இங்கு விலை அதிகமாக இருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் இந்திய சர்க்கார் சமீபத்தில் பரூனி, துர்க்காபூர், உதயபூர் போன்ற இடங்களில் ரயானத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தப்போவதாக தெரிகிறது. அதோடு நம் மாநிலத்திலும் இரண்டு உரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று நம் சர்க்கார் சிபாரிசு செய்திருப்பதாக அறிகிறேன். அந்த சிபாரிசு வெறும் சிபாரிசாகப் போய் விடாமல் நம்முடைய மாநிலத்தில் இரண்டு உரத் தொழிற்சாலை நிச்சயமாக ஏற்படுத்துவதற்குரிய முயற்சியினை இந்த சர்க்கார் எடுக்க வேண்டும். அப்போது நம்முடைய உர சம்பந்தமான தொல்லைகள் ஓரளவுக்கு நீங்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நமது நாட்டிலுள்ள மத்திய மக்களைப் பொறுத்த வரையில் நமது அமைச்சரவைக்கு ஓர் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். சென்னை நகரம் 'ஏ' பிரிவு ஆக்கப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கின்றோம். இதன் பலனை மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள விகிதங்கள் உயர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மாநிலத்தில் இருக்கின்ற நம்முடைய சர்க்கார் சிப்பந்திகளும் இந்த பயன் கிடைக்கின்ற வகையில் வருகின்ற நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யவேண்டும் என்று நமது முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஐக்கிய மாகாணத்தில் விவசாயப் பல்கலைக் கழகத்தில் பேசியபோது, சிலகருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். "நம்முடைய விவசாயிகள் மிகவும் பண்பட்டவர்கள், நல்ல ஆற்றல் உடையவர்கள், ஆனால் அவர்களை வழிபடுத்தி செல்லுகின்ற தலைமை திறமையற்றதாக இருப்பதினால் தான் விவசாயிகளால் அதிகப்படியான அளவுக்கு உற்பத்தி பெருக்கத்தில் ஈடுபட முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்", என்று குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். இதையும் நமது அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசியைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம், விலைவாசி உயர்வை தடுப்பதற்காகச் சர்வ கட்சிகள் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்துங்கள், என்று கெஞ்சிக் கெஞ்சி கேட்டுக்கொண்டது. அப்போதே இதற்கு ஒப்புதல் கொடுத்

திருந்தால் இந்த நிலைமையை ஓரளவுக்குத் தடுக்க முயற்சித்திருக்க முடியுமே! ஆனால் இப்போது நீங்களே விலைவாசியைப்பற்றிப் பேசுகின்றீர்கள்! இப்போது இதைப்பற்றி உணருகின்ற நீங்கள் அன்றைக்கே ஏன் சர்வக் கட்சியினரையும் சேர்த்து ஆலோசித்து விலைவாசியை குறைப்பதற்குப் பாடுபட்டிருக்கக்கூடாது? அப்போது நீங்கள் விலைவாசி ஏறி இருக்கிறது என்பதையே ஒத்துக் கொள்ளவில்லை. பின்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 6000, 7000 தொண்டர்களை ஆறு மாதம் மூன்று மாதம் தண்டனை அனுபவித்து தொல்லைகளுக்கு உள்ளாக்க நேரிட்டது. அன்றைக்கு அதைப் பார்த்து ஏளனம் செய்தவர்கள் இன்றைக்கு இந்தப் பிரச்னைக்கு மக்களுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள். நாடு இன்றைக்கு உங்களைப் பார்த்துக் கேட்கிறது, இதற்கு உங்களுடைய பதில் என்ன? ஓராண்டுக்கு முன்னால் இதைப் பிரச்னையை நாங்கள் சொன்னபோது கட்சிக் கண்ணோட்டத்துடன் இதைப் பார்க்கத்தான் உங்களுக்கு பெருந்தன்மை ஏற்பட்டதே ஒழிய, உண்மையிலேயே இருக்கின்ற சிக்கலை புரிந்து கொள்வதில் நீங்கள் அக்கறை காட்டவில்லை. விலைவாசி உயர்வைப்பற்றி மற்றக் கட்சிகள் எல்லாம் எடுத்துச்சொல்லும்போது, ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள் அலட்சியமாக இருக்கின்றார்கள் என்றால் என்ன பொருள்? உங்களுக்கு மட்டும் தானா இந்த நாட்டை ஆளுவதற்கு உரிமை இருக்கிறது? அந்த உரிமை மற்றவர்களுக்கு இருக்கின்றது என்று எண்ணுகின்ற அந்த பெருந்தன்மை ஏன் உங்களுக்கு வரக்கூடாது? நான் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கழிந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் உருப்படியாக, என்ன சாதித்திருக்கிறீர்கள் என்பது புரியவில்லை. வருகின்ற நிதிநிலை அறிக்கை தயார் செய்கின்ற நேரத்திலாவது, கழிந்த 13 ஆண்டுகாலமாக என்னென்ன சாதனைகள் நடந்திருக்கின்றன என்பதைப்பற்றி நால் வடிவாக, சுருக்கமாக, தயவு செய்து தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு இனி மேலாவது எதிர்காலத்தில் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில் இதற்கென்று எல்லாக்கட்சி அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை அமைப்பதற்கு அரசினர் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மொழிப்பிரச்னையைப்பற்றி பலர் பேசினார்கள், நான் அதிகம் பேசவிரும்பவில்லை.

மேலும் கவர்னர் அவர்களுடைய உரையில் சென்ற முதலமைச்சர் அவர்களைத்தான் பாராட்டியிருக்கிறார். ஆனால், நான் என் கட்சியின் சார்பில் புதிதாக வந்திருக்கும் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றேன்.! நமது முதலமைச்சர் அவர்கள் இன்னும் பல நாட்கள் உடல் நலத்தோடு இருந்து, கட்சி கண்ணோட்டமில்லாமல் நாட்டுக்கு நன்மை செய்கின்ற வகையில் நல்ல பல காரியங்களை செய்ய வேண்டும். அரசியல் பண்பாடுகளை எல்லாம் வளர்க்க வேண்டும் என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதன் அடிப்படையில் அரசாங்கம் செய்கின்ற எல்லா நல்ல காரியங்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தன் ஒத்துழைப்பை

[திரு. இராம. அரங்கண்ணல்] [18th January 1964

எப்போதும் கொடுக்க தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். முன்னால் ஆவடி சோஷியலிசமாக இருந்து இப்போது டெமாக்ரட்டிக் சோஷியலிசமாக மாறியிருக்கின்ற இந்த வேளையில் புதிய திட்டங்களை பல நல்ல காரியங்களை சமதர்ம நோக்கத்தோடு நமது மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் இந்த ராஜ்யத்தினுடைய வளர்ச்சியைப் பற்றியும், அதற்கு காரணமாக இருந்தவர்களைப்பற்றியும், சிறந்த முறையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதோடு அவர்கள் மனதில் ஏற்பட்ட கவலை எல்லாம் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற விலையேற்ற நிலைமைகள் அவர்களுடைய மனதை உறுத்திக் கொண்டிருப்பதைத்தான் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உணவுப் பிரச்னையைப் பற்றியும் விலைவாசி ஏற்றத்தைப்பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதில் என்னுடைய கருத்து என்னவென்றால், வெறும் உணவு உற்பத்தியினால் மட்டும் விலைவாசி உயர்வை தடுத்து விட முடியாது என்பது தான். மக்களுடைய கொள்ளும் சக்தி அதிகரிப்பதும் இதற்கு ஒரு காரணம் என்று நினைக்கிறேன். நாம் எவ்வளவு வேகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அளவுக்கு மக்களுடைய பெருக்கமும் கொள்ளும் சக்தியும் பெருகிக் கொண்டிருக்கிறது, அதோடு சேமிப்பைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு சேமிக்க முடியுமோ அந்த அளவுக்கு கவனம் செலுத்திவருகிறோம். இருந்தாலும் கூட, நாம் உற்பத்தி செய்கின்ற பொருட்களில் அதிக அளவும் வியர்த்தமாகிக்கொண்டிருக்கிறது. அதை ஓரளவுக்கு தடுத்தால் நமது நிலைமை ஓரளவுக்கு சீர்படும் என்று நான் கருதுகின்றேன். இன்றுள்ள திட்டப்படி ரைஸ் மில்களின் மூலமாக ப்ரக்யோர் செய்வது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதில் முன்பிருந்ததைவிட அவியல், கொள்முதல் இவைகள் எல்லாம் ஓரளவுக்கு குறைந்திருப்பதாக கணக்கு காட்டப்படுவதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் அரசாங்கத்தினிடம் தானே கணக்குக் கொடுக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் தங்களுடைய செலவுகளை எல்லாம் அதிகப்படுத்தி, ஸேல்ஸ் டாக்ஸ், இன்கம் டாக்ஸ்களில் தப்பித்துக்கொள்வதற்கும் கணக்குகளை எல்லாம் தவறாக அரசாங்கத்தினிடம் காண்பிக்காத அளவுக்கு நல்ல முறையில், ஜாக்கிரதையாக பரிசீலனை செய்ய வேண்டும். அதோடு நகர்புறங்களில் பெரிய ஹோட்டல்களில் எல்லாம் நடக்கின்ற விருந்துகள், கேளிக்கைகள் இவைகளில் எல்லாம் உணவுப் பொருட்கள் வியர்த்தமாகிறது. இவற்றை தடுக்கவேண்டும். இதற்கென்று தனியாக சட்டம் கொண்டு வந்தாவது இவற்றை தடுக்க முடியுமா என்பதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும். இதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

18th January 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

மேலும், 50 ஆயிரம் பேர்கள் இருக்கக்கூடிய இடங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கவும் உபயோகிப்போர் கூட்டுறவு ஸ்டோர்கள் ஆரம்பிக்கப்போவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது மட்டும் போதாது, குறிப்பாக கடலோரப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், இவர்களுக்கெல்லாம் பலன் கிடைக்கின்ற வகையில் நகர்ப்புறங்களில் அமைப்பது போன்றே நியாயவிலைக் கடை வசதிகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கவர்னர் பெருமான் அவர்கள் தொழில் வாய்ப்புகளைப் பற்றியும் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற தொழில் வளர்ச்சி பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மைதான், இருப்பினும் ஒரு இனத்தை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் மட்டும் 1,700 பேர்கள் வேலையில்லாமல் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ஜ் ஆபீஸில் பதிவு செய்திருக்கிறார்கள். ஸர்ப்ளஸ் டீச்சர்ஸ் என்ற அளவில் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருந்து வருவதாக தெரிகிறது. இவ்விதம் பார்க்கும் போது, எல்லா ஜில்லாக்களையும் சேர்த்து கணக்கிட்டுப் பார்க்கும்போது ராஜ்யம், முழுமைக்கும் 10 ஆயிரம் அல்லது 12 ஆயிரம் பேர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீசில் பதிவு செய்து விட்டு வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்த நிலைமை இருக்குமானால், 10,000 அல்லது 15,000 பேர்கள் சர்க்கார் ஸ்டைஃபண்ட் கொடுத்து பயிற்சி பெற்றவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் ஆசிரியர்களாக வேலை செய்தால் தான் சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்ட ஸ்டைஃபண்டிலிருந்து விலக்கு இருக்க முடியும். மற்றபடி இருக்குமானால் வாங்கிய ஸ்டைஃபண்ட் திரும்பக் கட்டியாக வேண்டும். ஆசிரியராகப் பணியாற்ற ஆட்கள் தேவை என்று, சர்க்காரிலிருந்து ஸ்டைஃபண்ட் கொடுத்து, பயிற்சி கொடுத்து, அந்த முறையில் படித்தவர்கள் இன்னும் பல்லாயிரம் பேர்கள் வேலையற்று இருக்கும் நிலைமை இந்த வருஷத்திலேயே இருக்குமானால், வரக் கூடிய வருஷத்தில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்று அவர்களெல்லாம் வெளியே வரும்போது அந்த ஆசிரியர்கள் தொகையையும் சேர்த்துப்பார்த்தால், உண்மையில் முன்பு ஏற்றுக்கொண்டிருந்த 1 : 35 என்றாலும், இப்போது மாறியிருக்கிற 1 : 45 என்ற விகிதாச்சாரத்தை எடுத்துக்கொண்டாலும் இது போன்ற திட்டங்கள் மூலமாக இதற்கு ஒரு பரிகாரம் கண்டு விட முடியுமா என்று அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்பது எனது கோரிக்கை. உண்மையில் நம் தேவை, அதாவது கட்டடத் தேவை, பண வசதி, ஆசிரியர்கள் சங்கியை எல்லாம் பள்ளிக்கு வரக்கூடிய இத்தனை குழந்தைகளுக்கு இத்தனை ஆசிரியர்கள் தேவை என்று அந்த முறையில் தொகையைக் கணித்து, கடந்த பல வருஷங்களுக்கு முன்பே திட்டமிட்டோம். 1965-ம் வருஷத்திற்குள் 6 முதல் 11 வரை வயதுள்ள ஆண் பெண் எல்லோரும் 5-வது வகுப்பு வரையில் கட்டாயக் கல்வி பெற வேண்டும் என்ற முறையில் ஒரு நியதியை வகுத்துக்கொண்டோம். இன்றைய தினம் பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்கள் வேலையின்றி

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [18th January 1964

இருக்கும் நிலைமையில் கணித்த கணக்கு சரிதானு, கல்வி இலாகா சரியான முறையில் யோசனை கொடுக்கிறதா, கணிதத்தில் தவறு ஏதேனும் இருக்கிறதா என்று நிச்சயமாக அவசரமாகப் பரிசிலனை செய்ய வேண்டும்—இதைப் பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவிலே சமீபத்தில் மழை ஏற்பட்டதால் பலன் உண்டு. மழையினுல் ஏற்பட்ட பலன் ஒருபுறம் இருக்க, அதே நேரத்தில் ரஸ்தாக்கள், சிறிய பாலங்கள் எல்லாம் பாதிக்கப் பட்டிருக்கின்றன. திருச்செந்தூர் போன்ற தாலுகாக்களில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களில் வாழை, தென்னை மற்றும் நன்செய்ப் பயிர்கள் இவைகளுக்கு லட்சக் கணக்கான ரூபாய் அள வுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு எந்த அளவுக்குப் பரிகாரம் காண முடியும், நிரந்தரமாக ஏதாவது வழி செய்ய முடியுமா, ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று அரசாங்கம் கவனம் செலுத்துவது நல்லது.

நிச்சயமாக நாம் எல்லோரும் அபேதவாதத்தில் நம்பிக்கை வைத்தாகிவிட்டது. இந்த உரையிலே கவர்னரும் அதைப் பற்றித் தெளிவாகக் கொடுத்திருக்கிருர். திட்டங்களினுல் வரு கிற வளர்ச்சி, வரக்கூடிய பலன் யாரோ ஒரு சிலர் கையில் சிக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படு கிறது. வளர்ச்சி வேகம் ஒன்று இருக்கிறது. சரிசமமாக விநி யோக காரியங்கள் நடைபெறவேண்டும் என்பது ஒன்று. எதிர்த் தரப்பில் கதர் இயக்கத்தைப் பற்றிக் குறை சொன்னுலும் உண்மை யில் சரிசமமான விநியோகத்திற்கு, சோஷலிஸத்திற்கு வித்தாக அது இருக்கிறது. அன்றே இந்த சோஷலிஸத்திற்கு வித்திட்ட பெருமை காந்தியடிகளைச் சாரும். ஆகையால் அது புனிதச் சின்னமாகப் போற்றுதற்குரிய ஒன்று என்று காங்கிர ஸில் வைத்துக்கொண்டிருக்கிறோம். அதுவே இன்றைய தினம் மருந்து, எதிர் காலத்துக்கும் மருந்தாக இருக்கும். இன்னும் ஆங்காங்கு உற்பத்தியாகக் கூடியது சரி சமமாக விநியோகமாக வேண்டும். அது மாத்திரமல்லாமல் சரியான நிர்வாக அமைப்பும் இருக்கவேண்டும். காரியம் சரியாக நடக்கிறது என்றுல், ஏழை எளியவர்களுக்கு, கிராம மக்களுக்குப் பொருள்கள் அவர்கள் கை யில் சிரமமில்லாமல், அவர்களுக்குப் பளு இல்லாமல் கிடைக்கிறது என்ற நிலையை அமைப்பது என்பது நமது பொறுப்பு. அந்தக் கண்ணேட்டத்தோடு பார்க்கும்போது எனக்குச் சில ஆலோசனை கள் தோன்றுகின்றன. சில அமைச்சர்களைப் பொறுத்த வரை யில் அவர்கள் அதிகப் பளுவை ஏற்றுக் கொண்டு காரியங்களைச் செய்கிருர்கள். அவர்களுடைய பளுவைக் குறைக்கலாம். இப் போது ஒன்றிரண்டு இனங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்பு கிறேன். சில இலாகாக்களில் முன்பு இருந்த நிலைமை இல்லாமல் இப்போது திருத்தம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக பி.டபிள்யூ. இலாகா தண்ணீரை விற்றுக்கொண்டிருக்கிற இலாகா என்ற நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருப்பது பெருமைக்குரியது. அதே மாதிரி இன்னும் மாறுதல் அடைய வேண்டிய இலாகாக்கள் பல உண்டு. அதன் மூலமாகத்தான் கிராம மக்களுக்குப் பலன்

[18th January 1964 [திரு. எம். எஸ். செல்வராஜன்]

ஏற்படும். குறிப்பாக ரெவின்யூ இலாகாவை நல்ல முறையில் கண்காணிக்கவேண்டும். அதே போல போலீஸ் இலாகாவிலும் கண்காணிப்பு வேண்டும். தாலுகா ஆபீஸில் நிச்சயமாக சரிவரக் காரியங்கள் சிரமமில்லாமல் இருக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்பட ரெவின்யூ அமைச்சர் என்று தனியாக இருந்து அவருக்கு வேறு எந்த இலாகா பொறுப்பும் இல்லாமல் இருக்க வேண்டும். அதே மாதிரித்தான் போலீஸ் இலாகாவின் பொறுப்பையும் தனியாக வைக்க வேண்டும். அப்படித் தனியாக வைப்பதன் மூலமாக சாதாரண. கிராமத்தில் இருக்க்க்கூடிய போலீஸ் ஸ்டேஷன் ஆனாலும், தாலுகா ஆபீஸ் ஆனாலும் அவைகளின் செம்மையை சமீப காலத்திற்குள், ஒரு டார்கெட் டேட் வைத்து, குறுகிய காலத்திற்குள், இரண்டு ஆண்டு காலத்திற்குள் அல்லது ஐந்து ஆண்டு காலத்திற்குள், செம்மை உண்டாக்கித்தான் ஆவோம், திருத்தித் தான் ஆவோம் என்ற உறுதி, நங்களைம் அரசாங்கத்திற்கு வேண்டும். அதில் எத்தகைய வளர்ச்சி பெறுகிறோமோ, அத்தகைய முயற்சியின் பலன் மக்களுக்குப் பூர்ணமாக உதவிகரமாக இருக்க முடியும்.

இன்றுள்ள பஞ்சாயத்து அமைப்பின் நன்மை நம் எல்லோருக்கும் தெரியும். பஞ்சாயத்துக்களின் நடைமுறைகள் சிக்கன ரீதியில் கூட கிராம மக்களிடத்தில் பரவலாக ஏற்படக்கூடிய எண்ணம் ஏற்படவேண்டும். தொழிலுக்கு, இண்டஸ்ட்ரியல் எக்ஸ்டென்ஷன் ஆஃபீஸர், கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி போன்றவர்களை எடுத்துக் கொண்டால் இன்றைய தினம் அவர்களுக்கு பஞ்சாயத்து யூனியன்களில் போதுமான அளவுக்கு வேலை இல்லை. இரண்டு அல்லது மூன்று பஞ்சாயத்து யூனியன்களை இணைத்து வைத்து, அவைகளுக்கு ஒரு எக்ஸ்டென்ஷன் ஆஃபீஸர் போட்டு சிக்கனத்தை வலியுறுத்தலாம். அரசாங்க ரீதியிலிருந்து வரும் தொழில் வாய்ப்புகள் மூலமாக இண்டஸ்ட்ரீஸ் பெருகுவதால் ஏற்படுவதோடு பஞ்சாயத்து யூனியன் மூலமாக ஏற்படும் தொழில் வாய்ப்புகளை நாட்டில் பார்க்கிறோம். இப்படி அதிகமாக தொழில் வாய்ப்புகள் வரும்போது இந்த இனத்தில் சாதாரண ஜனங்கள், குறிப்பாக ஹரிஜனங்களுக்கு அதிலே பிரதிநிதித்துவம் உள்ள முறையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறதா என்று பஞ்சாயத்து யூனியன்களைக் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

எலெக்ட்ரிஸிட்டி எக்ஸ்டென்ஷன். ஐந்து ஆண்டு காலத்தில் 100 கோடி ரூபாய் இருந்தது 111 கோடி ரூபாயாகக் கூட வளரத் திட்டம் இருக்கிறது. 15,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லப்படுகிறது. இன்னும் இரண்டு வருஷத்தில் 19,000 கிராமங்களுக்கும் கொடுத்து விடுவோம் என்று சொன்னாலும், ரெவின்யூ கிராமங்களை மாத்திரம் கணக்கில் எடுத்துக் கொண்டு சொல்லுகிறார்கள். என்னுடைய தாலுகாவில் இன்னும் நூற்றுக் கணக்கான ஜில்லாக்களில், ஆயிரக் கணக்கான சிறு சிறு குக்கிராமங்கள், குறிப்பாக ஹரிஜனங்கள் வாழக் கூடிய கிராமங்கள், கடலோரத்தில் மீனவர்கள் வாழக் கூடிய கிராமங்கள் மின்சார இணைப்பு பெறாமல் இருக்கின்றன. ஹரிஜன இலாகாவில்

15 லட்சம் ரூபாய் ஒதுக்கி, வருஷத்துக்கு 1½ லட்சம் ரூபாய் கொடுத்து விட்டால் சிறந்த பரிகாரம் கண்டுவிட முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஸ்பெஷலாக கவனம் செலுத்தி, ரெம்யூன ரேட்டிவ் ஆஸ்பெக்டை அதிகமாகக் கவனிக்காமல் விதிவிலக்குக் கொடுத்தேனும் தீவிர கவனம் செலுத்துவதன் மூலமாக பரவலாக நல்ல பரிகாரத்தைக் கண்டுபிடிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் குதிரைமொழித்தேரி என்ற இடத்தில் 12,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே காண்டூர் பண்ட்கள் அமைப்பதன் மூலமாக மழை காலத்தில் வரும் தண்ணீர் மண்ணை அரித்துக்கொண்டு வீணாகப் போகாமல் இருக்க தடுப்பு அணை மூலமாக அதைத் தடுத்து நிறுத்தி அந்த நிலத்தையும் தண்ணீரையும் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் திட்டம் இருக்கிறது. அது சிறந்த திட்டம் என்பதனால் அதிலே தீவிர கவனம் செலுத்தி நிறைவேற்ற வேண்டும். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் ஃபோர்த் ப்ளானில் ரீ-மாடல்லிங் ஆஃப் எக்ஸிஸ்ட்டிங் சான்ல்ஸில் தீவிர கவனம் இருக்கும், அதிலே ஸப்ஸ்டான்ஷியல் எஃபெக்ட் இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த முறையில் குறிப்பிட்டிருப்பது போதாது. திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த வரையில் அது எவ்வளவு சீக்கிரம் வருகிறதோ அந்த அளவுக்கு பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு தண்டத் தீர்வை கொடுத்து வரும் கஷ்டம் குறையும். இதைப் பற்றி பரிகாரம் தேடுவதைப் பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தீவிர முடிவு எடுத்து நல்ல பலனை நாட்டு மக்களுக்குக் கொடுக்க முடியுமா என்று கவனம் செலுத்துவது நல்லது என்று கேட்டுக்கொள்கிறேன்.

11-30 a.m. * **திரு. கே. பொன்னையன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

சமீப காலத்தில் திராவிட முன்னேற்றக் கட்சியினர் அரசியல் சட்டத்தை எரித்து, இந்தி வருவதற்கு கண்டனத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். தென் மண்டலக் கவுன்சில் பிராந்தியத்தில் ஏறக்குறைய 10½ கோடி மக்கள் இருக்கிறார்கள். அதில் தமிழ் நாட்டில் ஏறக்குறைய 3 கோடி, 3 கோடிக்கு சற்று அதிகமாகவே மக்கள் இருக்கிறார்கள். தென் மண்டலக் கவுன்சில் பிராந்தியத்தில் கேரளம், ஆந்திரம், இன்னும் மைசூர் போன்ற நாடுகளில் 'கம்பல்சரியாக' இந்தியைப் படிக்கச் சொல்லி வருகிறார்கள். ஆனால், தமிழ் நாட்டில் இந்தி படிக்கக்கூடாது என்று நமது திராவிட முன்னேற்றக் கட்சியினர் பிரசாரம் செய்து வருகின்றனர். நமது வீட்டிலுள்ள குழந்தைகள் ஒரு பாஷையோடு இன்னொரு பாஷையையும் சேர்த்துப் படித்தால் என்ன நஷ்டம் வந்துவிடுமோ தெரியவில்லை. என்னுடைய பையனே இரண்டு, மூன்று பாஷைகள் அதிகமாக படித்தால் எனக்குச் சந்தோஷம். அதே மாதிரி அவர்கள் பையன்கள் ஒரு பாஷையோடு இன்னொரு பாஷையையும் சேர்த்துப் படித்தால் அவர்களுக்கும் சந்தோஷம். தமிழைப் போற்றி வளர்த்த திருவள்ளுவர் பெரிய 'ஸான்ஸ்கிரிட்

18th January 1964] [திரு. கே. பொன்னையன்]

ஸ்காலர்' என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது இந்தி படிக்க வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள் பிற்கால மாணவர்களால் சபிக்கப்படுவார்கள். வருங்கால மாணவ, மாணவிகள் நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்றால், அவர்கள் அவசியம் இந்தி படித்தே தீரவேண்டும். இந்தி அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாஷை. அங்கீகரிக்கப்படாத ஒரு பாஷையை படிக்கலாமென்று சொல்லுகிறவர்கள், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாஷையைப் படிக்கக்கூடாது என்று ஏன் சொல்லுகிறார்கள், அதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை. எதிர்கால சந்ததியார்கள் இம்மாதிரி ஒரு அரசியல் கட்சி இருந்ததே என்று பின்னால் சபிக்க நேரிடும், பின்னால் அவர்கள் கட்டாயம் வசை மொழி சொல்லுவார்கள். திராவிட நாட்டுக் கருத்தை எப்படி மாற்றிக்கொண்டார்களோ, அதே மாதிரி இந்தி விஷயத்திலும் தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டால், அவர்கள் மிகவும் வரவேற்கப்படுவார்கள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்து, விலைவாசி ஏற்றத்தைப் பற்றி சொல்லுகிறார்கள். அதைக் குறைப்பதற்கு கோவாப்பரேடிவ் சொஸைடீஸ், கன்ஸ்யூமர்ஸ் சொஸைடிகள் வைப்பதாகச் சொல்லுகிறார்களே ஒழிய, அது நடைமுறையில் மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. வால்பாரை ஏரியாவில் கன்ஸ்யூமர்ஸ் கூட்டுறவு சொஸைடி ஏற்படுத்தப்படும் என்று போன பட்ஜெட்டிலேயே சொல்லப்பட்டது. ஆனால், தோட்ட முதலாளிகள் அதற்கு செவி சாய்க்கவில்லை. கீழ் நாட்டிலேயே விலைவாசி அதிகம் என்று சொன்னால், மலைப் பிராந்தியத்தில் விலைவாசி உயர்வைப் பற்றி சொல்லத் தேவையே இல்லை. கீழ்ப் பிரதேசத்தில், ஏறக்குறைய 40 மைல் தூரத்தில் இருக்கிற பொள்ளாச்சிப் பிரதேசத்தில் ஒரு ரூபாய்க்கு வாங்கக்கூடிய சாமான், வால்பாரை மலைப் பிரதேசத்தில் ரூ. 1—4—0, 1—6—0 என்று சொல்லுகிறார்கள். நாற்பது மைல் மலைப் பிரதேசத்திற்குச் செல்லும் ரோடு 'காட் ரோடு' அந்த 'காட் ரோட்டில்' சாமான்களைக் கொண்டுவருவதற்கு ஏற்படும் போக்குவரத்து வாடகையையும் சேர்த்து அந்த விலைக்குத்தான் சாமான்களை விற்பனை செய்கிறார்கள்.

வால்பாரைப் பகுதி திட்டப் பிரதேசம். பரம்பிக்குளம்-ஆளியார் ப்ராஜக்ட் மிக வேகமாக நிறைவேறிக்கொண்டிருக்கிற திட்டப் பகுதி இது. இந்த விலைவாசி அதிகத்தை மனதில் கொண்டு, இந்தத் திட்டப் பகுதியில் வேலை செய்பவர்களுக்கு ஹில் அலவன்ஸ், மற்றும் போக்குவரத்து வசதி முதலிய வசதிகளை அவசியம் செய்து தரவேண்டும். நாட்டில் பெரிய அணைகளை நிர்மாணிக்கும் வேலையில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவசியம் இந்தச் சலுகைகளை அளிக்கவேண்டும். பரம்பிக்குளம்-ஆளியார் ப்ராஜக்டில் வேலை செய்பவர்கள் இதற்கு முன்னால் லோயர் பவானி அணைக்கட்டில் வேலை செய்தவர்கள். நாட்டுக்காகத் தொடர்ந்து அவர்கள் சேவை செய்துகொண்டு வருகிறார்கள். எங்கெங்கே அணைகள் கட்டப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அவர்கள் போய் வேலை செய்து வருகிறார்கள். அம்

[திரு. கே. பொன்னையன்] [18th January 1964

மாதிரி வேலை செய்பவர்களுக்கு, குறைந்தது 5 வருஷம் ஸ்டாண்டிங் இருந்தால், அவர்களை பெர்மனெண்ட் செய்துவிடவேண்டுமென்று நான் சர்க்காரை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய உற்பத்திப் பெருக்கம் என்று சொல்கிறார்களே ஒழிய, விவசாயிகளுக்குப் போதுமான ஊக்கத்தைக் கொடுப்பதில்லை. காரணம், நாம் எவ்வளவுதான் அணைகளைக் கட்டினாலும், அந்த அணைகளுடைய முழுப் பயனையும் விவசாயிகள் உபயோகப்படுத்துவதில்லை, அவர்கள் அம்மாதிரி உபயோகப்படுத்துவதற்கு சர்க்கார் விடுவதில்லை. உதாரணமாக, என்னுடைய தொகுதியில் ஆளியார் அணை அநேகமாக முடிந்துவிட்டது. இப்பொழுது ஏறக்குறைய 17,500 ஏக்கருக்கு தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 'ரொம்பவும் சதுப்பாக உள்ள இடத்தில் நெல்லை பயிரிட்டுக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். 'டோடல் ஏகரேஜில்' ஐந்தில் ஒரு பங்கு நிலத்தில் நெல் போட்டுக்கொள்ளலாம் என்று சர்க்கார் சொல்லுகிறார்கள். ஐந்தில் ஒரு பங்கு என்று சொல்லும்பொழுது, அந்த வெட் லாண்ட்ஸுக்கு பகல் தண்ணீர் உபயோகப்படுத்துகிறோம இரவுத் தண்ணீர் உபயோகப்படுத்துவது கிடையாது. இரவுத் தண்ணீர் உபயோகப்படுத்தினால், ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு நிலம் நஞ்சை சாகுபடி செய்யலாம். ஆனால் அப்படி சாகுபடி செய்வதற்கு சர்க்கார் விடுவதில்லை. அப்படித் தப்பித் தவறி சாகுபடி செய்தாலும், அதற்கு தண்டத்தீர்வை போட்டுவிடுகிறார்கள். தண்டவரி போட்டு விவசாயிகளை அதைக்க கட்ட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்க.

அடுத்தபடியாக, உரம் உபயோகப்படுத்துவது எப்படி என்று விவசாயிகளுக்குத் தெரிவதே இல்லை. உரத்தினுடைய விலையும் அதிகம். டன்னுக்கு ரூ. 100 குறைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது ஒரு பெரிய காரியம் அல்ல. விவசாயிகளுக்கு உரத்தை வாங்குவதற்குப் போதுமான வசதி இல்லை. உரத்தின் விலையும் உண்மையிலேயே அதிகம்தான். உரத்தை மட்டும் போட்டால் போதாது. பயிர் பாதுகாப்பு, மண் வளப் பாதுகாப்பு ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது. உரத்தை மட்டும் கொண்டு போட்டுவிட்டால், சில பூமிகள் கெட்டுவிடுகிறது. தழை சத்து, இன்னும் மற்ற சத்துக்களெல்லாம் வேண்டும். இந்த டிபார்ட்மெண்டிலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பூமிகளை வந்து பார்வையிட்டு எந்த உரம் எந்த பூமிக்குப் போடவேண்டும் என்பதை விவசாயிகளுக்குத் தெரிவிக்க வேண்டியது மிகவும் அவசியம். நவீன முறையில் விவசாயம் செய்வது பற்றி தெரியாமல், கிராமத்தில் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இது பற்றி சர்க்கார் அதிகாரிகள் எடுத்துத் தெரிவிக்க வேண்டும்.

மலைப் பிரதேசங்களில் ஹைவேஸ் டிபார்ட்மெண்டு ரோடுகளை செப்பனிட்டு நல்ல ரோடுகளாக வைத்திருக்கிறார்கள். இந்த ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் மஸ்தூர்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது.

18th January 1964] [திரு. கே. பொன்னையன்]

அவர்களுக்கு ரூ. 46 தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி விலைவாசி உயர்ந்திருக்கக்கூடிய காலத்தில் அவர்கள் இவ்வளவு குறைந்த சம்பளத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. விலைவாசி உயர்வை முன்னிட்டு, அவர்கள் ரூ. 46 வாங்கிக்கொண்டு எப்படித்தான் வாழ்க்கையை நடத்த முடியும் என்பதை சிந்தித்துப் பார்த்து, அவர்களுக்கும் ஹில் அலவன்ஸ், போக்குவரத்து வசதிகள் போன்ற சலுகைகளை அளிக்க முன்வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. ப. உ. சண்முகம்:** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நடைபெறும் விவாதத்தில் எனது கருத்துக்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன். 1957-ம் ஆண்டில் பதவி ஏற்றது முதல், கனம் பிஷ்ணுராம் மேதி அவர்கள் இந்த மன்றத்தில் ஆற்றிய உரைகளை கூர்ந்து பார்த்தால், ஆண்டுதோறும் நாம் கண்டதொன்று. விலைவாசி ஏற்றத்தைப்பற்றி தொடர்ந்து குறிப்பிட்டு, அவர்கள் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி வருத்தம் தெரிவித்ததற்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மெத்த அக்கறை எடுத்துக் கொண்டு, 'நாட்டில் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது' என்று கவர்னர் அவர்கள் ஆண்டுதோறும் வருத்தம் தெரிவிப்பது உள்ளபடியே எப்படி இருக்கிறது என்று கேட்டால், திருவரங்கம் கோயிலில் நாள்தோறும் திருப்பள்ளி எழுச்சி பாடும் பக்தரைப்போல் இருக்கிறது. இருந்தும்கூட இந்தப் பிரச்னைக்கு இன்னும் ஒரு முடிவு காணப்படவில்லை. திருவரங்கம் கோயிலில் திருப்பள்ளி எழுச்சி பாடும் 'பக்தரைப்போல்' இருக்கிறது என்று நான் கூறியதற்குக் காரணம், தினமும் திருப்பள்ளி எழுச்சி பாடியும், பரமன் எழுந்தபாடில்லை, பாட்டும் நின்றபாடில்லை. விலைவாசி ஆண்டுதோறும் ஏறுகிறது. ஏறுகின்ற விலைவாசியைக் குறைப்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை, அதற்குப் பரிகாரம் ஒன்றும் தேடப்படவில்லை.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், விலைவாசி ஏற்றத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு புதிய காரணத்தைக் கூறி வருகிறார்கள், அதற்கு ஒரு வழிவகையும், பரிகாரமும் காணப்படவில்லை. சர்க்காரை நான் குற்றம் சாட்ட விரும்புவது என்னவென்றால், பல காரணங்களைக் காட்டி தப்பித்துக் கொள்வதோ, வழிவகை காணும் பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதோ நல்ல அரசாங்கத்திற்கு உகந்தது அல்ல என்பதனை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கை, 5, 6 ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்ட கவர்னர் உரைகள் ஆகியவற்றைப் பார்த்தால், ஒவ்வொன்றிலும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம், அகில இந்திய ரீதியில் இந்தப் பிரச்சினையை இந்திய சர்க்கார் அணுகவில்லை என்று ஒரு முறை சொல்லப்பட்டது. இன்னொரு முறை கூறிய

மாறுபட்ட கருத்து என்னவென்றால், தேசிய அபிவிருத்திக் கவுன்சில் இதைப்பற்றி தந்த கருத்தை எடுத்துக்காட்டி, உணவுப் பொருள்கள் சம்பந்தமாக மொத்த வியாபாரத்தை மாநில அரசே மேற்கொள்ளவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதையாவது ஏற்றுக்கொண்டார்களா என்றால், இல்லை. அப்பொழுது நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் விலைவாசி ஏற்றத்திற்கு ஒரு புது வியாக்கியானம் கொடுத்தார்கள். விலைவாசி நாட்டில் ஏறியதற்குக் காரணம் சர்க்கார் ஊழியர்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுகிற சம்பள உயர்வுதான் என்று புதிய வியாக்கியானம் தெரிவித்தார்கள். சம்பள உயர்வு கொடுக்கிறோம், அதன் காரணமாக வாங்கும் சக்தி பெருகுகிறது, வாங்கும் சக்தி பெருகுவதினால், பொருள்களை மக்கள் போட்டி போட்டுக்கொண்டு வாங்குகிறார்கள், ஒன்றை ஒன்று தூக்கி அடித்துக்கொண்டிருக்கிறது, அதனால் விலை ஏறுகிறது என்று சொன்னார்கள். இன்னொரு முறை சொல்லப்பட்ட கருத்து என்னவென்றால், 'கனரகத் தொழிற்சாலையை ஏற்படுத்தியதினால், விலைவாசி ஏறுகிறது, அது இரண்டு ஆண்டுகள்தான் இருக்கும், அதற்குப் பிறகு நிச்சயம் விலைவாசி உயர்வு நீடித்து நிற்காது, தொலைந்து போகும்' என்பதுதான்.

1959-ஆம் ஆண்டு டிசம்பர் 5-ம் தேதி என்று கருதுகிறேன், தனது உரையில் திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள், சர்க்கார் சார்பாகப் படித்த அறிக்கையில், 'விலைவாசி ஏற்றம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்றதும் நிச்சயம் இருக்காது; இந்த நாட்டில் உணவுப் பொருள் பற்றாக்குறை தீர்ந்துவிடும்', என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "முதல் ஐந்தாண்டுத் திட்ட துவக்கத்தில் மாநிலத்தில் உணவு உற்பத்தி, சர்க்கார் தந்த புள்ளி விவரப்படி, 38 இலட்சம் டன்; முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தவுடன் 44 இலட்சம் டன்னை அது வளர்ந்திருக்கிறது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தவுடன் 53 இலட்சம் டன்னை வளரும்" என்று 1959-ஆம் ஆண்டில் சர்க்கார் சார்பில் ஆற்றிய உரையில் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும்பொழுது இந்த நாட்டில் 53 இலட்சம் டன் உற்பத்தி பெருகும், 53 இலட்சம் டன்னில் 3 இலட்சம் டன் உபரி இருக்கும்" என்று திரு. மேதி அவர்கள் தன்னுடைய உரையில் படித்தார்கள். சர்க்கார் கொடுத்த புள்ளிவிவரத்தில் கோளாறா, அல்லது சொன்னதில் ஏதாவது தப்பித் தவறி சொல்லிவிட்டாரா என்பதை அருள் கூர்ந்து அரசினர் பரிசீலித்து பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "மூன்று இலட்சம் டன் உணவு உற்பத்தி அதிகம்" என்று சொன்னால், நாட்டிலே விலைவாசிகள் விஷம் போல ஏறிக்கொண்டு இருப்பானேன்? அதற்கு என்ன பரிகாரம் தேடியிருக்கிறீர்கள்? எப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறீர்கள் என்று உள்ளபடியே நான் ஆயாசத்தோடு இந்த அரசாங்கத்தைக் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

18th January 1964] *[திரு. ப. உ. சண்முகம்]*

"விலைவாசிகள் ஏறுகின்றன, விலைவாசிகள் ஏறுகின்றன" என்பதை உணர்த்துவதற்காகத்தான், அரசாங்கத்தின் கண்ணைத் திறப்பதற்காகத்தான், நாங்கள் எல்லோரும் சிறைக்குப் போனோம். ஆனால் அதைக் கேலி செய்து, கிண்டல் செய்து, எங்களை இழித்துப் பேசுவதற்கு அதனைப் பயன்படுத்திக் கொண்டீர்கள்.

விலைவாசி ஏற்றம் என்பதை ஒப்புக்கொள்ளுகிற சர்க்கார் அதற்கு உருப்படியான பரிகாரத்தைத் தேடவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்த சர்க்கார் மீது சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கனம் கவர்னர் அவர்கள் அவருடைய உரையில் கனம் காமராஜர் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அந்தப் பாராட்டுதலோடு என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவரைப் புகழுகின்ற வகையில் நானும் சேர்ந்து கொள்ள விரும்புகிறேன். காந்தியாரை எப்படி 'மகாத்மா, மகாத்மா' என்று சொல்லிவிட்டு, அவருடைய கொள்கைகளை எப்படி காற்றில் பறக்க விட்டார்களோ அதே போன்று கோபபந்துநகரில் காமராஜர் ஆற்றிய உரையை நமது சர்க்கார் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்களா? காமராஜர் ஆற்றிய உரையில் மற்ற எல்லா அம்சங்களையும்விட என்னைக் கவர்ந்தது ஒன்றே ஒன்று. நான் பத்திரிகையிலே படித்தேன். சர்க்காரைப் பார்த்து அவர் சொல்லும்பொழுது, 'நீங்கள் போட்டிருக்கிற வரிகள் எல்லாம் குவிந்திருக்கிற செல்வத்தைக் கரைக்கும் முறையில் இல்லை. ஆகவே இரண்டாம் முறையாக யோசனை செய்யுங்கள்' என்று கூறியிருக்கிறார். அப்படிச் செய்வதற்கு இந்த சர்க்காருக்குத் துணிவு இருக்கிறதா? காமராஜரைப் புகழ்வதோடு மட்டும் நின்றுவிடாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் தேடுகின்ற வகையில், குவிந்திருக்கிற செல்வத்தைக் கரைக்கின்ற வகையிலே, வேறு வரிகளைப் போடுவதற்கு இந்த சர்க்கார் தயாராக இருக்கிறதா என்று நான் கேட்கிறேன்.

'நாகரீகம்' என்று நினைத்துக்கொண்டோ என்னமோ, டில்லியிலுள்ள மந்திரிகளும், மாநில மந்திரிகளும் கருப்புப் பணத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். நாட்டிலே கருப்புப் பணம் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க வேண்டாம். மறைக்கவும் வேண்டாம். ஆனால், 'ஒரு குறிப்பிட்ட தொழிலில்தான் கருப்புப் பணம் இருக்கிறது' என்று கூறுவதுதான் விசித்திரமாக இருக்கிறது. பணப் பழக்கம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் கருப்புப் பணம் இருக்கிறது. இதைப் பறிப்பதற்கு, அரசாங்கத்தினுடைய உடைமையாக ஆக்குவதற்கு, தீவிரமான நடவடிக்கைகள் எது எடுத்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் அதன் முழு ஒத்துழைப்பையும் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எங்களிடம் கருப்புப் பணம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இருக்க முடியாது. கேலிக்கு வேண்டுமானால் சொல்லலாம்.

சட்டமன்றத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன், கருப்புப் பணம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்த கட்சியிலிருந்தாலும் சரி, எந்தப்

[திரு. ப. உ. சண்முகம்] [18th January 1964

போர்வையிலிருந்தாலும் சரி, அவர்களைப் பிடிக்க வேண்டும். அவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த அரசாங்கத்துக்கு அப்படிச் செய்யத் துணிவு இருக்கிறதா ? அப்படிச் செய்யுமா ?

மேடை மீது ஏறி, கருப்புப் பணம் சினிமாத் தொழிலில் இருக்கிறது என்று தப்புக் கணக்குப் போட்டுப் பேச வேண்டாம். குவிந்திருக்கிற பணத்தைப் பறிப்பதற்கு—ரூ. 400 கோடியானாலும் சரி, 500 கோடியானாலும் சரி—அரசாங்கம் என்ன வழிவகை வகுத்திருக்கிறது? ஏழைகளுக்குக் கட்டுவதற்குத் துணி இல்லை, குடி இருக்க மனைகள் இல்லை என்று அமைச்சர்களும் பேசுகிறார்கள். நாட்டிலே ஏற்பட்டிருக்கிற விலைவாசி ஏற்றத்திற்கும், பணப் புழக்கத்திற்கும், கருப்பு வியாபாரத்திற்கும் என்ன காரணம் என்று நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன்.

இன்னும் ஒன்றும் கவர்னர் உரையில் பார்த்தேன். பரிதாபத்துக்குரிய சேலம் இரும்பு எத்தனை பரிசோதனைகளுக்கு உள்ளாகியது? ஜேம்ஷெட்பூரில் பரிசோதனை, கிழக்கு ஜெர்மனியில் பரிசோதனை, மேற்கு ஜெர்மனியில் பரிசோதனை, இனி அமெரிக்காவில் நடக்குமென்று சொல்லுகிறார்கள். இந்தப் பரிதாபகரமான சோதனைகள் பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டதா? ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டதா? துர்காபூர் உருக்குத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டதா? ஏன் சேலத்திற்கு மட்டும் ஏற்படுகிறது? தென்னகம் செய்த பாபமா? சேலம் இரும்பை நிபுணர்கள் பரிசோதித்து ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டு சோதனை அமெரிக்காவில் நடக்கும், இன்னொரு ஆண்டு ஜப்பானில் நடக்கும் என்று சொல்லப்படுகிறது. எங்கெங்கே ஆராய்ச்சி சாலைகள் இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த சேலம் இரும்பை அனுப்பிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இறுதியாக என்ன முடிவு எடுத்தார்கள் என்று கேட்கிறேன். இந்தத் தவறான போக்கை மாற்றி, சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு உடனடியாக வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி இறுதி நிலை வரை குழந்தைகள் இலவசமாக படிப்பதற்கு வழிவகை செய்திருக்கிறோம் என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இலவசக் கல்வி அளித்திருப்பது பெருமைக்குரிய விஷயம். அதற்காக சர்க்காருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு நல்ல சர்க்கார் என்று சொன்னால், இலவசக் கல்வி அறிவு மட்டும் கொடுத்தால் போதாது. படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க உத்தரவாதம் கொடுக்க வேண்டும். அப்படி உத்தரவாதம் கொடுக்க முடியுமா? மக்களின் வறுமையைப் போக்குவதற்கு என்ன வழிவகை செய்திருக்கிறார்கள்? வட்டுச் சுரைக்காய்த் திட்டங்களைப் போட்டுவிட்டு, இந்தத் திட்டங்களைத் தந்திருக்கிறோம், இதுதான் எங்கள் கொள்கை, கொஞ்சம் பொறுங்கள், கொஞ்சம் பொறுங்கள் என்று ஒவ்வொரு முறையும் சொல்லுகிறார்களே, அதற்கு என்ன

18th January 1964] [திரு. ப. உ. சண்முகம்]

காரணம்? 'கனரகத் தொழில்களை ஏற்படுத்துகிறோம், அவற்றிலிருந்து உற்பத்தி வெளியே வந்துவிட்டால், விலைவாசி குறையும்' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி ஏழெட்டு ஆண்டு காலம் ஆகிவிட்டது. உண்மையிலேயே இந்த விலைவாசிப் பிரச்சினைக்கும், வரிக் கொடுமைக்கும் உடனடியாகப் பரிகாரம் தேடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசிப் பிரச்சினை சர்வ சாதாரணமான பிரச்சினை அல்ல. ஏழை மக்களை வயிற்றில் அடித்து வைத்திருக்கும் இந்தக் கொடுமைக்கு வருங்காலம் பதில் சொல்லும். இங்கே பேசியவர்கள், உங்கள் கொள்கைகளை எல்லாம் பொது மக்களிடத்திலே சொல்லி, அவர்களுடைய ஆதரவைப் பெற்று வாருங்களேன் என்று சொன்னார்கள். நான் சர்க்காருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இந்த முயற்சியில் நாங்கள் ஒன்றும் பின்வாங்க மாட்டோம், எங்கள் முயற்சி வெற்றி பெற்றே தீரும் என்று. அந்த முறையிலே நாங்கள் பணி ஆற்றிக் கொண்டு வருகிறோம்.

நேற்றைய தினம் பேசிய ஒரு உறுப்பினர், "சுண்டைக்காய் திருவண்ணாமலை ஜெயித்துவிட்டது என்பதற்காக, காமராஜ் அவர்கள் ராஜிநாமா செய்துவிட்டார்" என்று நாங்கள் சொல்லுவதாகச் சொன்னார். அவர், உருளைக்கிழங்குத் தோட்டக்காரராக இருந்தாலும் நான் சொல்லுகிறேன், திருவண்ணாமலை இடைத் தேர்தலினால் காமராஜர் ராஜிநாமா செய்தார் என்று தி. மு. கழகத்தினர் எவரும் சொல்லவில்லை. எங்களுடைய நம்பிக்கைகூட அப்படியில்லை. பத்திரிகையில் படித்த ஒன்றைத்தான் எங்கள் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார். திரு. பாட்டில் அவ்வாறு சொன்னாரே, அது சரியா, தவறா என்று கேட்டார். "சுண்டைக்காய் திருவண்ணாமலை" என்று கேலியாகச் சொன்னார்கள். இன்று சுண்டைக்காய் திருவண்ணாமலையாக இருக்கலாம். ஆனால் அதுதான் வருங்காலத்திற்கு பாடமாக அமையுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்களின் உரை காலக் கண்ணாடியாக அமையுமென்று எதிர்பார்த்தேன். அது ஒரு ஜாலக் கண்ணாடியாக இருக்கிறது என்ற என் கண்டனத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** சார், கவர்னர் பெருமான் அவர்களின் உரையின்மீது ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் நாம் வளர்ச்சி அடைந்திருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. தனி மனிதனுடைய வருவாயும் உயர்ந்திருக்கிறது. அதிலும் சந்தேகமில்லை. இருப்பினும்கூட, இன்றைக்கு உயர்ந்திருக்கிற பண்டங்களின் விலை உயர்வானது நமது மக்களின் வருமானத்திற்கு உகந்தபடி இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதையும் கவர்னர் பெருமான் அவர்கள் தமது உரையிலே குறிப்பாக

[திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்] [18th January 1964

எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். எனவேதான் பண்டங்களின் விலையையும் கட்டுப்படுத்த வேண்டுமென்பதையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக அரிசி விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்கான யோசனைகளையும், அதற்காக நாம் செயலாற்றி வருகிற திட்டங்களையும் கவர்னர் அவர்களுடைய உரையிலே எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு அரிசி மில்காரர்களிடம், அவர்களாகவே முன்வந்து கொடுத்த அரிசியை நம்முடைய நியாயவிலைக் கடைகளுக்குக் கொடுத்தோம். அது ஒரு லட்சம் டன்னாக இருக்கவேண்டுமென்பது நமது லட்சியம். ஆனால் அந்த அளவுக்கு எட்ட முடியாமல் போய் விட்டது. ஒரு லட்சம் டன் அளவு நமக்கு அரிசி கிடைக்கவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும்கூட, முக்கியமான காரணம் என்னவென்றால் நாம் ஆரம்ப காலத்திலேயே அதை கொள்முதல் செய்யாததுதான். ஆரம்பத்திலே நாம் அதைக் கொள்முதல் செய்ய ஆரம்பித்திருந்தால் இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிருக்காது. அவர்களும் ஒரு லட்சம் டன் அளவை கொடுத்திருக்க முடியும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அவர்கள் கொடுக்காததன் காரணமாக, இந்த வருஷம் கட்டாயக் கொள்முதல் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரிசி மில்காரர்களிடமிருந்தும், நெல் வியாபாரிகளிடமிருந்தும் ஒரு லட்சம் டன் கொள்முதல் செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். இதை சுதந்திரா கட்சிக் காரர்கள் எதிர்ப்பார்கள், தனி மனிதனுடைய சுதந்தரம் போகிறது என்று. அவர்கள் எதிர்த்தாலும் இந்த முறையிலேதான் நியாய விலைக் கடைகளிலோ, கூட்டுறவு சங்கங்களிலோ மக்களுக்கு அரிசியை வழங்க முடியுமேயல்லாது வேறு வழியில் அல்ல. ஆகவேதான், இந்த முறைதான் சரியானது என்று ஒத்துக்கொள்கிறேன். இதிலே மதுரையைப் பொறுத்தவரையில் ஒரு பிரச்னை இருக்கிறது. நெல் மண்டி என்று ஒரு மண்டி இருக்கிறது. அங்கே கமிஷன் கடைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் விவசாயிகள் கொண்டு வந்து வைக்கிற நெல் மூட்டைகளை வியாபாரிகளுக்கு விற்றுக்கொடுப்பது ஆகும். இதற்கு ஒரு மூட்டைக்கு 5 அணா கமிஷன் வாங்கிக்கொள்வார்கள். அதுதான் அவர்களுடைய தொழில். அவர்கள் கமிஷனுக்காகவே விற்றுக் கொடுப்பவர்கள். அதனால்தான் அவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் பலதடவை சட்டமன்றத்திலே கேட்டிருக்கிறேன். அவர்கள் கமிஷன் ஏஜண்டுகளாக இருந்தாலும் அவர்களுக்கு டீலர்ஸ் லைசென்ஸ்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது அவர்களிடமிருந்து 15 சதவிகிதம் நெல் கொள்முதல் செய்யவேண்டும் என்பது சரியாகாது. அந்த அளவுக்கு அவர்களால் கொடுக்கவும் முடியாது. அவர்கள் வியாபாரிகள் அல்ல என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் கமிஷன் பேசிசில்தான் தொழில் நடத்துகிறார்கள். அவர்களிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென்பதை ரத்து செய்ய சர்க்கார் உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

18th January 1964] [திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்]

சர்க்கரையை பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் சர்க்கரைக்கு பற்றுக்குறை இல்லை. வேண்டிய அளவு சர்க்கரை உற்பத்தி தமிழ் நாட்டிலேயே இருக்கிறது. ஆனல் அது சரியான முறையிலே வினியோகிக்கப்படாததால்தான் பொது மக்களுக்கு தேவையான சர்க்கரை கிடைப்பதில்லை. மதுரையிலும், கோயமுத்தூர், சென்னை முதலிய இடங்கள் போல் கார்டு முறையை வைத்து வினியோகிக்க வேண்டும். அந்த முறையில் ஏற்பாடு செய்தால் பொது மக்களுக்கு கஷ்டம் இல்லாமல் சர்க்கரை கிடைக்கும் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு சங்கங்களுக்கு கலெக்டர் மூலம் சர்க்கரை கொடுக்கிறார்கள். ஏற்கனவே வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளுக்கும் கொடுக்கிறார்கள். ஆனல் அத்தனை சர்க்கரையும் யாருக்குப் போகிறது என்பது தெரியவில்லை. யார் ரூ. 50-க்கு மேல் பல சாக்கு சாமான்கள் வாங்குகிறார்களோ அவர்களுக்குத்தான் அந்த வியாபாரிகள் அதுவும் ஒரு கிலோ இரண்டு கிலோ அளவுக்கு சர்க்கரை கொடுக்கிறார்கள். சாதாரண மக்கள் ரூ. 50-க்கு உணவுப் பொருள்கள் தினமும் வாங்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவேதான் மதுரை நகரைப் பொறுத்தவரையில் சர்க்கரை கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆனல் தகாத முறையில் வியாபாரம் செய்பவர்களிடம், கள்ள மார்க்கெட்டில் கிலோ 2 ரூபாய்க்கு கிடைக்கிறது. ஆகவே மதுரையிலும் கார்டு சிஸ்டத்தை கொண்டு வந்து சாதாரண மக்களுக்கு சர்க்கரை கிடைக்கும் வண்ணம் முறைபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சமீபத்திலே அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் நடந்தது. ஒரு மதத்துக்கு எப்படி அந்த மதத்தின் மத நூல்கள் கோட்பாடு களும் புனிதமானதோ அதேமாதிரி ஒரு நாட்டின் அரசியலுக்கும் அந்த நாட்டின் அரசியல் நிர்ணய சட்டம் புனிதமானது என்று உணரவேண்டும். அப்படி புனிதமான சட்டத்தை யாராக இருந்தாலும் அந்த சட்டத்தையோ அந்த சட்டத்தின் ஒரு பகுதியையோ எரித்தால் அது குற்றம் என்று உணர வேண்டும். அந்த குற்றத்திற்கு தக்கவாறு அவர்களுக்கு தீவிரமான நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுக்க வேண்டும் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மாதிரி ஒரு அரசியல் கட்சிகள் அதாவது மக்களை நல்ல வழியில் செலுத்தக்கூடிய கட்சிகள், சட்டத்தை எரிப்பது ஈனத் தனமான செயல், அச்செயல் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் வெட்கக்கேடானது என்பது தங்கள் மூலம் எதிர் கட்சிக்கு தெரிவிக்க விரும்புகிறேன். அந்த அரசியல் கட்சி அப்படி எரித்ததானது அந்தக் கட்சிக்கே களங்கத்தை ஏற்படுத்தி விட்டது; என்றைக்கும் போக்கிக்கொள்ள முடியாத ஒரு களங்கம் சட்டத்தை எரித்த எதிர்க்கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடிசைத் தொழில்களிலே முக்கியமானது கைத்தறித் தொழில். அந்தத் தொழிலாளர்களுக்கு வேண்டிய மூலப்பொருள் 100, 80 நம்பர் நூல் கிடைப்பது இப்பொழுது அரிதாக இருக்கிறது.

விலேயும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. எனவே நூற்புத் தொழிலில் ஒரு பெரிய சங்கடமான நிலே ஏற்பட்டிருக்கிறது. எனவே கலப்புப் பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. நாம் தனியார் துறையிலோ, கூட்டுறவு துறையிலோ நூற்கும் மில்களே தமிழ் நாட்டில் அதிகப்படுத்தி வேண்டிய தரமான நூல்களே கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. இராம. அரங்கண்ணல்: ஆன் எ ப்பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். சகோதரி லக்ஷ்மிகாந்தம் அவர்கள் பேசும்பொழுது அரசியல் சட்டத்தை எரிப்பது ஈனத்தனமான செயல் என்று சொன்னூர்கள். அந்த வார்த்தையை உபயோகிப்பது பார்லிமெண்டு முறைக்கு உகந்ததா என்று தங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: A point of order must be raised as soon as the hon. Member has mentioned the word and not after the hon. Member has finished her speech.

Srimathi P. K. R. Lakshimikantham rose.

MR. DEPUTY SPEAKER: What is the hon. Member's explanation?

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: ஈனத்தனமானது என்பதை எரிப்பது கீழ்தரமான செயல் என்பதைத்தான் நான் குறிப்பிடுவதற்காகச் சொன்னேனே தவிர தனிப்பட்டவர்களேப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லே என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: ஈனத்தனமானது என்ற வார்த்தையை கனம் அங்கத்தினர் வாபஸ் பெறுவதுதான் சபையின் கௌரவத்தை உயர்த்தும்.

கனம் உதவி சபாநாயகர்: அவர்கள் **dishonourable** என்று சொல்லியிருப்பார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அது பொருந்தாத வார்த்தை என்று நான் கருதவில்லே.

*** திரு. எஸ். நஞ்சுண்டராவ்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் திரு. மேதி அவர்கள் நமது சட்ட மன்றத்திலே ஆற்றிய உரையை ஆதரித்து எனது ஓரிரண்டு கருத்துக்களே சொல்ல விரும்புகிறேன். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி கூறும்பொழுது ரூ. 290 கோடி செலவழிக்க வேண்டும் என்று இருந்ததற்கு பதிலாக 325 கோடி செலவழிக்க வேண்டும், அதற்காக அடிஷனல் ரிஸோர்ஸ்ஸை தேடவேண்டும் என்று சொல்லும்போது அவர்கள் சொல்லியிருப்பதாவது:

"The administrative machinery is now fully geared to the fulfilment of the bigger Plan and the limits on our performance will be set largely by our ability to raise additional resources."

இந்த அடிஷனல் ரிசோர்ஸ் இல்லாமல் எந்த விதத்திலே இந்த பிளாணே நல்ல முறையிலே அமுல் ஆக்க முடியும். அப்படி

18th January 1964] [திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்]

அடிஷனல் ரிசோர்ஸ் வேண்டும் என்று சொல்கிறபோது அவர்கள் சொல்லியிருப்பதை சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்பு கிறேன்.

"With the co-operation of non-official voluntary agencies, the Government have recently taken steps to intensify collections of small savings and I would request hon. Members to evince keen interest in spreading the message of this movement."

சிறு சேமிப்புத் திட்டத்தை ஒரு 'இயக்கம்' (மூவ்மென்ட்) என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நான் இந்தச் சபையிலுள்ள கனம் அங்கத்தினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த இயக்கத்தை நாமெல்லோரும் நல்ல முறையில் பலப்படுத்த வேண்டும். சர்க்காருக்கு அதிகமான பணம் தேவைப்படுகிறது என்று எல்லோருக்கும் தெரியும். சிறு சேமிப்புத் திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றிபெறவில்லை என்று சென்ற மாதம் சென்னையில் நடந்த கலெக்டர்கள் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் தெரிவித்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன். மதுரை ஜில்லா டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்திலும் கலெக்டர் அவர்கள் பேசும்போது, மதுரை ஜில்லாவில் இத் திட்டத்தின் மூலம் 20 லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது என்றும், வருஷ மொன்றுக்குப் பெரும் பகுதி 'வித்ட்ரா' பண்ணிவிடுகிறார்கள் என்றும் சொன்னார்கள். ஆக, சிறு சேமிப்புத் திட்டம் நல்ல முறையில் நடைபெறவில்லை என்று தெரிகிறது. இத் திட்டத்தைப் பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் நடத்த முடியாததில் இருக்கும் சிக்கல்கள் என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் கேட்டுக்கொண்டபடி, have to evince keeninterest. சிறு சேமிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கனம் அங்கத்தினர்கள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளு கின்றேன். 12-00 noon.

கவர்னர் அவர்கள் இன்னொரு இடத்தில், முதியோர் பென்ஷன் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில், சுமார் 62,000 நபர்களுக்கு 1 கோடி 35 லட்சம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். முதியோர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் இந்த ஒரு கோடி 35 லட்சம் ரூபாய் அளவுக்காவது சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலம் வசூலித்தால்கூட அதுவே ஒரு பெரிய காரியம் என்று நான் நினைக்கிறேன். இத் திட்டத்தின் மூலம் மூன்று கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது என்று கணக்கிலிருந்து தெரிகிறது. ஆகையால், முதியோர்களுக்குப் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றும் அளவுக்காவது சிறு சேமிப்புத் திட்டத்தை நல்ல முறையில் அமுல் செய்யவேண்டும்.

வயது வந்தோர்க்கெல்லாம் நம் நாட்டில் வாக்குரிமை கொடுத்திருக்கிறோம். இப்படி வாக்குரிமையுள்ள பிரஜைகளுக்கு என்ன என்ன கடமைகள் என்பதையும் நாம் அவர்களுக்கு உணர்த்த

]திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்[[18th January 1964

வேண்டும். ட்யூடீஸ் ஆண்டு பரிவி-லெஜஸ் பற்றி ஒவ்வொரு வருக்கும் சரியான முறையில் சொல்லிக்கொடுக்கிற பொறுப்பு எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இருக்கிறது. எந்த அரசியல் கட்சி அதைச் சொல்லவேண்டுமோ அதை அது செய்துகொண்டு வருகிறது என்றாலும், எதிர்க்கட்சியினரும் பிரஜைகளுக்குள்ள கடமைகள் பொறுப்புக்கள் பற்றி எடுத்துச் சொல்லி அவர்களை ஆக்க வேலைகளில் ஈடுபடச் செய்யவேண்டுமேயொழிய, நாச மாக்கும் வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டில் 3 கோடி 36 லட்சம் ஜனங்களில் 62,000 பேர்களுக்குத்தான் முதியோர் பென்ஷன் கிடைக்கிறது. அதாவது ஒரு சிறிய கிராமத்தில் 561 பேர்கள் ஜனத்தொகை இருந்தால், அதிலே ஒரு கிழவருக்கோ, ஒரு கிழவிக்கோதான் முதியோர் பென்ஷன் கிடைக்கும் என்ற நிலை இப்பொழுது இருக்கிறது. ஆனால், சமுதாயத்தில் இருக்கும் தேவை மிகப் பெரியது. 561 ஜனத் தொகையில் 61 பேர்களுக்காகவது இந்த உதவி தேவைப்படுகிறது. 561 பேர்களில் ஒருவருக்கு கொடுக் கும் இப்பொழுதே 1 கோடி 35 லட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டிருக் கிறது. அப்படியிருக்க 561 பேர்களில் 61 பேர்களுக்குக் கொடுத் தால், 60 மடங்கு செலவாகக்கூடும். இந்த அளவுக்குச் சர்க்கார் எங்கிருந்து செலவு செய்ய முடியும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஆதரவற்ற எல்லா முதியோர்களுக்கும் பென்ஷன் கொடுப்பதுதான் சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. என்றாலும், சர்க்காருடைய நிலைமையையும் நாம் கவனிக்க வேண்டும். 1 கோடி 35 லட்சம் ரூபாய் செலவிடுவதற்கே சர்க்கார் எவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளு கின்றேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நல்ல முறையில் மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லும்போது, என்னுடைய தொகுதியிலுள்ள ஒன்றிரண்டு திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். குழிவியம்பாறை வேடசந்தூர் தொகுதியில் இருக்கிறது. குட்டைகள் அபிவிருத்தித் திட்டம் (பாண்டுஸ் ஸ்கீம்) நல்ல முறையில் ஒரு லட்சம் ரூபாய் செலவில் ஜனங்களுக்குப் பிரயோ ஜனகரமான முறையில் மேற்கொண்டிருக்கிறார்கள். வேடசந்தூர் பகுதியிலும் அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர உதவி செய்ய வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளு கின்றேன். வேடசந்தூர் வட்டாரத்தில் குடகனாறுத் திட்டம் வரும் என்று பத்து பதினைந்து வருஷங்களாகச் சொல்லப்பட்டு வந்தாலும், இன்னும் அத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. பொதுக்கூட்டத்தில் பேசும்போது, 'அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டுவிடும்' என்று வருஷா வருஷம் சொல்லிக்கொண் டிருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். திட்டவட்டமாக எந்த வருஷம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்ல முடிய

18th January 1964] *[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்]*

வில்லை. குடகனாறு திட்டத்தை, ஒன்றிரண்டு வருஷங்கள் ஆனாலும் பரவாயில்லை, திட்டவட்டமாக எந்த வருஷத்தில் அது துவக்கப் படும் என்பதற்கு வாக்குறுதி தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் 13-வது பாராவில்

"I cannot help sharing with you the pleasing thought that this progress has been made possible because the people of this State and its leaders, irrespective of political affiliations, have, even during moments of stress, observed restraint and decorum in their public life and have displayed a rare unity of purpose and determination in matters of common concern to the State."

என்று சொல்லியிருக்கிறார்கள். 'நெருக்கடி காலங்களிலும் அடக்கத்தையும் கண்ணியத்தையும் நம் தமிழ் நாட்டு மக்கள் காப்பாற்றியிருக்கிறார்கள்' என்று அவர்கள் சொன்னது ஏதோ அஸ்ஸாம் ராஜ்யத்திலிருந்து வந்த திரு. பிஷ்ணுராம் மேதி அவர்கள் சொன்ன வார்த்தை அல்ல. சென்னையில் ஆறு வருஷ காலம் நம்மோடு இருந்து சொன்ன வார்த்தை. ஏதோ அஸ்ஸாம் ராஜ்யத்திலிருந்து வந்த ஒருவர், தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு என்று சொல்வதுபோல, சொல்லப்பட்ட வார்த்தை அல்ல. தமிழ் நாட்டில் ஆறு வருஷ காலம் நம் மக்களோடு இருந்து, அவர்களுடைய அடக்கத்தையும், ஒழுங்கையும், கண்ணியத்தையும் பார்த்துவிட்டுச் சொன்ன வார்த்தை என்பதைக் குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். ஆனால், ஓரிரு சிறு சம்பவங்கள் கண்ணியத்தையும் கெடுக்கும் வகையில் நம்முடைய தமிழ் நாட்டில் நடைபெற்றிருக்கின்றன. அத்தகைய குறைபாடு ஏற்படாமல் தடுக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

இம் மாதம் 15-ந் தேதி இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் கிரிக்கெட் மாட்ச் நடந்த கடைசி நாள். அந்தச் சந்தர்ப்பத்தில் ஏதோ பாட்டிங் டீம் ரன் எடுக்கவில்லை என்பதற்காக அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டது. 200, 300 வாலிபர்கள் சேர்ந்துக்கொண்டு, உயிரோடு இருக்கும் ஒரு பையனை இறந்துபோன மாதிரி பாடையில் வைத்துக் கட்டி, ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். மாண ஊர்வலம் போன்று 'கோவிந்தா' என்று கோஷம் இட்டுக் கொண்டு சென்றதின் காரணமாக விளையாட்டே ஐந்து நிமிஷம் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த 200, 300 வாலிபர்கள் நாட்டின் ஒழுக்கத்தையும் கண்ணியத்தையும் அன்று கெடுத்தார் கள். அப்பொழுது அங்கிருந்த போலீஸ்காரர்கள் மிகவும் கண்ணியத்தோடு அதைத் தடுத்தார்கள் என்பதற்காக அவர் களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளு கின்றேன். அந்த 300 வாலிபர்கள் யார், எங்கெங்கே அவர்கள் இருக்கிறார்கள் என்பதைப் போலீசார் கண்டுபிடித்து அவர் களுக்கு ஒழுக்கத்தைச் சொல்லிக்கொடுக்கும் அளவுக்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்] [18th January 1964

நேற்று கல்லூரி மாணவர்கள் எல்லோரும் ஒரு பெரிய ஊர்வலமாக வந்தார்கள். அவர்கள் போட்ட கோஷங்களும் அடக்கமில்லாமல் பேசிய பேச்சுக்களும் சொல்லி முடியாது. இவர்களையெல்லாம் ஊர்வலமாகச் செல்லும்படி பெற்றோர்கள் அனுமதித்தார்களா? காலேஜ் ப்ரின்ஸிபால் அனுமதித்தார்களா? என்பதை விசாரிக்கவேண்டும். 1942-ம் ஆண்டு நான் ஒரு சின்ன ஊர்வலத்தில் கலந்துகொண்டபோது என்னைப் பள்ளியிலிருந்து டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். மூன்று மாதச் சம்பளம் நான் அபாரதம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோல, நேற்று ஊர்வலத்தில் வந்த காலேஜ் பையன்கள் எல்லோரையும் ஸஸ்பெண்டு செய்து, மூன்று மாதச் சம்பளப் பணத்தை அபராத மாகப்போட்டு வசூலித்தால்தான் அவர்களுக்கு ஒழுக்கமும் அடக்கமும் ஏற்பட முடியும். கவர்னர் அவர்கள் சொன்ன கண்ணியமும், அடக்கமும் தமிழ் நாட்டில் நீடித்துக் காப்பாற்றப் படும் அளவுக்கு எதிர்க் கட்சித் தலைவர்களும் காலேஜ் மாணவர் களுக்குப் புத்தி சொல்லிக் கொடுக்கும் அளவுக்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையைக் கேட்டு நான் பெரிதும் ஏமாற்றம் அடைந்தேன். கவர்னர் உரையில் சில விஷயங்கள், பட்ஜெட் உரையில் சில விஷயங்கள் என்று மாமூலாக ஒதுக்கப்படுவது சம்பிரதாயம். ஆனால், இந்த முறை கவர்னர் அவர்கள் அநேகமாக நம்மிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளக்கூடிய முறையில் தம்முடைய உரையைத் தயாரித் திருந்தாலும்கூட, அதில் எந்தவிதமான முக்கிய அறிவிப்பும் இல்லாதது எனக்கு ஒரு ஆச்சரியத்தைக் கொடுத்தது. முக்கியமான சட்டங்கள் இயற்ற வேண்டிய அவசியம் இருந்தும் கூட, அவைகூட இந்த முறை வராது என்பதுதான் அதி லிருந்து தொனிக்கிறது. ஒரு வேளை முதலமைச்சர் அவர்கள் முக்கிய அறிவிப்புக்களையெல்லாம் தம்முடைய பட்ஜெட் உரையில் குறிப்பிடலாம் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்களோ என்னவோ. இந்த உரையில் எந்த விதமான விஷயங்களும் குறிப்பிடப் படவில்லை. அதில் அரசியலை இவ்வளவுதூரம் புகுத்தியிருக்க வேண்டுமா என்பதைத்தான் கனம் முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். சில விஷயங்களில் ஆளும் கட்சியினர் நடந்து கொள்கிற விஷயங்களில் மற்றவர்களும் அக்கறை காட்ட வேண்டிய அவசியம் இருக்கும். அது அவர்களது சொந்த பிரச்சினை என்று விட்டு விட முடியாது. அந்த நிகழ்ச்சியினால் எதிர்க்கட்சியினர்களுக்கும் நல்ல படிப்பினை ஏற்பட இடமிருக்கும். இருந்தாலும் திரு. காமராஜ் அவர்கள் பதவியில் இருந்து விலகிய விஷயம் கவர்னர் உரையில் இடம் பெறவேண்டுமா? அவர் செய் திருக்கும்படியான விஷயம் வெளியில் பெரும் பாராட்டுக்குரியதாக இருக்கலாம். அவருடைய கட்சிக்கு மட்டும் அது பெரிய நிகழ்ச்சி என்று இல்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும்கூட நல்லது நடந்

18th January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

தால் அதை உதாரணமாக எடுத்துக்கொள்வதற்கு மற்ற கட்சிகள் தயங்காது. அவர் இன்றையதினம் எந்தக்காரணத்திற்காக வேண்டுமானாலும் பதவியில் இருந்து விலகியிருக்கலாம். தம் கட்சியைப் பலப்படுத்த வேண்டுமென்று விலகியிருந்தாலும் சரி, தமக்கு இப்போது தோன்றியுள்ள தத்துவங்களை மக்களிடையே எடுத்துச் சொல்லி அதற்கு அவர்களின் ஆதரவைத் தேடவேண்டுமென்று விலகியிருந்தாலும் சரி, அவர் எந்தக்காரணத்திற்காக விலகியிருந்தாலும் இப்படி சமயம் வரும்போது பதவியில் இருந்து விலக தாமே முன்வந்த உணர்ச்சி எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதுதான்.

ஆனால் இங்கே கவர்னர் அவர்கள் குறிப்பிடும்போது அவர் இங்கே தம்முடைய பத்தாண்டு ஆட்சியின் காரணமாக ஒரு ஸ்திரமான அமைப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்றால் இதற்கு முன்னால் இந்த மாநிலத்தில் வேறு எந்தக் கட்சியாவது ஆண்டதா? அப்போது ஸ்திரமற்ற தன்மை நிலவியதா? அல்லது இந்தக் கருத்து மற்ற மாநிலத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டதா? "இந்த ராஜ்ய நிர்வாகத்தை இவ்வளவு நீண்ட காலமாக அவர்கள் திறம்பட நடத்தியிருக்கிறார்கள். மிகவும் சங்கடமான நிலைமை ஏற்பட்டபோதுகூட சமாளித்திருக்கிறார்கள்" என்று சொல்வதில் எனக்குக்கூட உடன்பாடு இருக்கலாம். இருந்தாலும் கவர்னர் உரையில் இவ்வளவுதூரம் குறிப்பிடப்பட வேண்டியது அவசியமா என்பதுதான் நான் யோசிப்பது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இந்த நிகழ்ச்சி முக்கியமற்றது என்பதற்காகச் சொல்லவில்லை. குறிப்பாக இப்போது திரு. காமராஜ் அவர்கள் புவனேசுவரத்தில் காங்கிரஸ் அக்கிராசனராக உரை நிகழ்த்தியிருக்கிறார் என்றால் அதை எதிர்க்கட்சிக்காரர்கள் மிகுந்த உற்சாகத்துடன்தான் வரவேற்கிறார்கள். "இந்த நாட்டில் ஏழை ஏழைகளாகவேதான் ஆகிறார்கள். பணக்காரர்கள்தான் மேலும் மேலும் பணக்காரர்களாகிறார்கள்" என்று குறிப்பிட்டார் என்றால் அந்தப் பிரசங்கத்தை எதிர்க்கட்சிக்காரர்கள் உற்சாகத்துடன்தான் படிக்கிறார்கள். ஆனால் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் அவர் இந்தக் கருத்தைக் கூறவில்லை. பதவியில் இருந்து விலகிய பிற்பாடுதான் இத்தகைய கருத்தைப் பலர் சொல்கிறார்கள். எப்படி இருந்தாலும் அவர் சொன்னதை நான் வரவேற்கிறேன். அந்தக் கருத்து எந்த வகையிலும் கவர்னர் உரையில் பிரதிபலிக்கவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும்கூட அங்கே போயிருந்தார்கள். அங்கு நடந்த விஷயங்களை எல்லாம் கவனித்திருக்கிறார்கள். இருந்தும் அங்கிருந்து இங்கே வந்தவுடன், கவர்னர் உரைக்கு சர்க்கார் அறிக்கையைத் தயார் செய்கிறபோது இதில் எந்தவிதமான புதுக் கருத்தும் தொனிக்கவில்லை. அவரது பழைய அனுபவமே பிரதிபலிப்பதுதான் கொஞ்சம் ஏமாற்றத்தைக் கொடுக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முக்கியமாக விலைவாசிப் பிரச்னையை எடுத்துக்கொள்வோம். விலைவாசி பிரச்னையைப்பற்றி கவர்னர் அவர்கள் சம்பிரதாயமாகத்தான் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் நாட்டில்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [18th January 1964

விலைவாசி ஏற்றத்திற்கு ஒரு புதிய கருத்தும், கவலையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறபோது, அதுவும் புவனேசுவரத்தில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாசபையில் விவாதிக்கப்பட்டிருக்கிறபோது அந்தக் கருத்தின் ஒளிகூட இங்கே பிரதிபலிக்கவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். இங்கே குறிப்பாக விலைவாசி உயர்வுக்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது. மாமூலாகச் சொல்வது போல, பெருகி வரும் ஜனத்தொகை, வளர்ந்து வரும் பண வருவாய், நீண்ட காலத்திற்குப் பிறகே பயன் தரக்கூடிய கனரகத் தொழில்களில் செய்யப்படும் பெருமளவு முதலீடு ஆகியவைதான் விலைவாசியின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கிறது என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே நாட்டில் இப்போது அந்தக் கட்சியினரிடையே தோன்றியுள்ள புதுக்கருத்தை நமது அமைச்சரவை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. விலைவாசி உயர்வுக்குக் காரணம் கள்ளப் பணம் நடமாடுதல், அத்தியாவசயப் பண்டங்களின் விநியோக முறை தனியார் துறையில் விட்டு வைத்திருத்தல், மொத்த வியாபாரத்தைத் தனியார் துறையில் விட்டு வைத்திருத்தல், ஏற்றுமதி இறக்குமதியை தனியார் துறையில் விட்டு வைத்திருத்தல் ஆகியவைதான் உற்பத்தி பெருகினாலும்கூட விநியோகத்தில் போதுமான அளவு கவனம் செலுத்தாமல் இருப்பது விலைவாசி உயர்வுக்கு முக்கியமான காரணம். ஆகவே பாங்குகளைக்கூட அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்ற அளவுக்கு கருத்து வந்திருக்கிறது. அரசாங்கம்தான் பாங்குகளை ஏற்று நடத்த வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டாலும் இப்போது அதை உடனடியாகச் செய்வதற்குரிய காலம் வரவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, இந்தக் கருத்தே தவறானது என்று யாரும் சொல்லவில்லை. இதே காரணம்தான் என் கட்சியின் சார்பாகவும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில் இப்போது காங்கிரஸ்காரர்களே விவாதம் நடத்தத் தொடங்கி இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்தக் கருத்து இதில் பிரதிபலிக்கவில்லை. இது பழைய சம்பிரதாய முறைப்படியேதான் இருக்கிறது என்று கருதுகிறேன்.

அதேபோல விலைவாசியைச் சமநிலைப்படுத்துவதற்கு----குறைப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு என்று கூடச் சொல்லவில்லை---- அரசாங்கம் எடுத்திருக்கும் முயற்சிகள் நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டும் என்பதுதான். நியாய விலைக் கடைகளுக்கு வேண்டிய அரிசியைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கொள்கை சிறிதளவு மாறுதல் ஏற்பட்டிருப்பதைக் காட்டுகிறது. ஆனால் அதுவே நிலையான பரிகாரமாக இருக்குமா? இல்லை என்பதை அவர்களே ஒப்புக்கொண்டுவிட்டார்கள். ஆனால் எது நிலையான பரிகாரமாக இருக்கும்? விலைவாசி உயர்வை உற்பத்திப் பெருக்கின் மூலமாக ஓரளவு சமநிலைப்படுத்தலாம். அந்த அளவில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது உண்மை. ஆனால் இன்றைய தினம் விவசாயிகள் எந்த நிலையில் இருக்கிறார்கள்? உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நிலைதான் இருக்கிறதே தவிர, உற்பத்தி

18th January 1964] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

செய்யப்பட்ட பொருள்கள் விநியோகிக்கப்பட வேண்டிய நிலை தனியார் துறையில் இருப்பதனால், அதிகமாக உற்பத்தியைச் செய்தாலும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்காவிட்டாலும் சங்கடமான நிலை இருக்கிறது. ஆக உற்பத்தி பெருகினாலும், உற்பத்தி பற்றாக்குறை இருந்தாலும் சங்கடம்தான் என்ற நிலையில் அமைந்திருப்பது இந்த உரையின் அடிப்படைத் தத்துவம். ஆகையால் இதை ஆட்சேபிக்கிறேன். உற்பத்தி பெருகினால் விலை இறங்கவேண்டும், உற்பத்தி பெருக்கினால் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்றால் அத்தகைய ஒரு சூழ்நிலை நாட்டில் உருவாக்கப்படவேண்டும். இன்றைக்கு உற்பத்தி பெருக்கினால், விநியோகமுறை சீராகவும், நிரந்தரமாகவும் அமைக்கப்படாததன் காரணமாக பொருள் தேங்கி விடுகிறது. அந்த அளவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன செலவாயிற்றோ அந்தச் செலவுக்குக் கட்டுபடியாகாத நிலையில் விலை இறங்கி விடுகிறது. இதனால் பெரிதும் நஷ்டமும், கஷ்டமும் அடைபவர்கள் உற்பத்தியாளர்களாகவே இருக்கிறார்கள்.

முன்பெல்லாம் நாங்கள் பேசுவதாக ஆளும் கட்சியினர்கள் சொல்வார்கள். "இவர்கள் விவசாயிகளிடையே சென்று 'நீங்கள் உற்பத்தி செய்கிற பொருளுக்கு விலை இறங்கக்கூடாது' என்று சொல்லுவார்கள். அதேசமயம் தொழிலாளர்களிடையே வந்து விலைவாசிகள் இறங்கவேண்டும் என்று சொல்லுவார்கள்" என்பதாக எங்களைத் தமாஷ் பண்ணுவார்கள். எங்களுடைய கருத்து என்ன என்பதை புரிந்துகொள்ள முயன்றதில்லை. நாங்கள் சொல்வது எல்லாம் உற்பத்திச் செலவின் அடிப்படையில் நியாயமான விலை விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நிர்ணயிக்கப் படவேண்டும் என்பதுதான். உற்பத்தியாகின்ற செலவுக்கு மேல் 6 சதவிகிதம் அதிகமாகக் கொடுத்து, அவற்றை உபயோகப் படுத்துகிறவர்கள் வாங்கி உபயோகித்துக்கொள்ளக் கூடிய நிலையில் விலை நிர்ணயிக்கப்பட்டாலும் சரிதான். அப்படியில்லாததனால்தான் இன்றைக்கு அது ஒரு சூதாட்டமாக இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருளுக்கு ஒரு நிலையான விலை இல்லை. இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் 20 சதவிகிதம் கட்டாயக் கொள்முதல், மற்ற ஜில்லாக்களில் 15 சதவிகிதம் கட்டாயக் கொள்முதல் முறையைக் கையாளுவது என்ற கொள்கை மட்டும் இதற்குப் பரிகாரமாக அமையுமா என்பதைச் சிந்திக்கவேண்டும். இத்தகைய அடிப்படைக் கொள்கையே மாறவேண்டுமென்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இதில் ஒரு நல்ல அம்சம், இருட்டில் வெளிச்சம் தெரிவது போலக் காணப்படுவது----அரிசி மில்களையே அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற யோசனை கூறப்பட்டிருப்பதுதான். ஆனால் நம்முடைய முதல் அமைச்சர் இவ்விஷயத்தில் கொஞ்சம் நிதானமாகப் போகவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நிதானமாகப் போகவேண்டுமென்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. கொள்கையை ஒத்துக்கொண்டால் சரிதான். ஆயினும் கடந்த

[திரு. மி. கலியாணசுந்தரம்] [18th January 1964

பதினைந்து ஆண்டுகளாக நிதானமாக சென்று வந்திருப்பதனுல் என்ன பயன் ஏற்பட்டு இருக்கிறது? அடுத்தடுத்து விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் மேற்கொண்ட காரியங்கள் எல்லாம் தோல்வியே அடைந்து வந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ள யாரும் மறுக்கமாட்டார்கள். பெருமளவு மக்களிடையே கலகம் ஏற்பட்டு குழப்பம் உண்டான பிறகுதான் இவ்விஷயத்தில் தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமா? இதைப் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். நிச்சயமாகச் சொல் வேன். அரிசி மில்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வது என்ருல் ஒரு நன்மை ஏற்படும். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு ஒரு நிரந்தர, நியாயமான விலை உத்தரவாதம் செய்யப்படலாம். அதனுல் விவசாயிகளும் தைரியமாக உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்ய முன்வரக்கூடும். அப்படி இல்லாத காரணத்தினுல்தான் அறுவடை காலத்தில் என்ன விலை விழுமோ என்று அவர்கள் அஞ்சுகிருர்கள். உற்பத்திச் செலவோ அதிகரித் துக்கொண்டே போகிறது. அதோடு மழையினுலும், வெள்ளத்தி லுைம், நோயினுலும் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் பயமுறுத்திக்கொண்டே இருக்கிறது. அதுவும் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நெல்லாக இருந் தாலும் சரி, பருத்தி போன்ற மற்ற பொருள்களாக இருந்தாலும் சரி நோய்கள் விழுந்து வருகின்றன. பூச்சி விழுவது அதிகரித்துக் கொண்டே வருகிறது. இத்தனை ஆபத்தையும் சமாளித்து உற்பத்தி பண்ணின பிறகு நிச்சயமான விலை இல்லை என்ற நிலை இருந்தாலும் எப்படி உற்பத்தி செய்ய முடியும்? இதுபற்றி ஆராய்ச்சி செய்து கொண்டே இருந்தால் போதாது. விவசாய க்ராஜுவேட்டுகளை உண்டு பண்ணி அங்கங்கே அனுப்பிக்கொண்டே இருந்தால் மட்டும் போதாது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு ஒரு நிரந்த்ரமான விலை நிர்ணயிக்கப்படவேண்டும். அதற்கு அடிப் படையாக அரசாங்கம் உடனடியாக ஒரே நாள் இரவுக்குள் இந்த ராஜ்யம் முழுவதும் உள்ள அரிசி மில்களை எடுத்துக்கொள்ள நட வடிக்கை எடுப்பதுதான் சரியாக அமையும். இதில் என்ன சங்கடம் இருக்கிறது? இன்றைக்கு அவர்கள் அரசாங்க லைசென்சு இல்லாமல் மில்களை நடத்த முடியாது. அரசாங்கத்திடம் ஒப்படைக்கத் தயாராக இல்லையென்ருல் மில்களை மூடத்தான் வேண்டும். இல்லா விட்டாலும் நாம் லைசென்சை கான்சல் செய்யப் போகிறேம். வேறு என்ன தடை ஏற்படுத்த இருக்கிறது? மில்காரர்களுக்கு நஷ்டஈட்டைக் கொடுத்து மில்களை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு நடத்துவதின் மூலம் நிச்சயமாக நெல் உற்பத்தி பண்ணக்கூடிய விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்ற தைரியம் இருக்கும் அவர்கள் துணிந்து உணவுப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்க முடியும். தற்போது அவர்கள் உற்பத்தி செய்த பிறகு மில்களில் நடக்கக் கூடிய அக்கிரமம் என்ன என்று முதலமைச்சர் அவர்கள் சென்று பார்க்கவேண்டும். ஏழை எளிய மக்கள் உண்ணக்கூடிய அரிசியை எவ்வளவு மட்டரகமாக மில்காரர்கள் தயாரிக்கிருர்கள் என்பதை அப்போது புரிந்துகொள்ள முடியும். இதை அமைச்சர் அவர்கள்

18th January 1964] [திரு. மி. கலியாணசுந்தரம்]

நேரில் சென்று பார்ப்பார்களேயானல், இப்போர்ப்பட்டவர்களுக்குப் பரிவு காட்ட வேண்டுமா, இவர்களிடம் நிதானமாகக்கூட இருக்க வேண்டுமா, ஒரே இரவில் ஏன் இவர்களிடமிருந்து இந்த மில்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணம் அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக ஏற்படும். அவர்கள் எவ்வளவு தூரம் கலப்படம் செய்ய முடியுமோ அந்த அளவுக்குக் கலப்படம் செய்து மக்களிடத்தில் அதிக விலைக்கு விற்கும் நிலைமை இருக்கிறது. அரிசி மில்களை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்ற யோசனை யாவது மிகவும் சிறந்த யோசனையாகும். சோஷலிசம் அமைப்ப தெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும், முதலிலே சோறு போடவேண்டும். 'சோஷலிசம்' என்று சொல்லும் எங்களை ஒரு காலத்தில் கேலி பண்ணியதுண்டு. சோஷலிசம் என்றல் மக்கள் கல்வி வசதி பெறுவது, வீட்டு வசதி பெறுவது, வைத்திய வசதி பெறுவது என்று இப்படியாவது வியாக்கியானம் கொடுக்கிற அளவுக்காவது சோஷலிசம் பற்றி 'ஆ, ஆவன்னு' பாடமாவது கற்க ஆரம்பித்திருக்கிறர்கள்.

விலைவாசி ஒரு நிலையில் இருக்கவேண்டும். அப்போதுதான உற்பத்தி செய்ய உற்சாகம் ஏற்படும். கரும்புக்கு, சிமெண்டுக்கு, உருக்குக்கு எந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அடிப்படையில் விவசாயி உற்பத்தி பண்ணக்கூடிய பருத்திக்கும், நெல்லுக்கும், கடலைக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அந்த உத்தரவாதம் இருந்தால்தான் உற்பத்தி பெருக முடியும். உற்பத்தி பெருகவேண்டுமென்ற நம்முடைய எண்ணத்தை வெளியிட்டால் மட்டும் போதாது. மத்திய உள்துறை அமைச்சர் நந்தா அவர்கள், 'சூழ்நிலையைச் சரிபடுத்த வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். விலைவாசி உயரக் காரணம் என்னவென்று கேட்டால், ரொம்பத் திட்டங்கள் போட்டதுதான் என்று கூறுகிறர்கள். இதற்கும் ராஜாஜி சொல்வதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது. திட்டங்களில் இவ்வளவு பணம் போட வேண்டியதில்லை என்று ராஜாஜி சொல்லுகிறர். அதே முறையில் அரசாங்கமும் பதில் சொல்வது தெரிந்தோ தெரியாமலோ சுதந்திரக் கட்சிக் கொள்கையை கடைப்பிடிப்பது போல்தான் இருக்கிறது. ராஜாஜி முதலமைச்சராக இருந்தால் எப்படி இந்த உரை தயாரிக்கப்பட்டிருக்குமோ அந்த முறையில் இருக்கிறதே தவிர உண்மையை உரைக்கும் நிலையில் இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டாமா? விலைவாசி உயர்வுக்கான காரணங்கள் கொடுக்கப்பட்டிருப்பது சரியான காரணங்களா? புவனேசுவரத்தில் அகில இந்தியக் காங்கிரசுக் கூட்டம் விவாதித்து நிறைவேற்றிய தீர்மானத்திற்குப் பிறகும் சுதந்திரக் கட்சியின் அடிப்படைத் தத்துவத்தின் அடிப்படையில் காரணம் காட்டியிருப்பது சரியல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கரு. சிமைச்சாமி: On a point of information, Sir.

[18th January 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: அவரைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லையே.

MR. DEPUTY SPEAKER: The hon. Member is not yielding.

திரு. கரு. சீமைச்சாமி: On a point of order. **Sir.** மதிப்புக்குரிய அங்கத்தினர் அவர்கள் பேசுகிறபோது, 'ராஜாஜீ அவர்கள் இந்தத் தொழில்களையெல்லாம் செய்யவேண்டியதில்லை என்று சொன்னதைப்போல் பிரதிபலிக்கிறது. ராஜாஜி அவர்கள் சொன்னது, 'கடனை வாங்கி . . . .

MR. DEPUTY SPEAKER: It is not a point of order.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அங்கத்தினர் அவர்கள் ராஜாஜி அவர்களோடு பழகி எவ்வளவு தூரம் அறிந்திருக்கிறாரோ அதைவிட அதிகமாக எனக்கும் தெரியும். ராஜாஜியைத் தாக்க வேண்டுமென்ற அவசியம் எனக்கில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் ராஜாஜியைப் பற்றி இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லஞ்ச ஒழிப்பைப்பற்றிக் கனம் நந்தா அவர்கள் குறிப்பிட்டார்கள். லஞ்சம் வாங்கும் எண்ணம் எதனால் உண்டாகிறது? தனி நபர் சுயநலத்தை முன்னிட்டே அது உண்டாகிறது. அதிகாரிகள் மட்டுந்தான் இதற்குப் பொறுப்பு என்று சொல்வது அர்த்தமல்லாதது. அதிகாரிகளல்லாதவர்களும் இதற்குப் பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். தனிநபர் கையில் வியாபாரப் பர்மிட் இருக்கும் வரையில், துடிதுடிப்பு இருக்கும் வரையில் லஞ்சம் இருக்கும். அதற்கு எதிராக மக்களுடைய மனப்பான்மையைத் தயார் செய்யவேண்டுமென்று கூறினால் நான் சந்தோஷப்பட்டிருக்க முடியும். இந்த உரையில் விலைவாசி உயர்வுக்குத் தவறான காரணங்களைக் காட்டியிருப்பதோடுகூட, அதைக் குறைப்பதற்குத் தவறான பரிகாரங்களையும் காட்டியிருப்பது வருத்தத்தைத் தருகிறது. ஆகவே, அடிப்படைத் தத்துவத்தை அமல் நடத்துகிற வகையில் நடவடிக்கை எடுத்தால் தான் இந்த விலைவாசிப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கூறி அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பற்றிய ஒரு தீர்மானம் வர இருப்பதால் இது பற்றி மேற்கொண்டு அப்போது பேசலாம் என்ற காரணத்தால் இந்தப் பிரச்சினை மீது இதோடு என்னுடைய பேச்சை நிறுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிர்வாகத் துறையிலே மிகுந்த அனுபவம் உடையவர். இதற்கு முன்பு இருந்த முதலமைச்சருக்கு வேண்டுமானால் அரசியல் வேலைகள் அதிகமாக இருந்தது என்று கூறலாம். இந்த முதலமைச்சருக்கு நிர்வாக வேலைதான் அதிகம். துரிதமாக நடவடிக்கை எடுப்பார்கள். 'ஃபைல்' களை ரொம்ப சீக்கிரமாக 'டிஸ்பேர்ஸ்' செய்வார்கள். நம்மிடம் பேசிக்கொண்டே 'ஃபைல்' களில் கையெழுத்திட்டுக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் அவ்வளவு சுறுசுறுப்பாக

18th January 1964] [திரு. மி. கலியாணசுந்தரம்]

வேலை செய்வதைப் பாராட்டுகிறேன். அதேபோன்று நாட்டுக்குத் தேவையான சில நடவடிக்கைகளையும் சுறுசுறுப்பாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் முதலமைச்சர் அவர்கள் ஃபைல்களை வேகமாக டிஸ்போஸ் செய்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? ஒவ்வொரு ஃபைலிலும் ஒவ்வொரு கதை இருக்கிறது; மக்களுடைய வாழ்க்கை சம்பந்தமான கதைகள்தான் அவ்வளவும். அமைச்சர் அவர்கள் சீக்கிரமாக ஃபைல்களைப் பார்த்து முடிவு எடுப்பதன் மூலம் மக்கள் அதன் பலனைப் பெறும் வகையில் அமைந்திருக்கவேண்டும். தண்ணீர்ப் பற்றாக்குறை, மின்சக்திப் பற்றாக்குறை இவ்விரண்டிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றிய விவரங்களைப் பற்றி நான் இப்போது எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அது பற்றி என்னைவிட உற்சாகமாக நம்முடைய அமைச்சர் அவர்கள் முதல் பட்ஜெட் மானியத்தின் போது கூறியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மாநில அரசாங்கங்களோடு கலந்து பேசி நடவடிக்கை எடுத்து தண்ணீர் வசதியையும் மின்சக்தி வசதியையும் பெருக்குவதற்கான காரியங்களைத் துரிதமாகச் செய்தால்தான் விவசாய உற்பத்தியை நாம் பெருக்க முடியும்.

நேற்று ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது திரு. வெங்கட்டராமன் அவர்கள் தொழில்களுக்கு வேண்டிய தண்ணீரை பூமிக்குள்ளிருந்து எடுக்கலாம் என்று கூறினார்கள். ஒரு கிராமத்தில் ரெயில்வே எஞ்ஜினுக்கு தண்ணீர் எடுக்கப்போய் அதன் விளைவாக இரண்டு மைல் விஸ்தீரணத்திற்கு விவசாயக் கிணறுகளில் தண்ணீர் இறங்கி விட்டது. ஆகவே விவசாயிகள் அதற்கும் கீழ் ஆழமாக தோண்ட வேண்டியிருக்கிறது. ஆகவே பூமிக்கடியில் இருந்து தண்ணீர் எடுக்கும்போது அது விவசாயிகளைப் பாதிக்குமா என்று பார்க்கவேண்டும். பின்னர், இந்த தண்ணீர் பற்றாக்குறையை எப்படி சமாளிப்பது? அண்டை ராஜ்யங்களின் உதவி இல்லாமல் இதைப் போக்க முடியாது. ஆகவே அவர்கள் உதவியை நாடி தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அடுத்தபடியாக, ஒரு முக்கிய விஷயம், அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் மிகவும் அவசியம். நிர்வாக இலாகாக்கள் எப்படி இயங்க வேண்டும்? என்னென்ன விதிகள் இருக்கவேண்டும்? உதாரணங்கள் பல கொடுக்கலாம். சிறிய மாறுதல்கள் செய்தாலே மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். காலையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஸ்டேட் பாங்க் சப்ட்ரெஷரி வேலைகளை எடுத்துக் கொண்டிருப்பது பற்றிக் கூறினார்கள். என்டார்ஸ் செய்வதை விட்டு தொகைக்கு செக் போட்டு நல்ல கண்காணிப்பு இருந்தால் தவறு ஏற்படாது. பேமெண்ட் ஸ்லிப்போடு, செலானில் கையெழுத்து போட்டு ட்ரெஷரியில் கொடுத்தால் கஷ்டமிருக்காது. தலைநகரில் பில் செலுத்துவது, பணம் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. ஃபார்ம்ஸ் கிடைப்பது இல்லை. ஆக, சிறு சிறு சிக்கல்களைத் தீர்த்தால் 12-30 p.m.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [18th January 1964

விவசாயிகள் அதை மிகவும் பாராட்டுவார்கள். நிர்வாகம் பழைய முறையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டும், பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட போதிலும்கூட கிராம அமைப்பில் அடிப்படையான மாறுதல் ஏற்படவில்லை. நமக்குக் கிடைக்கும் புள்ளிவிவரங்கள் தவறானவையாக கிடைக்கின்றன. அதை வைத்து நாம் திட்டங்கள் தயார் செய்கிறோம். நேரில் சென்று பார்த்து கணக்குப் பிள்ளைகள் கணக்குக் கொடுப்பதில்லை. ஆக, கிராமத்திலிருந்து ரெவின்யூ போர்ட் வரை ஒவ்வொரு துறையையும் எப்படி மாற்றியமைப்பது என்று பரிசீலிக்க வேண்டும். மாவட்டங்கள் எப்படி பிரிக்கப்பட்டிருக்கின்றன? இப்போதுள்ள வளர்ச்சிக்கு ஏற்றவாறு இருக்கிறதா? அதிக வேலையை சமாளிக்க முடியாமல் இருந்தால் எப்படி அதைத் திருத்தியமைப்பது என்பதில் கவனம் செலுத்தி அடிப்படை மாறுதல்களை ஏற்படுத்த திட்டம் வகுக்க வேண்டும். நிர்வாக சம்பந்தமான சீர்திருத்தங்கள் என்ன வேண்டுமென்று பரிசீலிக்க வேண்டும். மாவட்டங்கள், தாலுகாக்கள், ரெவின்யூ டிவிஷன்கள் இவற்றில் இப்போதுள்ள அமைப்பில் என்னென்ன மாறுதல்கள் செய்தால் செலவு இல்லாமல் திறமையாகப் பணி புரிய உதவியாக இருக்கும் என்பது பற்றி விவாதிக்க வேண்டும். பல உதாரணங்கள் கொடுக்கலாம், ஆனால் நேரம் இல்லை. ஒரு குழு போட்டால் எல்லோருடைய அபிப்பிராயத்தையும் பரிசீலனை செய்து தக்க முடிவிற்கு வரலாம். "இந்தக் கூட்டத் தொடரில் சபையின் விவாதத்துக்கு வரத்தக்க முக்கியமான சட்ட நடவடிக்கைகள் ஒன்றுமில்லை" என்று கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் நான் எதிர்பார்த்திருந்தேன் சிலவற்றை. முதல் செஷன் ஆயிற்றே, வருமென்று நினைத்தேன். நியாயவாரச் சட்டம், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், கிராம குடியிருக்கும் மனைப் பாதுகாப்புச் சட்டம் இவற்றை எல்லாம் இணைத்து ஒரே சட்டமாக கொண்டு வர இருக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். நிலச் சட்டங்கள் பல அமுலில் இருந்தும் அதன் பலன் விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. பல உதாரணங்கள் கொடுத்திருந்தோம். பதில் அளிக்கும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அது எப்போது வரும் என்பதைப் பற்றி இந்த அறிக்கையில் ஒன்றுமே காணவில்லை. அடுத்தபடியாக, ஜனநாயக ரீதியில் அதிகாரத்தை பல மாவட்டங்களில் பகிர்ந்து கொடுப்பது என்ற அந்த நோக்கத்தோடு பஞ்சாயத்து ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. அப்படி ஏற்படுத்தப்பட்ட பிறகு எவ்வளவு தகராறுகள் இருக்கிறது என்று பார்க்கிறோம். நம் அனுபவம் மூலமாகப் பார்க்கிறோம், எவ்வளவு ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை. ஆகவே, நாம் செய்திருக்கும் ஆக்டினால் நாம் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறியிருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும். இதற்கு பரிசீலனை இல்லாமலேயே முடிவு எடுக்கலாம். பஞ்சாயத்து தலைவர் தேர்தல், யூனியன் தலைவர் தேர்தல்களில் நேரடியாக மக்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று போட்டால் அங்குள்ள லஞ்சத்தைக் குறைக்க முடியும். அதிகாரிகள் லஞ்சம்

18th January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

வாங்கினுல் நாம் திட்டுகிருேம். அவர்கள் பயப்பட வேண்டியிருக்கிறது. ஆனுல் அதிகாரிகள் அல்லாதோர் வாங்கும் லஞ்சத்தை எப்படி தீர்ப்பது? பஞ்சாயத்து ஆட்சியால் ஏற்பட்ட தீமை இது. 20,000 ரூபாய் செலவு செய்தால் சேர்மனுக வரமுடியும் என்றிருக்கிறது. நான் அப்போதே சுட்டிக் காட்டினேன், அப்போது கேட்கவில்லை, இப்போது அனுபவத்தின் பிறகு எங்கள் விமர்சனம் சரி என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும். ஆகவே இந்தச் சட்டத்தை திருத்தி பின்னர் தேர்தல் நடத்திஞல் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும் பஞ்சாயத்து ஆட்சியில். கல்விக்காக நாம் ஏராளமான பணம் செலவு செய்கிருேம். முன்பு முதல் அமைச்சர் அவர்கள் யூனிவர்சிட்டி சட்டங்களை எல்லாம் திருத்த வேண்டும், அது ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னுர்கள். அது எப்போது வரப்போகிறது? இந்த சபையின் காலம் முடிவடைவதற்குள் அது நிறைவேற்றப்பட்டு அமுல் நடத்தப்பட வேண்டும். இந்த ஆண்டிலேயே முக்கியமான சட்டங்களை நிறைவேற்றி விட வேண்டும். அப்போதுதான் அவை எப்படிச் செயல் படுகின்றன என்று பார்க்க சமயம் இருக்கும், அப்படி அதைப் பார்த்து நான்காவது திட்டத்திற்கான வேலைத் திட்டங்களை உருவாக்கிஞல்தான் அவை சரியாக இருக்க முடியும். சம்பிரதாயமான சில சட்டங்கள்தான் இப்போது வருகிறது. ஆகவே முக்கியமான சட்டங்கள் துரிதமாக கொண்டு வரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் இல்லாவிடினும் நான் கூறிய விஷயங்களை ஆராய்ச்சி செய்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். நம் ராஜ்யத்தில் விவசாயத்திற்கு தண்ணீர் பற்ருக்குறை மட்டுமல்ல, குடி தண்ணீர் பற்ருக்குறையும் அதிகமாக இருக்கிறது. கிராமங்களில் தேசிய குடி நீர் திட்டத்தின் கீழ் பல கிணறுகள் வெட்டப்பட்டு, ஓவர் ஹெட் டாங்க்ஸ் அமைக்கப்பட்டு, பைப்களும் போட்டிருக்கிருர்கள். செலவு செய்யாது மக்கள் வெறுப்பை சம்பாதித்தால் சரி, செலவு செய்தும் மக்கள் வெறுப்பை சம்பாதிக்க வேண்டுமா? பைப் போட்டும் தண்ணீர் வரவில்லை என்ருல் அரசாங்கத்தின் பேரில் ஆத்திரம் வரத்தான் வரும். ஆகவே நான் சொல்வது என்னவெனில் 10 அல்லது 20 கிராமங்களை சேர்த்து கூட்டாக அமைத்து சரியான இடத்தில் ஒரு பெரிய வாட்டர் வொர்க்ஸ் அமைத்து அதன் மூலம் அந்தக் கிராமங்களுக்கு தண்ணீர் கொடுப்பது பற்றி கவனிக்கவேண்டும். பின்தங்கிய பகுதிகளில் அதிகப்படி கவனம் செலுத்தப்பட வேண்டும். திருச்சி ஜில்லாவில் புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஜில்லாவில் கிழக்கு ராமநாதபுரம், தஞ்சையில் அறந்தாங்கி, பட்டுக் கோட்டை போன்ற பகுதிகள், பின்னர் திருச்சி ஜில்லாவில் உடையார் பாளையம் போன்ற இடங்களில் நல்ல குடிதண்ணீர் இன்றி தொத்து நோய்கள் கூட வருகிறது. நம் ராஜ்யம் முன்னணியில் நிற்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள். சாலை விஷயத்தில் மதருஸ் முன்னணியில் நிற்கிறது, ஆகவே சாலை அபிவிருத்தி வேண்டாம், மின்சாரத்தில் முதல் இடம் பெற்றிருக் கிறது, ஆகவே மின்சாரத்தில் அபிவிருத்தி வேண்டாம், என்று

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [18th January 1964

இப்படி எல்லாவற்றிலும் முதல் இடத்தில் நிற்கிறேம் என்று கூறுவதால் பின்தங்கிய பகுதிகளில் கவனம் செலுத்துவதில்லை. மற்ற விடங்களில் பின்தங்கிய பகுதிகளில் விசேஷ கவனம் செலுத்தப் படுகிறது. ஆகவே தமிழ் நாட்டில் உள்ள பின்தங்கிய பகுதிகள் எவை என்று லிஸ்ட் எடுத்து திட்டக் கமிஷனுக்கு அனுப்பி விசேஷ நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். திட்டக் கமிஷனுக்கு தெரியப்படுத்தி மற்ற பகுதிகளுக்கு சமமான முறையில் பின் தங்கிய பகுதிகள் வருவது வரை விசேஷ நிதி ஒதுக்கி விசேஷ திட்டங்கள் தயாரிக்கவேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள் கிறேன்.

* **திரு. தக்ஷிணமூர்த்தி கவுண்டர் :** சிர்சான்ற சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களது உரையை வரவேற்கக்கூடிய முறையில் நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பிறந்து மொழி பயின்ற பின் எல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்—நிறம் திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்கிது இடர்

என்று அருள்வகையில் தன்னுடைய தியாக வாழ்க்கையைப்பற்றி காரைக்கால் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நிலையில் அரசியல் வகையில் தியாக வாழ்வை மேற்கொண்ட பெரியார் தலைவர் திரு. காமராஜ் அவர்கள். அவர்களைப்பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த அறிக்கையில் காமராஜ் அவர்களைப்பற்றி குறிப்பிட்டிருப்பதினால் அவர்களுக்கு வருகின்ற பெரிய நன்மை ஒன்றும் கிடையாது. எதிர்ப்பதினால் அவர்களுக்குப் போகின்ற காரியம் ஒன்றும் கிடையாது. பட்டினத்தார் சுவாமிகள்,

"வடகோடு உயர்ந்தென்ன தென்கோடு தாழந
தென்ன வான்பிறைக்கே"

என்று கூறினர். அதாவது வானத்தில் காணுகின்ற பிறை சந்திரனுக்கு வடகோடு உயர்ந்து, தென் கோடு தாழ்ந்திருந்தால் உலகத்திற்கு நன்மை ஏற்படும் என்பது உலகியல் வழக்கு. ஆனால் வடகோடு உயர்ந்தும் தென் கோடு தாழ்ந்தும் இருப்பதால் சந்திரனுக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது. அதைப் போன்று தான் கவர்னர் அவர்கள் தனது உரையில், தலைவர் காமராஜர் அவர்களைப் பற்றி குறிப்பிட்டதினால் அவருக்கு வருகின்ற நன்மையோ, தீமையோ எதுவும் இல்லை. ஆனால் இதைப் பற்றி இந்த உரையில் ஏன் குறிப்பிட வேண்டும் என்பதைப்பற்றி நாம் ஆராய வேண்டும்.

திருவள்ளுவப் பெருந்தகை இயற்றிய திருக்குறளில், மூன்று பால்கள் உள்ளன என்பதை எல்லோரும் அறிவார்கள். பொருட்பால் என்பது அவற்றுள் ஒன்று. பொருட்பால் என்பது அரசியல் வழியாக நின்று ஆட்சி செலுத்தக்கூடிய கருத்துக்களை உட்கிடக்

18th January 1964] [திரு. தக்ஷிணமூர்த்தி கவுண்டர்]

கையாக கொண்டது. அந்தப் பொருட்பாலில் பல துணைத் தலைப்புக்கள் உள்ளன. அவற்றில் 'பெரியாரைத் துணைகோடல்' என்பதும் ஒரு தலைப்பு. (குறுக்கீடு). நான் பெரியார், பெரியார் என்று குறிப்பிடுவது தலைவர் காமராஜ் அவர்களைத்தான். இத் தலைப்பில் வள்ளுவர் பெருந்தகை கூறுகின்றார் . . .

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்

என்று. மூத்த அறிவுடைய—காமராஜர் போன்ற பெரியார்களுடைய தொடர்பை, ஆட்சி வலிய இழுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தக் குறளின் கருத்து. மேலும்,

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். பல லட்சக்கணக்கான மக்களுடைய வெறுப்பை சம்பாதிப்பதைவிட பத்து மடங்கு தீமையானது காமராஜ் போன்ற பெரியார்களுடைய தொடர்பை விடுதல் என்று 2,000 ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் கூறியிருக்கிறார். அந்த நிலையை ஆலோசித்துத்தான் அவரது தொடர்பை வேண்டி நம் தமிழக ஆட்சியானது காமராஜ் அவர்களைப்பற்றி இங்கு குறிப்பிட்டிருக்கிறது. இன்னும் கூட சொல்லலாம். துறவற இயல் பற்றி வள்ளுவப் பெருந்தகை சொல்லும்போது—செய்நன்றி உணர்தல் என்கிற தலைப்பில்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்—உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்கின்ற தத்துவத்தைத்தான் இந்த உரையிலுள்ள குறிப்பு உள்ளடக்கியிருக்கிறது. இந்த உரையில் காமராஜ் அவர்கள் செய்த காரியங்களுக்காக நன்றி சொல்லுகின்ற முறையில் அவர்களுடைய தியாக வாழ்வைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். தலைவர் காமராஜ் அவர்களுடைய சேவையைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் வருங்காலத்தில் இந்த தமிழக ஆட்சிக்கு, தமிழக மக்களுக்கு அவர்களுடைய தொடர்பு வேண்டும் என்கின்ற ஒரு நிலையைப்பற்றித்தான் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதல்லாமல் இதன் மூலமாக ஒரு பெரிய பெயரையும், புகழையும் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும் என்கின்ற எண்ணம் கிடையாது. அந்த ஒரு வகையில் நான் கூறிக்கொள்ள விரும்புவது, தமிழக மக்கள், குறிப்பாக இந்திய மக்கள் பெரும்பாலும் அவர்களுடைய தியாக வாழ்வைப்பற்றி கவனித்து மிகவும் உணர்ச்சியோடு இருக்கிறார்கள். அந்த நிலைமையில் தமிழக சர்க்கார் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் இதில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இப்போது இருக்கின்ற முதல் அமைச்சர் அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டு, காமராஜ் அவர்களைவிட திறமையுடையவர்கள் தான், ஆகவே

காமராஜ் அவர்களை மட்டும் பாராட்டுவதேன் என்று கூறுகின்ற வகையில்—தராசில் வைத்து பார்ப்பது போல் பேசினார்கள்—இந்த முடிச்சு போடக்கூடிய வேலை வேண்டாம் என்பது தான் என் அபிப்பிராயம் (சிரிப்பு).

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: நான் ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற திறமையை விட இப்போது உள்ள அமைச்சர்களுக்கு கூடுதலாக இருக்கின்றது என்று கூறவில்லை. இப்போது இருக்கின்ற அமைச்சர்களும் திறமை குறைந்தவர்கள் அல்ல என்பதைத்தான் சொன்னேனே தவிர நான் யாருக்கும் முடிச்சு போட முன் வரவில்லை.

திரு. தக்ஷிணமூர்த்தி கவுண்டர்: இவ்விதமாக இரண்டு பேர்களுக்கும் எடை போட்டு தராசில் வைத்து, இவர்களை கீழே கொண்டு வர வேண்டிய அவசியமில்லை. இந்த முடிச்சு போட வேண்டிய தேவையும் இல்லை. இதை விட இதற்கு முன்னால் இருந்த ஆங்கிலேயர்கள் போட்டிருந்த எத்தனையோ முடிச்சுகளை எல்லாம் இந்த இரண்டு பேர்களுமே அவிழ்த்திருக்கிறார்கள். (திரு. இராம. அரங்கண்ணல்: நீங்கள் போடாமல் இருந்தால் சரி . . .) நான் யாருக்கும் போடவில்லை. எனக்குத் தோன்றியதை சொல்லுகிறேன். சுவாமி விவேகானந்தா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வஞ்சகத்தால் பெரிய நல்ல காரியங்கள் எதையும் சாதிக்க இயலாது. உண்மை, அன்பு, நேர்மை இவைகளைக் கொண்டுதான் பெரிய நல்ல காரியங்களைச் சாதிக்க இயலும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் தமிழக சட்டமன்றம் நம்முடைய தமிழ்நாட்டு பண்புக்கும் வரலாற்றுக்கும் உகந்ததாக இருக்கும் வகையில் செயல் புரிவது தான் பெருமைக்கு உரியதாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களது உரையில், இமயமலை சரிவில் எல்லைப் பாதுகாப்பு பலமாக இருப்பதைப்பற்றி சொன்னார்கள். நாம் அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்பதை சொல்வதற்காகத்தான் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் . . . இதைப்பற்றியும் வள்ளுவர் பெருமான் . . .

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு"

தூங்காமை என்பதுதான் நாம் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதை இந்த சபைக்கு நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு மேலும் மொழி பற்றிய ஒரு மிகச் சிக்கலான பிரச்சினை ஒன்று இருக்கிறது. அதைப்பற்றி எனக்குச் சில கருத்துக்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றியும் இந்தச் சபையில் கூற ஆசைப்படுகிறேன். நேற்று பேசிய கனம் அங்கத்தினர் தர்மலிங்கம் அவர்கள் மறைமலையடிகள் பற்றி ஒரு குறிப்பை எடுத்துரைத்தார்கள். அதை நான் வரவேற்கிறேன் இருந்தாலும்,

18th January 1964] [திரு. தக்ஷிணமூர்த்தி கவுண்டர்]

மறைமலையடிகளுடைய பல உரை நடைகளை மிகவும் சின்ன வயதிலிருந்தே நான் படித்திருக்கிறேன். நான் முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் மும்மொழியில் பாண்டித்யம் பெற்றவர். ஆங்கிலம், வட மொழி என்று சொல்லக் கூடிய சம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய மூன்றிலும் ஐயம் திரிபு அற கற்றுணர்ந்த பெரியார். அவர் கருத்தைக் கூறும்போது, அவர் எந்த வகையில் ஆற்றல் படைத்திருந்தாரோ அந்த ஆற்றல் படைத்திருக்க வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கூறிக் கொள்கிறேன். மும்மொழிக் கொள்கை என்று கூறுகிறோம். அவர் மும்மொழி படித்திருந்தார். ஆங்கிலத்திலே நல்ல புலமை உடையவர். சம்ஸ்கிருதத்திலே அவருக்கு நிரம்பிய புலமை உண்டு. சாதாரணமாகவே ஆகமங்கள் தமிழில் அவரால் தான் நமக்கு வந்தது என்ற பெருமை இருக்கிறது. தமிழிலும் சிறந்ததொரு அறிவாளி. அந்த நிலையில் நம் தமிழகத்து வருங்கால இளைஞர்கள் பயன்படவேண்டும் என்று நம் சர்க்கார் மும்மொழிக் கொள்கையை வகுத்திருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சம்ஸ்கிருதம் ஆனாலும், இந்தி ஆனாலும், மும்மொழிக் கொள்கையில் தவறு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்பற்றி வரலாற்றிலே புகுந்தால் சட்ட சபையில் நேரம் இல்லை. வட மொழி என்று சொல்லப் படுகிற சம்ஸ்கிருதம் இங்கு வந்த காலத்தில் தமிழகத்திற்கு வட நாட்டுப் பண்பாட்டோடு, அந்தக் கலாச்சாரத்தோடு வந்தது. அப் போது கூட வட மொழியினாலே தமிழ் பண்பாட்டுக்கோ, தமிழ் மொழிக்கோ எந்தவித கெடுதலும் வந்ததாக வரலாற்றிலே காண இயலவில்லை. மாறாக, தமிழ் பண்பாடும், தமிழ் மொழியும் அதை நன்றாகச் சாப்பிட்டு, ஜரித்து, ஜீரணித்து, அதனால் நல்ல ரத்த ஓட்டமும் புஷ்டியும் பெற்றது. அதையடுத்து ஆங்கிலம் வந்தது. ஆங்கிலத்தோடு ஆங்கில நாகரீகம் இந்திய நாட்டுக்கு வந்தது, தமிழகத்துக்கு வந்தது. ஆங்கில மொழியால் தமிழ் மொழி கெட வில்லை. தமிழ் பண்பாடு கெடவில்லை. ஆங்கில கலாசாரமும், ஆங்கில மொழியின் வளப்பமும் தமிழிடத்தில் வந்தது. தமிழனுக்கும் வந்தது. "பொன் மலர் நாற்றமுடைத்து" என்று சொல்லுவார்கள். தமிழ் கலாசாரத்தில் ஆங்கில கலாசாரமும் சம்ஸ்கிருத கலாசாரமும் கலந்த பிறகு அந்த பொன்னால் செய்யப் பட்ட பூவிற்கு நறுமணம் வந்தது. அதே போலத்தான் இந்தி யினாலும் வரும் என்று நான் நினைக்கிறேன். அதற்கு மாறான கருத்து சிலருக்கு இருக்கலாம். இந்தியினால் தமிழ் மொழி கெடாது. என்றைக்குமே தமிழ் மொழியைக் கெடுக்க முடியாது. அது ஒரு தெய்வீக மொழி. என் தமிழ் மொழியை தமிழ் நாட்டில் உள்ளவர்களே கெடுத்தார்களே, கெடுக்க முடிந்ததா? பேசும்போது ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்து தானே பேசினேன். அதனால் தமிழ் கெட்டதா, அதனால் சிலப்பதிகாரம் கெட்டதா, திருக்குறள் கெட்டதா? தமிழ் நாட்டில் உள்ளவர் களது பழக்கம் 'வட்டவார்சிகை கொண்டு' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள்—அதாவது அவர்கள் உச்சிக் குடுமி வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இப்போது கிராப்

அல்லவோ வைத்திருக்கிறோம். ஆங்கில நாகரீகத்தினால் வந்தது இருக்கிறது. இதைப்பற்றி ஒன்றும் இல்லை. அதே போல தமிழ் மொழியில் கூட வேறு ஒரு மொழி சேர்ந்தால் அதனால் தமிழ் மொழிக்கு சிறப்பாக முடியுமே தவிர அதற்கு ஆபத்து வந்துவிடும் என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. இதைப்பற்றி ஒரு கிளர்ச்சி தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து என்பதைத் தங்கள் வாயிலாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. பி. வி. சீராமுலு:** கனம் துணைத் தலைவர் அவர்களே, ஜனவரித் திங்கள் 16-ம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில் கவர்னர் ஆற்றிய உரையின் பேரில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

அதைப்பற்றிப் பார்க்கும் காலத்தில், இந்த கவர்னர் உரையிலே முக்கிய அம்சங்கள் (1) விவசாயம், (2) மின்சாரம், (3) அரிசி கொள்முதல், (4) ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று இப்படி பலவாறாகப் பிரிக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள் வாயிலாக நாட்டுக்கு நல்லதொரு பயனைத் தரும்படியாக கவர்னர் உரையிலே கண்டிருக்கிறது.

ஆனால், நமது சேலம் மாவட்டத்தைப் பார்க்கும்போது, இந்த மாநிலத்திலேயே சேலம் மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். அதிலும் வட சேலம் என்று பார்க்குங்கால் வட சேலத்தில் எந்த விதமான இண்டஸ்ட்ரீஸோ அல்லது வேறு வித பொருளாதார நுணுக்கத்தோடுகூடிய எந்த வித அமைப்பும் இதில் குறிப்பிடப்படவில்லை. அப்படி சேலத்தைப் பற்றிப் பார்க்குங்கால் நெய்வேலி நிலக்கரியையும் சேலத்து இரும்பையும் பற்றி ஐந்தாண்டு ஐந்தாண்டுகளாக மூன்று ஐந்தாண்டுகள் கழிந்த பிறகும், திட்டம் எட்டிலேதான் இருக்கிறதே தவிர அதற்கென்று ஒரு திட்டம் இல்லை. அதற்கென்று ஒரு காலம் குறிப்பிட்டு, தேதி குறிப்பிட்டு எப்போது சேலத்து இரும்பு வரும் என்று சொல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. பிள்ளைகள் சொல்லுவார்கள் அதாவது தீபாவளியன்று பட்டாசு வெடித்தால் சவுண்ட் கேட்குமே தவிர பட்டாசு எரி பொருள்கூடக் கிடைக்காது. அதே போல கொள்ளுப்பட்டாசு என்று சிவகாசியில் தயாரிக்கப்பட்ட பட்டாசு வாங்கி வெடிப்பார்கள் பிள்ளைகள். அதைக் கொளுத்தினால், சட-சட-சட்-பட்-சட-சட-சட் என்று வெடித்துவிட்டு பட்டாசு ரூபம் அற்று இருக்கிற சூழ்நிலை ஏற்படும். அதேபோல இந்த நிலக்கரியை எடுத்து எந்த இடத்தில், எந்த முறையில் எப்போது செய்வார்கள் என்பதனைப் பார்குங்கால் இதிலே ஒன்றும் இல்லை. இன்னும் நிலக்கரியைப் பற்றிக் கேட்குங்கால் நார்வேக்கு அனுப்பி வைத்திருக்கிறோம், ஜப்பானுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம் என்று சக நண்பர் சொன்னது போல அதே நிலையில் தான் இருக்கிறதே தவிர, இந்த ஆண்டு இல்லையென்றாலும் இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவாவது செய்ய முடியுமா? அல்லது செய்யும்படியான சூழ்நிலை

18th January 1964] *[திரு. பி. வி. சீராமுலு]*

சேலத்தில் இருக்குமா? அல்லது சேலத்தில் இடம் இல்லை என்று தட்டிக் கழித்து வேறு இடத்தில் வைக்கக் கூடிய சூழ்நிலைக்குப் போகுமா? என்று உங்கள் மூலமாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயம். விவசாயத்தைப் பொறுத்த வரையில் சேலம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். கே. ஆர். பி. ஒன்றுதான் அங்கே இருக்கிறது. இந்த ஒன்றே ஒன்று தான் வட சேலத்தில் இருக்கிறது. இந்த கே.ஆர்.பி.-ஐ பற்றிச் சொல்லும்போது வேதனை அடைகிறேன். ஏனென்றால், அது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆக்கப்பட்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே முன்னாள் முதல் அமைச்சராக இருந்த கனம் காமராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இன்றைய வரையில் அது நல்ல முறையில் இருந்தாலுங்கூட ஐந்தாண்டுத் திட்டங்களில் ஆக்கப்படும் திட்டங்களை பற்றி பரிசிலனை செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசங்கத்திற்கு இல்லை. ஐந்தாண்டுத் திட்டங்களிலே வந்த திட்டங்களினால் என்ன வரும்படி, அரசாங்கம் என்ன தவறு செய்கின்றது என்று அரசாங்கத்தில் அதைப் பற்றி பரிசிலனை செய்து பார்க்கிறார்களா என்றால் இல்லை. உதாரணத் திற்கு கே.ஆர்.பி.-ஐப் பற்றிச் சொல்லுகிறேன். ஏனென்றால் கே.ஆர்.பி. 180 லட்சம் ரூபாய் செலவில் ஆக்கப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தில் 9,000 ஏக்கர் சாகுபடிக்கு வரும் என்று சொல்லி ஐந்தாண்டு காலம் ஆகியிருக்கிறதே தவிர தண்ணீர் இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக 52 அடி தண்ணீர் நிறுத்தி வைக்கவேண்டுமென்று திட்டமிட்டுக் கட்டப்பட்ட அந்த அணைத் தேக்கத்தில் 49½ அடிதான் நிறுத்தி வருகிறார்கள்; அதற்கு என்ன காரணம்? திட்டமிட்டபடி தண் ணீரை ஏன் நிறுத்தவில்லை? மேலே இருக்கக்கூடிய பல கிராமங்கள் தண்ணீரில் மூழ்கிவிடும் என்ற காரணத்தினால் தண்ணீர் நிறுத்தவில்லை. அதே நேரத்தில் கீழே இருக்கும் கிராமங்களில் 9,000 ஏக்கர் நிலத்தில் இரண்டு போகம் சாகுபடிக்குத் திட்ட மிட்டும் அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறதே அதற்கு என்ன செய்வது? ஒன்று மேலே உள்ள கிராமங்களுக்கு நன்மை பயக்கவேண்டும். அல்லது, கீழே உள்ள கிராமங்களுக்கு நன்மை பயக்க வேண்டும். இரண்டும் இல்லாத நிலையில் இன்றைக்கு கே.ஆர்.பி. திட்டம் இருக்கிறது.

கவர்னர் பெருமான் உரை ஆற்றிய தினத்தன்று சுமார் 1,000 விவசாய மக்களை கலெக்டர் அவர்களிடம் கூப்பிட்டுச் சென்றேன். ஆறு மாத காலத்திற்கு தண்ணீர் விடுவதாக கலெக்டர் அவர்கள் முன்பு கூறினார். ஆறு மாதத்தினுடைய தண்ணீர் எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தால், நான்கரை மாதத்திற்கு வேண்டிய அளவுக்கு தண்ணீர் விட்டு ஒரு போகம் அறுத்துவிட்டார்கள். வேண்டுமென்றால் நான்கரை மாதத்தில் தண்ணீரை நிறுத்திவிட்டி ருக்கலாம். ஆனால் ஆறு மாதங்களுக்கு தண்ணீர் விட்டதன் கார ணமாக அதிகமாக ஒன்னரை மாதத்திற்கு தண்ணீர் விட்டதன் 1-00 p.m.

[திரு. பி. வி. சீராமுலு] [18th January 1964

காரணமாக, 4,000 விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயம் செய்திருக்கிறார்கள் நிலங்களை கலக்கி விட்டிருக்கிறார்கள் என்று கலெக்டரிடம் முறையிடும்பொழுது, 'தண்ணீர் இல்லை; என்ஜினியரைக் கேட்டு நான் சொல்லுகிறேன், யோசிக்கலாம்' என்று சொல்லுகிறார்கள். அரிசி ஒரு பக்கத்தில் கொள்முதல் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஒரு பக்கத்தில் மில்காரர்களிடமிருந்து கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டம் இருக்கிறது. அகில இந்திய ரீதியிலே பார்த்தால் அரிசி நமக்குக் கிடைக்கவில்லை. அதற்காக நம் மாநிலத்தில் பல பகுதியிலே திட்டமிடவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் 4,000 ஏக்கரா சாகுபடிக்குத் தயாராக இருந்த மக்கள் கலெக்டரை அணுகிக் கேட்கும்பொழுது இது போல் சொன்னால் என்ன செய்வது? சென்ற ஆண்டு ஜூலைத் திங்களில் 42½ அடி தண்ணீர் இருந்தும்கூட, இந்த ஆண்டில் இதுவரையிலும் ஜனவரி 31-ம் தேதி வரையிலும் தண்ணீர் விட்டாலும்கூட, இன்னும் 48 அடி 2 அங்குலம் தண்ணீர் இருக்கிறது. 48 அடி 2 அங்குலம் தண்ணீரிலிருந்து அடுத்தபடியாக மூன்று மாதங்களுக்கு விடுவதுபோக, அடுத்த ஜூலை மாதத்திற்கு 52 நாட்களுக்கு தண்ணீர் இருக்கும் என்று என்ஜினியர் கணக்குச் சொல்லுகிறார்கள். ஆனால் கலெக்டர் அவர்கள் அதுபற்றி யோசனை செய்வதாகச் சொன்னால் விவசாய மக்கள் எதை நம்பி விவசாயம் செய்ய முடியும்? இதற்காக அரசாங்கம் சேலம் மாவட்டத்தில் இருக்கும் கே.ஆர்.பி. ரிஸர்வாயரின் போக்கை அனுசரித்து இன்னும் மூன்று மாதங்களுக்குத் தண்ணீர் விடுவார்களேயானால், மேற்கொண்டு 9,000 ஏக்கர் சாகுபடி செய்தால் ஒரு ஏக்கருக்கு 20 மூட்டை என்றால், ஒரு லட்சத்து எண்பதினாயிரம் மூட்டைகள் நெல் விளையக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. தண்ணீர் இல்லையென்றால் தண்ணீர் விடவேண்டாம். தண்ணீர் இருக்கிறது, இது போக 52 நாட்களுக்கு அடுத்த ஆண்டிற்கு தண்ணீர் இருக்கிறது. அப்படியிருந்தும்கூட அரசாங்கம் இதில் ஆவன செய்யவில்லை. ஆகவே, 31-ம் தேதிக்கு முன்பாக தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத்தைப்பற்றி பார்க்கும்பொழுது, இந்தியாவிலேயே முதன்மையான இடத்தை தமிழக சர்க்கார் வகிக்கிறது என்று கூறப்படுகிறது. ஆனால், தமிழக சர்க்கார் 10 நயா பைசா போட்டு யூனிட்டுக்கு 10 சதவிகிதம் வரி என்று வரி போட்டிருக்கிறார்கள். எந்தக் காரணத்திற்காக 10 சதவிகிதம் வரி? அதற்குமேல் 20 சதவிகிதம் சர்சார்ஜ் என்று போட்டிருக்கிறார்கள். 14,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் பறை சாற்றப்படுகிறது. சென்ற திங்களில் நான் டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கூட்டத்தில் கேட்கும்பொழுது சேலம் மாவட்டத்தில் 362 விவசாயக் கிராமங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். ஆனால் 142 கிராமங்களுக்குத்தான் மின்சாரம் வந்திருக்கிறது. மேற்கொண்டு கிராமங்களுக்கு மின்சாரம் வரவில்லை என்று அங்கு சொல்லுகிறார்கள். 14,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு, 362

18th January 1964] [திரு. பி. வி. சீராமுலு]

கிராமங்களுக்கு அனுமதி கொடுத்து, 142 கிராமங்களுக்கு மட்டும் மின்சாரம் கொடுத்துவிட்டால் மீதி கிராமங்களுக்கு என்றைக்கு எப்பொழுது எந்தத்திட்டதின் மூலம் மின்சாரம் கிடைக்கும் என்பதனை அரசாங்கம் கூறும்படி நான் கோருகிறேன்.

அரசாங்கம் அரிசி கொள்முதல் என்று சொல்லுகிறார்கள். ஆந்திர மாகாணத்தில் இருக்கும்படியான சூழ்நிலைக்கும், நம்முடைய மாகாணத்தில் இருக்கும்படியான சூழ்நிலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் தமிழக மில்லர்கள் அம்மாதிரி சூழ்நிலையில் இல்லை. ஆந்திர மாகாணத்தில் மில்லர்கள் "கோன்" ஸிஸ்டத்தில் அரிசி தயார் செய்கிறார்கள். ஒரு நாளைக்கு 800 மூட்டைகள் அறைக்கக்கூடிய மில்கள் அங்கே இருக்கின்றன. நமது சர்க்கார் மூலம் லைசென்ஸ் பெற்றுள்ள மில்களில் அம்மாதிரி மில்கள் ஒன்றுகூட இதுவரை நம் மாநிலத்தில் இல்லை. நம்பர் 1 ஹல்லர் என்றால், ஒரு மணிக்கு 20 மூட்டை அல்லது 15 மூட்டை அறைக்கக்கூடிய மில்லர்கள்தான் நம் மாநிலத்தில் இருக்கிறார்கள். அரசாங்கம் கொள்முதல் செய்வதில் யாரிடமிருந்து வாங்கவேண்டுமென்ற ஒரு வரையறுப்பு இல்லை. மில்லர்கள் விவசாயிகளிடத்திலிருந்து வாங்கி அவர்களிடத்திலிருந்து கொள்முதல் செய்யவேண்டுமென்று கேட்கிறார்களா? அல்லது விவசாயிகளிடத்திலிருந்து பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்களா? அல்லது வியாபாரிகள் மில்லுகளுக்கு அறைக்க வரும்பொழுது, வியாபாரிகளிடமிருந்து பெற்று கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்களா? என்பது பற்றிய வரையறை ஒன்றும் இதுவரையில் தெரியவில்லை. நான் எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், மில்லர்கள் கொடுக்கவேண்டுமா, அல்லது விவசாயிகள் கொடுக்கவேண்டுமா? அல்லது வியாபாரிகள் மில்லர்களிடத்தில் கொண்டு வரும்பொழுது, அதில் 15 சதவிகிதம் பிடித்து கொடுக்கவேண்டுமா என்பதுபற்றி வரையறை வேண்டும். இது யாரிடம், எப்படி எந்த முறைப்படி கொள்முதல் செய்யப்படும் என்பது திட்டவட்டமாக தெரிய வேண்டும்.

மில்களிலிருந்து கொடுக்கப்படும் அரிசியை (அனலைஸ்) செய்யச் சொல்லுகிறார்கள். சென்ற திங்களில்கூட நான் அரசாங்கத்திற்கு 300 மூட்டைகள் அரிசி கொடுத்தேன். அரசாங்கம் வாங்கிய விலைக்கே கொடுத்தும்கூட, (அனலைஸ்) செய்வதாகச் சொல்லி அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், ஒரு கிராம் இரண்டு கிராம் அரிசியை எடுத்து தனியாகப் பார்த்து, நொய் எவ்வளவு இருக்கிறது, குருணை எவ்வளவு இருக்கிறது என்று பார்த்து அதைக்கொண்டு திட்டவட்டமாக விலையில் இவ்வளவு ரூபாய் என்று பிடிக்கிறார்களே தவிர, உண்மையாகவே கலப்படம் இருக்கிறதா என்று கண்டுபிடித்து ரூபாயைப் பிடிப்பதில்லை. நொய்யே வராமல் எப்படிக் கொடுக்க முடியும்? ஜல்லடை வைத்து சலித்தால்கூட ஓரளவுக்கு நொய் இருக்கத்தான் செய்யும். ஆகவே நொய் இருக்கிறதா என்று அனலைஸ் செய்து பார்க்காமல், உண்மையிலேயே கலப்படம் இருந்தால் அதைக்கண்டுபிடிக்க அரசாங்க

அதிகாரிகள் முயலவேண்டும். அல்லது இதற்காக நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று அரசாங்க அதிகாரிகளே வந்து பார்த்துக் கூறினால், அதையும்கூட நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம் என்று கூறிக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்க கனம் அங்கத்தினர் பழனி அவர்கள் கொண்டு வந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அறிக்கையிலே முதியோர்களுக்கு கொடுக்கப்படுகிற பென்ஷனைப்பற்றி நல்ல முறையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு ஏற்பட்ட ஒன்றிரண்டு அனுபவத்தை வைத்து நான் சொல்லுகிறேன். இந்த மாகாணம் முழுவதும் முதியோர்களுக்கு நாம் பென்ஷன் கொடுக்கிறோம், ஆதரவற்ற ஏழை முதியோர்களுக்கு ரூ. 20 பென்ஷன் கொடுக்கிறோம் என்று நல்ல முறையில் விளம்பரம் செய்கிறோம். ஆனால் பெரும்பாலும் 100-க்கு 40, 50 பேர்கள்தான் இந்தச் சலுகையை அனுபவிக்க முடிகிறதே ஒழிய, எல்லோராலும் பயன் படுத்திக்கொள்ள முடியவில்லை. பல முதியோர்கள் அவர்கள் இருக்கிற ஊர்களிலிருந்து வேறு இடத்திற்கு வருவதற்குக்கூட போக்குவரத்து செலவுக்கு பணம் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்து போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகையினால் இந்தத் திட்டத்திற்கு இன்னும் அதிகப்படியான தொகையை ஒதுக்கி ஏழை, முதியோர்கள் எல்லோருக்கும் இந்தச் சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று நான் இந்தச் சபை முன்பு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்க ஊழியர்களாக பணியாற்றி வருகிறவர்கள் 30 ஆண்டுகளுக்கு அரசாங்கத்தில் பல் வேறு டிபார்ட்மெண்டுகளில் பணியாற்றிவிட்டு, ரிடையர் ஆனவுடன் அவர்களுக்கு பென்ஷன் தொகை கிடைப்பது ரூ. 1, 3, 5 என்ற அளவுக்குக்கூட இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லப் போனால், கோயம்புத்தூர் ஜில்லாவில், 2,500 பென்ஷனர்கள் இருக்கிறார்கள். அதில் 320 பேர்கள் ரூ. 5-க்குக் குறைவாக பென்ஷன் வாங்குபவர்கள். அவர்களுக்கும் இந்த முதியோர் பென்ஷன் திட்டத்தை அமல் நடத்தி, குறைந்த பட்சம் ரூ. 20 பென்ஷன் கொடுக்க வேண்டும், அரசாங்கம் இதைப் பரவலாக நடத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பென்ஷனர்களுடைய குழந்தைகளுக்கு, அவர்கள் அரசாங்க ஊழியர்களாக இருக்கும் வரையிலும், அவர்களுக்கு இலவசக் கல்விச் சலுகை நல்ல முறையில் கிடைத்து வருகிறது. ரிடையர் ஆனவுடன் அந்தச் சலுகை நீடிப்பதில்லை. அவர்கள்

18th January 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

ரிடையர் ஆனவுடன் அந்தக் குழந்தைகளுக்கு இலவசக் கல்விச் சலுகை தொடர்ந்து அளிப்பதுடன் மற்ற எல்லாவிதமான சலுகைகளையும் அவர்களுக்கு தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமல் நடத்துவதற்கு நம்முடைய உபமான்யத்தில் 5 கோடி ரூபாய் செலவு செய்வதாக கவர்னர் பெருமான் அறிவித்திருக்கிறார்கள். அது மிகவும் பாராட்டத்தக்கது. தொழிலாளர்கள் நலனைக் கருதி தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல், தொழிலாளர் குடும்பங்களுக்கும், அவர்களுடைய மனைவி மக்களுக்கும் இந்தத் திட்டத்தை தீவிரமாக அமுல் நடத்த வேண்டும். ஏனென்று கேட்டால் மாதம் ஒன்றுக்கு தொழிலாளர்கள் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளக்கூடிய தொகையினால் அவர்கள் அதிக நன்மை அடைவது கிடையாது. பல லட்ச ரூபாய் அரசாங்கத்திடம் தேங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகையினால் தொழிலாளர்கள் குடும்பத்திற்கும் இந்தத் திட்டத்தின் மூலம் நன்மை பயக்கச் செய்யவேண்டும் என்று நான் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப்பற்றிச் சொல்லும் பொழுது விவசாய மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கக்கூடிய என்னுடைய தொகுதியிலே பெரும் நஷ்டத்திற்கு ஆளான விவசாய மக்களைப்பற்றி என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. பருத்தி விளையக்கூடிய சில வட்டாரங்கள் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றன. அந்த வட்டாரங்களிலே ஒவ்வொரு ஆண்டும் எங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டம் என்னவென்றால், பருத்தியிலே புழு விழுந்துவிடுகிறது. இந்த ஆண்டு 100-க்கு 80 நஷ்டமாகக் கூடிய அளவுக்கு பருத்திப் பயிரிலே புழு விழுந்துவிட்டது. கோயம்புத்தூரில் உள்ள விவசாயக் கல்லூரியிலே ஆராய்ச்சிக் கென்று எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்கிறார்கள். இந்தப் புழுவைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் எந்த அளவுக்கு அவர்கள் உதவியாக இருந்தார்கள் என்று பார்த்தால் அந்தப் புழுவை எந்த முறையிலும் தடுக்க முடியவில்லை. 'நாங்கள் என்ன செய்ய முடியும், ஆராய்ச்சி செய்து வருகிறோம், காயின் உள்ளேயே புழு வருகிறது' என்று சொல்லுகிறார்கள். ஆகவே பருத்தி உற்பத்தி செய்கின்ற விவசாயிகளின் கதி என்ன ஆகிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நான் வந்திருக்கிற தொகுதியான பல்லடம் தாலுகா ஒரு பஞ்சப் பிரதேசம். ஒரு கிணறு வெட்ட வேண்டுமென்றால் சுமார் 120 அடி தோண்டவேண்டும். இப்படி கிணறு வெட்டவே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஏழை விவசாயிகளின் பிரதிநிதியாக நான் வந்திருப்பதினால், அவர்களுடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே அரசாங்கம் பெரிய குளங்களையும் சிறிய குளங்களையும் பராமரிப்பதற்கு தனியாகப் பணம் ஒதுக்கி இருக்கிறது. கடந்த ஏழு ஆண்டுக் காலமாக நமக்கு எத்தனை

பெரிய, சிறிய குளங்களை வெட்டினார்கள் என்று கணக்குப்பார்த்தால், இந்த குட்டைகளால் லாபமொன்றுமில்லை. எஸ்டிமேட்டுகள் நஷ்டத்தில் தான் ஓடுகின்றன. ஆகவே அப்ருவ்ட் லிஸ்டில் சேர்க்க முடியவில்லை என்று அங்கேயுள்ள எஞ்சினியர்கள் சொல்லுகிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால் அந்தப் பகுதியிலே வருஷத்தில் ஆறு மாதம்கூட குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல், மாடுகளுக்குக்கூடத் தண்ணீர் இல்லாமல், அங்கேயுள்ள விவசாயிகள், கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கும் போது, இந்த எஸ்டிமேட்டுகளினால் லாபம் ஏற்படவில்லையென்று எஞ்சினியர்கள் சொல்லுவது எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, எங்கள் பகுதியிலே சொல்லப்பட்டு வரும் ஒரு பழமொழி ஞாபகத்திற்கு வருகிறது.

(கனம் சபாநாயகர் தலைமை)

அந்தப் பழமொழி என்னவென்றால்,

"தன்னைப்பெற்ற தாய் அன்னப் பிச்சையெடுக்க மகள் தங்கச் சரம் போடச் சொல்லி தொங்கித் தொங்கி அழுகிறாள்" என்றபடி குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, மாட்டுக்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லக்கூடிய அந்தப் பஞ்சம், பட்டினி நிறைந்திருக்கிற அந்த இடத்திலே குளங்களை லாப-நஷ்டம் பார்த்தா வெட்டுவது என்று கேட்கிறேன். அங்கே சிறிய நீர்ப்பாசனமும் பெரிய நீர்ப் பாசனமும் கிடையாது. குளூர் பிர்க்காவை எடுத்துக் கொண்டால், பரம்பிக்குளம் திட்டத்திற்காக ரூபாய் 40 கோடி செலவு செய்தபோதிலும், அங்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கிடையாது. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், லாப-நஷ்டக் கணக்கைப் பார்க்காமல் பெரிய நீர்ப்பாசனமானாலும் சரி, சிறிய நீர்ப் பாசனமானாலும் சரி, பஞ்சப் பிரதேசத்திலே வாழக்கூடிய மக்களுக்கு தக்க வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளின் சார்பில் நான் இன்னொரு கருத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். விவசாயிகள் பால் சொசைடிகளுக்கு பால் சப்ளை செய்கிறார்கள். அந்த சொசைடிகள் வாங்கும் விலை என்னவென்றால் ஒரு லிட்டருக்கு 53 ந. பை. ஆனால், அதே பாலை நகரத்திலே கொண்டுவந்து விற்கும்பொழுது 80 ந. பை. கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு லிட்டர் பாலைப் பொறுத்த வரையில் 18 ந. பை. வித்தியாசம் இருக்கிறது. அந்தப் பணம் யாருக்குப் போய்ச் சேருகிறது என்றால், பால் சப்ளை செய்யும் ஏழை விவசாயிகளுக்குப் போய்ச் சேராமல் கூட்டுறவு பால் சப்ளை சொசைடி என்று பெயர் வைத்துக்கொண்டு விவசாயிகளின் ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டிருக்கும் சில நகர மக்களுக்கு நன்மை செய்கிற மாதிரி பாவனை காட்டும் குறிப்பிட்ட சிலருக்கு, இந்த லாபம் போய்ச்சேருகிறது. என்னுடைய தொகுதியிலே 100-க்கு 80 மக்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். இதைப்பற்றி ஏற்கனவே அமைச்சர் அவர்களிடம்

18th January 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். அதாவது ஒரு படிக்கு ஆறு முதல் பத்து ந. பை. வரை அவர்களுக்கு விலையை ஏற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவேயே இரண்டாண்டு காலமாகிவிட்டது. இந்த ஆண்டிலாவது இந்தப் பிரச்னையை தீர்க்கவேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொருளாதார வளர்ச்சிக்கு சிறிய கைத்தொழில்கள் வளர வேண்டும் என்று சொல்லியிருப்பதை பாராட்டுகிறோம். ஆறு டன் அளவுக்கு லிங் ஷீட் வேண்டுமென்று கேட்டால், அரை டன்தான் கிடைக்கிறது. கருப்பு மார்க்கெட்டில் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்க முடிகிறது. இப்படியிருந்தால் எப்படி சிறிய தொழில்கள் வளரமுடியும்? நம்முடைய தொழில் இலாகா டைரக்டர் ரூபாய் 50 ஆயிரம் வரை கடன் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கடன் கொடுப்பதால் அவர்கள் ஆடிட்டர் செக் பண்ணுகிற முறையிலே வரவுசெலவைக் காட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். பத்து டன் கேட்டு ½ டன் தான் கொடுக்கமுடியுமென்று சொன்னால் சிறு தொழில்கள் எப்படி வளர முடியுமென்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். போதிய அளவு இரும்புக் கம்பி கிடைக்கிறதா, ராடு கிடைக்கிறதா அல்லது நிலக்கரியாவது கிடைக்கிறதா என்று பார்த்தால், கல்கத்தாவிலே புக் பண்ணியாகிவிட்டது, ஆனால் ரயிலிலே அனுப்ப முடியாத நிலைமையிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதை எல்லாம் பார்க்கும்பொழுது என்ன முன்னேற்றம் ஏற்படும் என்றுதான் கேட்கவேண்டி இருக்கிறது. தொழில் இலாகா டைரக்டர் ஆபீசில் ரிஜிஸ்டர் செய்தவர்களுக்கும், விற்பனை வரி, வருமான வரி கட்டுகிறவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். மூலப் பொருள்களைத் தாராளமாகக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, மின்சார அபிவிருத்திக்காக ரூபாய் 13 கோடி ஒதுக்கியிருப்பதை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த இலாக்காவானது மின்னல் வேகத்திலே கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்து கொடுத்துக்கொண்டு வருகிறது. மினிமம் கியாரண்டியைக்கூட இப்பொழுது எடுத்துவிட்டார்கள். அதற்காக விவசாயிகளின் சார்பிலே நான் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளின் கஷ்டங்களைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு உதவிசெய்து வருகிறார்கள். உபயோகிக்காத விவசாயிகளின் பணம் பல லட்சக் கணக்கான ரூபாய் இருந்தது. படிப்படியாக பரிசீலனை செய்து அதையும் குறைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காகவும் என்னுடைய நன்றியறிதலை நான் மிகவும் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பரம்பிக்குளம் திட்டத்தின் மூலமாக சூளூர் பிர்காவிலுள்ள கிணறுகளுக்கு தண்ணீர் வரக்கூடிய அளவுக்கு நிலைமையை உண்டாக்கவேண்டும். மேலும் பருத்திச் செடிக்கு நோய் வாராமல் தடுப்பதற்குத் தீவிரமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று

[திருமதி சி. குழந்தையம்மாள்] [18th January 1964

கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு கேட்கப்பட்ட கேள்விக்கு விடையளிக்கும்பொழுது, நிலக்கடலைப் பயிரைப்போல் 100 ஏகர் 200 ஏகர் என்று தொடர்ந்தாற்போல் பயிர் செய்தால் ஏரோப்ளேன் மூலம் பூச்சிகொல்லி மருந்தை அடிக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு தண்ணீர் இருந்தால்தான் ஏராளமான ஏகரில் பருத்தி பயிரிட முடியும். ஆகவே தீவிரமாக ஆராய்ச்சி செய்து பார்த்து, பருத்திச் செடிக்கு நோய் விழாமல் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை யோசித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவாப்பொரேடிவ் சொஸைட்டிகள் மூலமாக அத்தியாவசியமான பொருள்களை விநியோகிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சொஸைட்டிகள் இல்லாவிட்டால், ரூ. 200 அல்லது 300 சம்பளம் வாங்குகிறவர்களுக்கு வாழ்வே இருக்காத அளவுக்கு பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகும். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டிய முறையிலே, இந்த கிராம சங்கங்கள் மூலமாக, அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு, எல்லாக் கிராமங்களுக்கும் பரவலான முறையிலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

IV.—DISCUSSION FOR SHORT DURATION *re* FIXATION OF FAIR PRICE FOR SUGARCANE.

MR. SPEAKER: We shall now take up the notice under rule 57 of the Assembly rules. I want to know from the hon. Member Sri M. Kalyanasundaram how much time he will take.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஏழு அல்லது பத்து நிமிஷங்களில் முடித்து விடுகிறேன்.

MR. SPEAKER: Then there will be no time for reply.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எவ்வளவு சிக்கிரத்தில் முடிக்க முடியுமோ அதற்குள் முடித்து விடுகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, கரும்புக்கு நம் ராஜ்யத்திலே நியாயமான விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதற்காக இந்த விவாதத்தை இங்கே நடத்த வேண்டும் என்று கூறுகிறேன். நம்முடைய ராஜ்யத்திலே நிறைய கரும்பு சாகுபடி செய்கிறார்கள். இன்றைக்கு காவேரிப்பிரதேசம் கரும்பு உற்பத்தி செய்யும் பிராந்தியமாக மாறி வருகிறது. நம் ராஜ்யத்தில் விளையும் கரும்பின் தரம் அதிகமானது. அதில் இருந்து உற்பத்தியாகும் சக்கரையும் அதிகம். ஆகவே சிறந்த கரும்பை உற்பத்தி செய்வதால்